விவேகானந்தரின் அறிவுரைகள்



விவேகானந்தரின் அறிவுரைகள்

சுவாமி விவேகானந்தரின் அரிய கருத்துக்கள்
அடங்கிய சிறந்த தொகுப்பு நூல்

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்
16, ராமகிருஷ்ண மடம் ரோடு,
மயிலாப்பூர், சென்னை - 600 004.

Published by
© The President
Sri RAMAKRISHNA MATH
Mylapore, Madras-4.

Second Edition
III-15m 3c-11-1985

Printed at :
SRI MURUGAN OFFSET PRINTERS.
MADRAS-600 005.

இரண்டாம் பதிப்பின் முகவுரை

இன்றைய இந்தியாவை உருவாக்குவதில் ஒரு மாபெரும் திருப்புமுனையாக அமைந்தவர் விவேகானந்தர். அவர் வீரமும் வேகமும் அன்பும் அறிவும் கலந்து உருவாகிய ஓர் அற்புத ஆற்றலாகத் திகழ்ந்தார்.

பண்டைய வேதகால ரிஷிகளின் ஆன்மிகப் பாரம் பரியத்தில் நின்று விவேகானந்தர், சமுதாயம் வளம் பெற்று விளங்க ஏராளமான கருத்துக்களை மக்களுக்கு எடுத்துச் சொன்னார். வாழ்க்கையில் நேரக்கூடிய பிரச்னைகளை ஆண்மையுடன் எதிர்த்து நிற்கும் வலிமை யைத் தருவதாக அமைந்த அவரது இடிமுழக்கம், புதிய இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு எல்லா விதத்திலும் ஒரு விடிவெள்ளியாக அமைந்தது.

தனிமனிதனின் முன்னேற்றத்திற்கும் நமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அவர் கூறிய ஆண்மை தரும் கருத்துக்கள் அன்றுபோல் இன்றும் பொருத்தமாக இருக்கின்றன.

விவேகானந்தர் தமது சொற்பொழிவுகளிலும் நூல் களிலும் தெரிவித்த சில கருத்துக்களைத் தனித்தனித் தலைப்புக்களின் கீழ்த் தொகுத்து அத்வைத ஆச்ரமத் தினர் Vivekananda—His call to the Nation என்ற பெயரில் ஒரு நூலை வெளியிட்டார்கள். ஆங்கிலத்தில் பல இலட்சம் பிரதிகள் விற்பனையான அந்த நூல் மக்க ளிடையே மகத்தான வரவேற்பைப் பெற்றது. அந்த நூலின் தமிழாக்கமாக சுவாமி கமலாத்மானந்தரால் மொழி பெயர்க்கப்பட்டு ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகையில் வெளிவந்தவை 'விவேகானந்தரின் அறிவுரைகள்' என்ற நூலாக வெளியிடப் பெறுகிறது.

இந்த நூலில் சுவாமி விவேகானந்தர் தெரிவிக்கும் கருத்துக்களை நினைவில் கொண்டு வாழ்க்கைக்கு ஊன்று கோலாகப் பயன்படுத்திக்கொள்ளும் எவரும் வாழ்க்கைப் பாதையில் தட்டித் தடுமாறும் நிலைக்கு ஒருபோதும் ஆளாக மாட்டார்கள் என்பது நிச்சயம்.

—பதிப்பாளர்

பொருளடக்கம்

1. நம்பிக்கையும் வலிமையும்

1. எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். பண்டைய மதங்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று குறிப்பிட்டன. புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்லுகிறது.

2. தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை, உள்ளே இருக்கும் தெய்விகத்தை வெளியே வரவழைக்கிறது. நீ எதையும் சாதிக்க முடியும். அளவு கடந்த ஆற்றலை வெளிப்படுத்தப் போதுமான அளவிற்கு உண்மையாக நீ முயற்சி செய்யாதபோதுதான் தோல்வி அடைகிறாய். ஒரு மனிதனோ, ஒரு நாடோ தன்னம்பிக்கை இழந்தவுடனேயே அழிவு வருகிறது.

3. நம்பிக்கை, நம்பிக்கை, நம்மிடத்தில் நம்பிக்கை; நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை— இதுவே மகிமை பெறுவதன் இரகசியமாகும். உங்கள் முப்பத்துமூன்று கோடிப் புராண தெய்வங்களிடத்தும், மேலும் அவ்வப்போது உங்களிடையே அன்னிய நாட்டவர் புகுத்தியிருக்கும் இதர தெய்வங்களிடத்தும் உங்களுக்கு நம்பிக்கை இருந்து, ஆனாலும் உங்களிடத்தே உமக்கு நம்பிக்கை இல்லாவிட்டால் உங்களுக்குக் கதி மோட்சமில்லை.

4. ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது, சமயத்திற்கு மிகப் பெரிய முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்பது ஒன்று உண்டு என்றால், அது 'நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள்' என்று சொல்வது ஒன்றுதான் பாவம்.

5. நீ எதை நினைக்கிறாயோ அதுவே நீ ஆகிறாய். நீ உன்னைப் பலவீனன் என்று நினைத்தால் பலவீனனாகவே நீ ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே நீ ஆகிவிடுவாய்

6. சுதந்திரமானவனுக இரு. எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே. நான் உறுதியாகச் சொல்வேன்—உனது கடந்த கால வாழ்க்கையை நீ பின்னேக்கித் திரும்பிப் பார்ப்பாயானுல், நீ வீணுக எப்போதும் மற்றவர்களிடமிருந்து உதவியைப் பெற முயற்சி செய்ததையும், அப்படி எதுவும் வராமற் போனதையும்தான் காண்பாய். வந்த உதவிகள் எல்லாம் உனக்குள்ளிருந்து வந்தவையாகத்தான் இருக்கும்.

7. ‘இல்லே’ என்று ஒருபோதும் சொல்லாதே. ‘என்னுல் இயலாது’ என்று ஒரு நாளும் சொல்லாதே. ஏனெனில் நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும்போது, காலமும் இடமும்கூட உனக்கு ஒரு பொருட்டல்ல. நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக்கூடியவன். சர்வ வல்லமை படைத்தவன் நீ.

8. நீங்கள் கடவுளின் குழந்தைகள். அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள். புனிதமும் பூரணத்துவமும் பெற்றவர்கள். மண்ணுலகின் தெய்வங்களே, நீங்களா பாவிகள்! அப்படி மனிதனே அழைப்பதுதான் பாவம். அது மனித இயல்பின்மீதே சுமத்தப்படும் பழிச்சொல்லாகும். ஓ சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அமரத்துவம் பெற்ற ஆன்மாக்கள், சுதந்திர ஆன்மாக்கள், அழியாத திருவருளேப் பெற்றவர்கள்.

9. போராட்டங்களேயும் தவறுகளேயும் பொருட்படுதாதே. பசு ஒன்று பொய் பேசியதாக நான் எந்தக் காலத்திலும் கேள்விப்பட்டதில்லே. ஆனுல் அது பசுவே தவிர ஒருபோதும் மனிதனுகிவிடாது. எனவே இந்தத் தோல்விகளேயும் இத்தகைய ஒழுக்கக் கேடுகளேயும் ஒருபோதும் பொருட்படுத்தாதே. ஓராயிரம் முறை நீ உனது இலட்சியத்தைக் கைக்கொள். ஆயிரம் முறை நீ தோல்வியுற்ருலும் மீண்டும் ஒரு முறை கைக்கொள்ள முயற்சி செய்.

10. பலவீனத்திற்கான பரிகாரம், ஓயாது பலவீனத்தைக் குறித்துச் சிந்திப்பதல்ல. மாருக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான். மக்களுக்கு, ஏற்கனவே

அவர்களுக்குள் இருந்து வரும் வலிமையைப்பற்றிப் போதிப்பாயாக.

11. உபநிஷதங்களிலிருந்து வெடிகுண்டைப் போலக் கிளம்பி, அறியாமைக் குவியல்களின் மீது வெடிகுண்டைப் போன்று வெடிக்கும் சொல் ஒன்றை நீ காண்பாயானல், அந்தச் சொல் **அஞ்சாமை** என்பதுதான்.

12. நீ கவனித்துப் பார்த்தால், உபநிஷதங்களைத் தவிர வேறு எதையும் ஒருபோதும் நான் மேற்கோளாக எடுத்துச் சொன்னதில்லை என்டது புலப்படும். மேலும், உபநிஷதங்களின் 'வலிமை' என்னும் அந்த ஒரே ஒரு கருத்தைத்தான் நான் எடுத்தாண்டிருக்கிறேன். வேத வேதாந்தங்களின் சாரமெல்லாம் அந்த ஒரு சொல்லிலே தான் அடங்கியிருக்கிறது.

13. எனது இளம் நண்பர்களே, வலிமை உடையவர்களாக இருங்கள். இதுவே நான் உங்களுக்கு வழங்கும் அறிவுரை. கீதை படிப்பதைவிடக் கால்பந்தின் மூலம் நீங்கள் சொர்க்கத்திற்கு அருகில் இருப்பீர்கள். இவை தைரியமான வார்த்தைகள். ஆனல், உங்களை நேசிக்கின்ற காரணத்தால் இவற்றை நான் சொல்ல வேண்டியவனுக இருக்கிறேன். செருப்பு எங்கே கடிக்கிறது என்பதை நான் அறிவேன். ஒரு சிறிது அனுபவமும் பெற்றிருக்கிறேன். உங்கள் தோள்கள், தசைகளின் சற்றுக் கூடுதலான வலிமையால், கீதையை இன்னமும் சற்றுத் தெளிவாகப் புரிந்துகொள்வீர்கள்.

14. ஒவ்வொரு மனிதன் முன்பும் இந்த ஒரு கேள்வியை நான் வைக்கிறேன்—நீ வலிமையுடையவனுக இருக்கிருயா? நீ வலிமையை உணர்கிருயா? ஏனென்றல் உண்மை ஒன்றுதான் வலிமை தருகிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். உலகத்தின் நோய்க்கு வலிமை ஒன்றுதான் சரியான மருந்து.

15. மிகப் பெரிய உண்மை இது—வலிமைதான் வாழ்வு; பலவீனமே மரணம். வலிமையே மகிழ்ச்சிகரமான வாழ்க்கை, நிரந்தரமான வளவாழ்வு, அமரத்துவம் ஆகும். பலவீனம் இடையருத சித்திரவதையாகவும் துன்பமாகவும் அமைகிறது. பலவீனம் மரணமேதான்!

16. வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடா முயற்சியையும் பெரும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடாமுயற்சி பெற்றவன், 'சமுத்திரத்தையே குடித்துவிடுவேன்', 'எனது சங்கல் பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாகவேண்டும்' என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை, அத்தகைய மன உறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை. உனது குறிக்கோளை நீ அடைவாய்.

17. மனிதர்கள், மனிதர்களே நமக்கு வேண்டும். மற்றவை அனைத்தும் தயாராக வந்து சேரும். ஆனால் வலிமை மிக்க, சுறுசுறுப்பான, சிரத்தை பொருந்திய இளைஞர்கள்; உண்மையில் பிடிப்புக் கொண்ட இளைஞர்களே தேவை. அத்தகைய ஒரு நூறு இளைஞர்களால் இந்த உலகமே புரட்சிகரமான மாறுதலைப் பெற்று விடும்.

18. இந்த நாட்டில் பேரிகைகள் செய்யப்படுவதில்லையா? தாரைகளும் தப்பட்டைப் பறைகளும் இந்தியாவில் கிடைக்காமலா போய்விட்டன? இத்தகைய கருவிகளின் பெருமுழக்கத்தை, நமது குழந்தைகளைக் கேட்கச் செய். பெண்களாக்கும் மென்மை மிக்க இசைகளைக் குழந்தைப் பருவம் முதலே கேட்டுக் கேட்டு, இந்த நாடே கிட்டத்தட்டப் பெண்கள் நிறைந்த சமுதாயமாக மாற்றப்பட்டிருக்கிறது.

19. அறியாமை மிக்க, உயிரற்ற புல்பூண்டு வாழ்க்கையைக்காட்டிலும் மரணமே மேலானது. தோல்வியைத் தழுவி உயிர்வாழ்வதைவிடப் போர்க் களத்தில் மாய்வதே மேல்.

20. வா, வந்து ஏதாயினும் வீரச் செயலைச் செய். சகோதரர்களே, நீங்கள் முக்தி அடையாமற் போனால் தான் என்ன? மேலும் ஒரு சில தடவை நரகத் துன்பத்தை நீங்கள் மேற்கொண்டால்தான் என்ன? 'சிந்தை, சொல், செயல்களால் நிறைந்த புனிதம் ததும்பும் சில ஞானிகள், முழு உலகையும் தங்கள் எண்ணற்ற பயன் மிக்க பணிகளால் மகிழ்விக்கிறார்கள். மற்றவர்களிடமுள்ள அணு அளவு குணநலனையும் அவர்கள் பெரும் மலை போன்று விரியச் செய்து தங்கள் இதயத்தை மலரச் செய்கிறார்கள்'—இந்த அறிவுரை பொய்த்துவிடுமா?

21. ஒவ்வொருவனும் தனது அதிகபட்ச ஆற்றலை மிச்சமீதமின்றிச் செலுத்தி உழைக்காவிட்டால், எதை யேனும் செய்து சாதிக்க முடியுமா? 'உழைப்பே வடி வெடுத்த, சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் நாடிச் செல்கிறாள்.' பின்னால் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை. முன்னேக்கிச் செல். அள வற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ் சாமை, அளவில்லாத பொறுமை—இவையே நமக்குத் தேவை. இவை இருந்தால் மட்டுமே, மகத்தான காரி யங்களை நம்மால் சாதிக்க முடியும்.

22. நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை, கத்தி முனையில் நடப்பதைப் போல மிகவும் கடினமானது தான். எனினும் எழுந்திரு, விழித்துக்கொள். மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது இலட்சிய மாகிய குறிக்கோளைக் கண்டுபிடி.

23. சகோதரா, நீ அழுவதேன்? மரணமோ நோயோ உனக்கில்லை. நீ அழுவதேன் சகோதரா? துன்பமோ துரதிர்ஷ்டமோ உனக்குக் கிடையாது. சகோதரா, நீ ஏன் அழ வேண்டும்? மாற்றமோ மரணமோ உனக்கு விதிக்கப்படவில்லை. நீ ஆனந்தமய மானவன். நீ உனது ஆன்மாவில் நிலைத்திரு.

24. மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட் டுமே. நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப் புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

'இவனை நம்பு அல்லது அவனை நம்பு' என்று மற் றவர் சொல்கிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன்——'முதலில் உன்னிடத்திலேயே நீ நம்பிக்கை வை.' அதுதான் வழி. உன்னிடத்தில் நீ நம்பிக்கை வை—எல்லா ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருக்கின்றன. அதை உணர்ந்து நீ அந்த ஆற்றலை வெளிப்படுத்து. 'நான் எதையும் சாதிக்க வல்லவன்' என்று சொல். நீ உறுதியுடன் விஷத்தைப் பொருட்படுத்தாதிருந்தால், பாம்பின் விஷம்கூடச் சக்தியற்றதாகிவிடும்.

25. ஒரு சமயம் நான் காசியில் இருந்தபோது ஒரு பாதை வழியாகச் சென்றுகொண்டிருந்தேன். அந்தப் பாதையின் ஒரு புறம் நீர் நிறைந்த ஒரு பெரிய

குளமும், மறு புறம் உயர்ந்த சுவரும் எழுப்பப்பட்டிருந்தன. அந்த இடத்தில் பல குரங்குகள் இருந்தன.

காசியைச் சேர்ந்த குரங்குகள் மிகவும் பொல்லாதவை. சில சமயங்களில் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளக் கூடியவை. அவை தங்கள் பாதையில் என்னைச் செல்ல விடக்கூடாது என்று நினைத்தன போலும்! எனவே நான் செல்லச் செல்ல அவை கிரீச்சிட்டுப் பெரும் சப்தமிட்டபடி என் கால்களைப் பற்றின. அவை நெருங்க நெருங்க நான் ஓட ஆரம்பித்தேன். ஆனால் நான் ஓட ஓட அவையும் பின்தொடர்ந்து ஓடிவந்து என்னைக் கடித்தன. அந்தக் குரங்குகளிடமிருந்து தப்பவே வழியில்லை என்று எனக்குப் பட்டது. ஆனால் அப்போது முன்பின் அறிமுகமில்லாத ஒருவரை வழியில் சந்தித்தேன். அவர் என்னை நோக்கி, 'குரங்குகளை எதிர்த்து நில்' என்று கூவினார். நான் திரும்பிக் குரங்குகளை எதிர்த்து நின்றேன். அவை பின்வாங்கி முடிவில் ஓடியே மறைந்தன. இதுவே வாழ்க்கை முழுவதற்கும் படிப்பினையாகும். பயங்கரத்தை எதிர்த்து நில். அஞ்சாமல் அதை எதிர்த்து நில்.

26. எழுந்து நின்று போராடு. ஓர் அடியும் பின்வாங்கக் கூடாது. கருத்து இதுதான்—எது வந்தாலும் போராடி முடி. தமது நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகமும் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும். மரணம் என்றால் வேறு உடை மாற்றுவதுதான். அதனால் என்ன போயிற்று? இப்படிப் போராடு. கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய். ஓர் அடி நீ பின்வாங்குவதனால் எந்த ஒரு துரதிர்ஷ்டத்தையும் தவிர்த்துவிட முடியாது. உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகிவிட்டது. துன்பம் அதனால் ஓய்ந்துவிட்டதா? நீ வெற்றி பெற்ற போது கடவுளர் உனக்கு உதவ முன்வந்தார்கள். அதனால் என்ன பயன்? போராடி முடி. நீ எல்லையற்றவன்; மரணமற்றவன்; பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு! விழித்துக்கொள்! எழுந்து நின்று போராடு!

2. மனதின் ஆற்றல்கள்

27. ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கைமயமாக்கு. அதையே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி. நாம் உண்மையிலேயே பாக்கியவான்களாக விரும்பினால்—மற்றவர்களையும் பாக்கியவான்களாக்க விரும்பினால்—நம்முள் நாம் மேலும் ஆழ்ந்து சென்றாக வேண்டும்.

28. உலகில் தோன்றிய மாபெரும் தீர்க்கதரிசிகளும் மகான்களும் ஞானிகளும் அனைவரும் என்ன செய்திருக்கிறார்கள்? அவர்கள் தங்களுடைய ஒரே ஆயுட்காலத்திலேயே மனித வர்க்கத்தின் முழு வாழ்க்கையையும் வாழ்ந்து, சாதாரண மக்கள் கூட்டம் பரிபூரண நிலையைப் பெற எடுத்துக்கொள்ளும் கால அளவு முழுவதையும் கடந்துவிடுகிறார்கள். ஒரே வாழ்க்கையில் அவர்கள் தங்களைப் பரிபூரணப்படுத்திக் கொண்டுவிடுகிறார்கள். வேறு எதைப் பற்றிய சிந்தனையும் அவர்களுக்கு இருப்பதில்லை. ஒருபோதும் வேறு எந்த விதமான கருத்துக்காகவும் ஒரு கணமும் அவர்கள் வாழவில்லை. இதனால் அவர்கள் அடைய வேண்டிய பாதை அவர்களுக்குக் குறுகியதாகி விடுகிறது, உள்ளத்தை ஒருமுகப்படுத்துவது என்பது இதுதான்—மனதின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி ஆழ்ந்து செல்வதனால், தேவையான காலத்தை இவ்விதம் நாம் சுருக்கிவிடலாம்.

29. ஒருமுகப்படுத்தும் இந்த ஆற்றல் வளர வளர, அதிக அளவில் அறிவைப் பெறலாம். ஏனென்றால், இந்த வழிதான் அறிவைப் பெறுவதற்கு உரிய ஒரே வழி. தாழ்ந்த நிலையில் உள்ள, செருப்புக்கு மெருகு போடுபவன், மனதை அதில் அதிகம் ஒருமுகப்படுத்திச் செய்தால், மேலும் சிறப்பாகச் செருப்புக்களுக்கு மெருகு பூசுவான். மனதை ஒருமுகப்படுத்திச் செய்யும் சமையற்காரன் மேலும் சிறந்த முறையில் உணவு சமைப்பான். பணம் சேர்ப்பதோ, கடவுள் வழிபாடோ அல்லது வேறு எந்த ஒரு வேலையானாலும் மனதை ஒருமுகப்படுத்தும்

ஆற்றல் வளர வளர, மேலும் சிறப்பாக அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கலாம். இந்த ஒரு குரல், ஒரே தட்டுதல், இயற்கையின் கதவுகளைத் திறந்து ஒளி வெள்ளங்களை வெளியே பாய்ந்தோடச் செய்கிறது.

30. உலகிலுள்ள அறிவு அனைத்தையும், மனதின் ஆற்றல்களை ஒருமுகப்படுத்துவதைத் தவிர, வேறு எந்த வகையால் மக்கள் பெற்றிருக்கிறார்கள்: மூடப்பட்டுள்ள கதவை எப்படித் தட்ட வேண்டும், எப்படித் தேவையானபடி தாக்க வேண்டும் என்பது மட்டும் நமக்குத் தெரிந்திருந்தால், உலகம் தனது இரகசியங்களை வெளியிடத் தயாராக இருக்கிறது. அத்தகைய வலிமையும், தாக்கும் வேகமும் மனதை ஒருமுகப்படுத்துவதன் மூலம்தான் கிட்டுகிறது. மனித உள்ளத்தின் ஆற்றலுக்கு ஓர் எல்லையே இல்லை.

31. மனது அதிகமாக ஒருமுகப்படப்பட அதன் ஆற்றல் அதிகமாக ஓர் இடத்தில் செலுத்தப்படுகிறது. இதுதான் மனதின் ஆற்றலைப் பற்றிய இரகசியமாகும்.

32. எந்த ஒரு சக்தியையும் புதிதாக உண்டாக்க முடியாது. ஏற்கனவே உள்ள சக்தியைத்தான் வேறு திசைக்கு நாம் திருப்பிவிட முடியும். எனவே, நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றல்களை அடக்கியாள நாம் கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றை மனதின் வலிமையைக் கொண்டு வெறும் மிருகசக்தியாக இருப்பதற்குப் பதிலாக, ஆன்மிகச் சக்தியாக இருக்கச் செய். பிரம்மசரியம்தான் எல்லா ஒழுக்கங்களுக்கும், எல்லா மதங்களுக்கும் அடித்தளமாக விளங்குகிறது என்பது இதனின்று தெளிவாகிறது.

33. சுதந்திரம் பெற்றவர்களாம்! நமது மனதை ஒருகணங்கூட அடக்கியாள முடியாத நாம், அவ்வளவு ஏன், ஒரு கருத்தின் மீது நமது மனதை உறுதியாக நிலைத்திருக்கச் செய்ய வகையறியாத நாம், மற்றச் சிந்தனைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒருமுனையில் (குறிப்பிட்ட ஒன்றின் மீது) ஒரு கணம் மனதை ஒருமுகப்படுத்தத் தெரியாதவர்கள் அல்லவா நாம்? அப்படி இருந்தும் நம்மை நாம் சுதந்திரமானவர்கள் என்று சொல்லிக்கொள்கிறோம்! இதை நினைத்துப் பாருங்கள்! ...அடக்கப்படாமல் சரியான வழியில் செலுத்தப்படாத மனம், நம்மை மேலும் மேலும் என்றென்றைக்குமாகக்

கீழே இழுத்துச் சென்று விடும்; நம்மைப் பிளந்து விடும்; அழித்துவிடும். ஆனால் அடக்கப்பட்டுச் சரியான வழியில் செலுத்தப்பட்ட மனமோ நம்மைக் காத்து இரட்சிக்கும்; நம்மை விடுதலைப் பெறச் செய்யும்.

34. மக்களுக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு, அவர்கள் தங்களுடைய மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலின் வேற்றுமையில்தான் அடங்கியிருக்கிறது. எந்தத் துறையைச் சேர்ந்த வேலையானாலும், வெற்றி அனைத்தும் இந்த மன ஒருமைப்பாட்டின் விளைவாகவே வருகின்றன. மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலில் மக்களுக்கு உள்ள வேற்றுமையே, ஒருவனுக்கும் மற்றொருவனுக்கும் உள்ள வேறுபாடாகவும் அமைகிறது. மிகத் தாழ்ந்த நிலையிலுள்ள மனிதனை, மிகவும் உயர்ந்த நிலையிலுள்ள மனிதன் ஒருவனோடு ஒப்பிட்டுப் பார். அவர்களிடையே உள்ள வேற்றுமை, மனதை ஒருமுகப்படுத்தும் திறமைக்கு ஏற்பவே அமைந்திருக்கும்.

35. சிந்தனையின் தொண்ணூறு சதவிகித ஆற்றல் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது. எனவே தொடர்ந்து அவன் பெரிய தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறான். சரியான பயிற்சியைப் பெற்ற மனிதனோ மனமோ ஒருபோதும் தவறு செய்வதில்லை.

36. அற்ப இதயமுடைய மனிதர்களிடமிருந்து எந்த உருப்படியான வேலையை நீ எதிர்பார்க்க முடியும்? இந்த உலகில் எதையும் அவர்களிடமிருந்து நீ எதிர்பார்க்க முடியாது! நீ கடலைக் கடக்க விரும்பினால் இரும்பைப் போன்ற மன உறுதி உன்னிடம் இருந்தாக வேண்டும். மலைகளைத் துளைத்துச் செல்வதற்குப் போதுமான வலிமை உனக்கு இருக்க வேண்டும்.

37. நல்ல எண்ணங்கள், தீய எண்ணங்கள் ஆகியவற்றில் ஒவ்வொன்றும் தனித்தனியே வலிமை மிக்க ஆற்றலைப் பெற்றிருக்கிறது. இந்தப் பிரபஞ்சம் முழுவதிலும் அவை நிறைந்திருக்கின்றன. அவற்றின் அதிர்வுகள் தொடர்ந்து இருந்து வருவதனால், அந்த எண்ணங்கள் செயலுக்கு வரும் வரையில் அவை கருத்து வடிவில் இருக்கின்றன. உதாரணமாக, மனிதனின் கையிலுள்ள ஆற்றல், அவன் ஓர் அடி அடிக்கும் வரையிலும், அவன் அந்த ஆற்றலுக்குச் செயல் வடிவு தரும் வரை

யிலும் மறைந்திருக்கிறது. நாம் நல்ல, தீய எண்ணங்களின் உரிமையாளர்களாக இருக்கிறோம். நாம் நம்மைத் தூய்மைப்படுத்தி நல்ல எண்ணங்களின் கருவிகளாக்கிக் கொண்டால், அவை நம்முள் நுழைகின்றன. நல்ல ஆன்மா தீய எண்ணங்களை எளிதில் ஏற்பதில்லை.

38. மனித சமுதாயத்தின் வரலாற்றில் தெய்வத்தின் தூதுவர்களாக ஆசாரியர்கள் தோன்றுவதையும், பிறந்தது முதல் அவர்கள் தங்களது வாழ்க்கை நோக்கத்தைக் கண்டறிந்து அதற்கு வடிவம் கொடுத்திருப்பதையும் நீ பார்க்கலாம். அவர்களின் வாழ்க்கை நோக்கம் முழுவதும் ஏற்கனவே முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலிருந்து இம்மியளவும் அவர்கள் பிறழாதிருப்பதை நீ காண்பாய். ஏனென்றால், ஒரு குறிக்கோளுடன், மக்களுக்குத் தருவதற்கான ஒரு செய்தியுடன் அவர்கள் வருகிறார்கள்... அவர்கள் பேசும் போது ஒவ்வொரு சொல்லும் நேரிடையாகத் தாக்குகிறது. அது ஒரு வெடிகுண்டைப் போல வெடிக்கிறது. சொல்லுக்குப் பின்னால் சக்தி இல்லாவிட்டால், அதில் என்ன பயன் இருக்கிறது?

நீ எந்த மொழியில் பேசினால் என்ன? உனது மொழியை நீ எப்படி அமைத்துக் கொண்டால் என்ன? அதை நீ சுத்தமான இலக்கணத்திலோ அல்லது அருமையான அடுக்கு மொழியிலோ பேசாவிட்டால்தான் என்ன? உனது மொழி அலங்காரம் உடையதாக இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? உன்னிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கிறதா இல்லையா என்பதுதான் கேள்வி. பேசுபவன் ஒன்றைக் கொடுப்பதும், கேட்பவன் அதைக் கிரகித்துக்கொள்வதும்தான் பிரச்னை. சும்மா வெறுமனே காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருப்பதல்ல. முதல் கேள்வி இதுதான்—உன்னிடம் கொடுப்பதற்கு ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் அதை மற்றவர்களுக்குக் கொடு.

39. நீ எதைச் செய்தாலும் அதன்பொருட்டு உனது மனம், இதயம், ஆன்மா முழுவதையும் அதற்கு அர்ப்பணித்துவிடு. ஒரு முறை சன்னியாசிப் பெரியார் ஒருவரை நான் சந்தித்தேன். அவர் தமது கடவுள் வழிபாட்டிற்கும் தியானத்திற்கும் எவ்வளவு ஊன்றிக் கவனமும் கருத்தும் செலுத்தினாரோ, அதே

அளவுக்கு ஊன்றிய கருத்தோடும் தமது பித்தளைச் சமையல் பாத்திரங்களையும் தேய்த்துப் பொன் போலப் பிரகாசம் உள்ளதாகச் செய்துகொள்வார்.

40. இப்போது நாம் வாழும் வாழ்க்கையில் தூய்மையை எப்படிப் பெறுவது? நாம் அனைவரும் காட்டிலுள்ள குகைகளுக்குப் போய்விடலாமா? அதனால் என்ன நன்மை வந்துவிடும்? மனம் கட்டுப்பட்டு அடங்காவிட்டால், குகையில் வாழ்வதனால் மட்டும் எந்த விதப் பயனும் கிடைக்காது. ஏனென்றால், இதே மனம் எல்லாத் தொந்தரவுகளையும் அங்கேயும் கொண்டு வந்து சேர்த்து விடும். குகையில்தான் இருபது பேய்களை நாம் பார்ப்போம். ஏனென்றால் எல்லாப் பேய்களும் நமது மனதிலேயே இருக்கின்றன. கட்டுப்பட்டு மனம் அடங்கியிருந்தால், நாம் எந்த இடத்தில் இருந்தாலும், எங்கே இருந்தாலும் அந்த இடம் குகையாக ஆகிவிடும்.

நமது சொந்த மனப்பான்மைதான் நமக்கு ஏற்றாற்போல உலகத்தைத் தோன்றும்படி செய்கிறது. நமது எண்ணங்களே பொருள்களை அழகு பொருந்தியவையாக்குகின்றன; நமது எண்ணங்களே பொருள்களை அவலட்சணமாக்குகின்றன. இந்த உலகம் முழுவதும் நமது சொந்த மனதிலேயே அடங்கியிருக்கிறது. எல்லாவற்றையும் சரியான முறையில் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்.

3. மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்

41. முகமது நபியோ புத்தரோ நல்லவராக வாழ்ந்தார் என்பதை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்? அது என்னுடைய நல்ல இயல்பையோ கெட்ட இயல்பையோ மாற்றி அமைக்கப்போகிறதா? நமது நன்மைக்காக, நமது விருப்பத்திற்காக நாம் நல்லவர்களாக இருப்போம்.

அந்தக் காலத்தில் யாரோ ஒருவர் நல்லவராக இருந்தார் என்பதற்காக நாம் நல்லவராக இருக்க வேண்டியதில்லை.

42. நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அப்படி நம்மை

அமைத்துக்கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது. நாம் இப்போது இருக்கும் நிலை நம்முடைய முன்வினைகளின் பலன் என்றால், எதிர்காலத்தில் நாம் எப்படி எல்லாம் இருக்க வேண்டுமென்று விரும்புகிறோமோ அதை நாம் நம்முடைய தற்போதைய செயல்களால் உண்டாக்கிக் கொள்ள முடியும் என்பது வெளிப்படை. எனவே எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

43. இந்த மனித உடல்தான் பிரபஞ்சத்திலேயே மிகச் சிறந்த உடலாகும். மனிதனே மேலான ஜீவன். எல்லா மிருகங்களைக்காட்டிலும், எல்லாத் தேவர்களைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவன். மனிதனைவிட உயர்ந்தவர் யாருமே இல்லை.

44. இயற்கையை மீறி மேலெழுவதற்குப் போராடிக்கொண்டிருக்கும் வரையில்தான் மனிதன் மனிதனாக இருக்கிறான். இந்த இயற்கையானது அகம் புறம் என்று இரண்டு வகைப்படும். பல வேறு நாடுகளின் வரலாற்றை ஆழ்ந்து படித்துப் பார்த்தால்—இயற்கையை வென்று தங்களை உயர்த்திக் கொள்ள முயற்சி செய்யும் மக்கள் அதிகரிக்கும்போதுதான் ஒரு நாட்டிற்கு எழுச்சி வருகிறது என்பதை எப்போதும் நாம் காணலாம். இலௌகிக லாபத்தில் மட்டும் கருத்துச் செலுத்துபவர்கள் (utilitarians), மெய்ப்பொருளை நாடும் இந்த முயற்சி பயனற்றது என்று எவ்வளவுதான் சொன்னாலும், அத்தகைய முயற்சி நின்றுவிடும்போது சமுதாயத்திற்கு அழிவு ஆரம்பித்து விடுகிறது. அதாவது, ஒவ்வொரு மனித இனத்தின் வலிமைக்கும் உயிர்நாடி அதன் ஆன்மிகப் பண்பில்தான் அடங்கியிருக்கிறது. என்றைக்கு ஆன்மிகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்தச் சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்துவிடுகிறது.

45. இந்த உலகம் மிகப் பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கிக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்.

46. நன்மை தரக்கூடிய எல்லாச் சமுதாய மாற்றங்களும், உள்ளே இருந்து இயங்கிக்கொண்டிருக்கும் ஆன்மிகச் சக்திகளின் வெளித் தோற்றங்களே ஆகும்.

இந்தச் சக்திகள் வலிமையுடையனவாகவும், சரிவரப் பொருத்தமாக அமையக்கூடியனவாகவும் இருந்தால், சமுதாயமும் தன்னை அதற்கு ஏற்றபடி அமைத்துக் கொள்ளும்.

ஒவ்வோர் மனிதனும் தன்னுடைய சொந்த முக்திக்காகத் தானே வேலை செய்தாக வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை. தனி மனிதனுக்குப் பொருந்தும் இந்த உண்மை நாடுகளுக்கும் பொருந்தும்.

......சமுதாயத்தில் இருந்து வரும் ஸ்தாபனங்களிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவது மிகவும் எளிது. ஏனென்றால், எல்லா நிறுவனங்களும் அதிக அளவிலோ குறைந்த அளவிலோ குறைபாடு உடையவையாகவே இருக்கின்றன. ஆனால் தனியொரு மனிதனுக்கு—அவன் எத்தகைய நிறுவனத்தின் ஆதிக்கத்தின் கீழ் உட்பட்டு வாழ்ந்தபோதிலும், அவன் தன் குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்கு யார் ஒருவர் உதவி செய்கிறாரோ அவரே மனித சமுதாயத்திற்கு உண்மையான நன்மை செய்பவராவார்.

தனி மனிதர்களின் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்.

47. உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மிகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

48. மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக்கொண்டு, அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள்.

விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக்கொள்கிறோம். எனவே, அதன்பொருட்டுத் தூற்றுவதற்கும் ஒருவருமில்லை; பாராட்டுவதற்கும் ஒருவருமில்லை.

காற்று வீசியபடி இருக்கிறது. பாய்மரங்களை விரித்துக் காற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளும் கப்பல்கள், தங்கள் வழியே முன்னேறிச் செல்கின்றன. ஆனால் பாய்களைச் சுருட்டி வைத்துள்ள கப்பல்கள் காற்றை ஏற்றுப் பயன் பெறுவதில்லை. இது காற்றினுடைய குற்றமாகுமா?

49. 'நான் அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்தத் துன்பம், என்னுடைய சொந்தச் செயல்களாலேயே உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு நிலையே, என் ஒருவனால் மட்டுமே அது நீக்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகிறது' என்று சொல். நான் எதைப் படைத்தேனோ அதை என்னால் அழிக்கவும் முடியும். பிறரால் படைக்கப்பட்ட ஒன்றை ஒருபோதும் என்னால் அழிக்க முடியாது. எனவே, எழுந்து நில். தைரியமாக இரு. வலிமையுடன் இரு. பொறுப்பு முழுவதையும் உன் தோள்மீதே சுமந்துகொள். உனது விதியைப் படைப்பவன் நீயே என்பதைப் புரிந்துகொள். உனக்குத் தேவையான எல்லா வலிமையும் உதவியும் உனக்குள்ளேயே குடிகொண்டிருக்கின்றன.

50. உனது எதிர்காலத்தை நீயே உருவாக்கு. ஏற்கனவே நடந்து முடிந்ததைக் குறித்து வருந்தாதே. எல்லையற்ற எதிர்காலம் உன் முன்னால் விரிந்து பரந்திருக்கிறது. உன்னுடைய ஒவ்வொரு சொல்லும் சிந்தனையும் செயலும், அதற்கு ஏற்ற பலனைத் தரும் வகையில் உன் மனதில் இடம் பெறும் என்பதை எப்போதும் நீ நினைவில் வைக்க வேண்டும். உனது தீய எண்ணங்களும் செயல்களும் புலிகளைப் போல் உன் மீது பாய்வதற்குத் தயாராக இருக்கின்றன. அதைப் போலவே உனது நல்ல எண்ணங்களும் செயல்களும், ஒரு நூறாயிரம் தேவதைகளின் ஆற்றலுடன் உன்னை எப்போதும் நிரந்தரமாகப் பாதுகாப்பதற்குத் தயாராக இருக்கின்றன என்னும் ஊக்கம் தரும் நம்பிக்கையும் இருக்கிறது. இதை நீ எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

51. 'ஏன்? எதற்கு?' என்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடுவது நமது வேலையன்று. மாறாக, செயலில் ஈடுபட்டுச் செத்து மடிவது ஒன்றுதான் நமது கடன். மகத்தான காரியங்களைச் செய்வதற்காக ஆண்டவன்

நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறுன் என்றும், அவற்றை நாம் செய்து முடிப்போம் என்றும் உறுதியாக நம்பு.

52. துரதிர்ஷ்டவசமாக இந்த வாழ்க்கையில் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் எந்த விதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல், இருளடைந்த இந்த வாழ்க்கையில் தட்டித் தடுமாறிச் சென்றுகொண்டிருக்கிறுர்கள். உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதிஞயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் இலட்சியத்தைக் கொண்டிருப்பது மேலானது.

53. மனிதன் இயற்கையை எதிர்த்துப் போராட ஆரம்பிக்கிறுன். அதில் அவன் பல தவறுகளைச் செய்கிறுன். அதனுல் துன்பப்படுகிறுன். ஆனுல் இறுதியில் அவன் இயற்கையை வென்று தனது சுதந்திரத்தைப் பெறுகிறுன். அவன் சுதந்திரத்தை அடைந்தவுடனே இயற்கை அவனுக்கு அடிமையாகிவிடுகிறது.

54. 'இயற்கையின் விதிகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதுதான் சுதந்திரம்' என்ற கருத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். அந்தக் கருத்தின் பொருள் என்ன என்று எனக்குப் புரியவில்லை. மனித வளர்ச்சியின் வரலாற்றின்படி, இயற்கைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதுதான் மனித சமுதாயத்தின் வளர்ச்சியாகும். அதுதான் மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஆக்கியமைத்திருக்கிறது.

55. நமது வாழ்க்கை சிறந்ததாகவும் தூய்மையுடையதாகவும் இருந்தால் மட்டும்தான், உலகமும் சிறப்பும் தூய்மையும் பெற்றதாக இருக்க முடியும். அது காரியம்; நாம் அதை விளைவிக்கும் காரணம். எனவே நம்மை நாம் தூய்மைப்படுத்திக்கொள்வோமாக. நம்மை நாம் பரிபூரணர்களாக்கிக் கொள்வோமாக.

56. சண்டையிடுவதிலும் குறை சொல்லிக் கொண்டிருப்பதிலும் என்ன பயன் இருக்கிறது? நிலைமையைச் சீர்படுத்தி அமைக்க அவை நமக்கு உதவப் போவதில்லை.

தான் செய்ய வேண்டிய கடமையாக அமையும் சிறிய அற்பமான வேலைகளுக்கு முணுமுணுப்பவன் எல்லாவற்றுக்கும் முணுமுணுக்கவே செய்வான். எப்போதும் முணுமுணுத்தபடியே அவன் துன்பம் பொருந்திய வாழ்க்கை வாழ்வான். அவன் தொடுவது எல்லாமே தோல்வியில் முடியும். ஆனால் தன் கடமைகளைத் தவறாமல் ஒழுங்காகச் செய்துகொண்டு, தன்னால் ஆனவரை வாழ்க்கையில் முயன்றுகொண்டிருப்பவன் கட்டாயம் ஒளியைக் காண்பான். மேலும் மேலும் உயர்ந்த கடமைகள் அவனது பங்காக அவனைத் தேடித் தாமாக வந்து சேரும்.

57. உலக இயந்திரத்தின் சக்கரங்களிலிருந்து தப்பி ஓடாதே. மாறாக, அதன் உள்ளேயே நின்றுகொண்டு, கர்மயோகத்தின் இரகசியத்தைக் கற்றுக் கொள். இயந்திரத்தின் உள்ளே இருந்து சரியானபடி வேலை செய்வதன் மூலமும் அதிலிருந்து வெளியே வந்துவிடுவது சாத்தியமே.

58. நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், நாம் செய்யும் ஒவ்வொரு காரியமும், குறிப்பிட்ட ஒரு காலத்திற்குப் பிறகு சூட்சுமத் தன்மையை அடைகிறது. பின்பு அது வித்து வடிவத்தைப் பெற்று மறைந்திருக்கும் நிலையில் நமது சூட்சும சரீரத்தில் வாழ்கிறது. மீண்டும் சிறிது காலத்திற்குப் பிறகு அது வெளிப்பட்டு வந்து தனக்கு உரிய பலன்களைத் தருகிறது. இந்தப் பலன்களே மனிதனுடைய வாழ்க்கையை நிர்ணயிக்கின்றன. இவ்விதம் மனிதன் தனது வாழ்க்கையைத் தானே உருவாக்கிக்கொள்கிறான். தனக்குத் தானே அமைத்துக்கொள்ளும் விதிகளைத் தவிர, வேறு எதற்கும் மனிதன் கட்டுப்பட்டவன் அல்ல.

59. என்னுடைய இலட்சியத்தை, உண்மையில் ஒரு சில சொற்களில் சொல்லி முடித்துவிடலாம். அதாவது, மக்களுக்கு அவர்களுடைய தெய்விகத் தன்மையை எடுத்துப் போதிப்பதும், வாழ்க்கையின் ஒவ்வோர் இயக்கத்திலும் அதை எப்படி வெளிப்படுத்திக் காட்டுவது என்பதை எடுத்துச் சொல்வதும்தான் அது.

60. தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.

அத்துடன் இவை அனைத்திற்கும் மேலாக **அன்பு** இருந்தாக வேண்டும்.

61. எப்போதும் விரிந்து மலர்ந்துகொண்டே இருப்பதுதான் வாழ்க்கையாகும். சுருங்கிவிடுவது மரணம்தான். தன்னுடைய சொந்த சுக வசதிகளை மட்டும் கவனித்துக்கொண்டு, சோம்பல் வாழ்க்கை வாழும் சுயநலக்காரனுக்கு நரகத்திலுங்கூட இடம் கிடைக்காது.

62. தனக்கு ஆண்டவன் கொடுத்துள்ள அறிவாற்றலைப் பயன்படுத்தாமல், கண்மூடித்தனமாக நம்புகிறவனை மன்னிப்பதைவிட, தன்னுடைய பகுத்தறிவை முறையாகப் பயன்படுத்தி நம்பாமலிருக்கும் ஒருவனைக் கடவுள் மன்னித்துவிடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நாம் பகுத்தறிவைப் பயன்படுத்தி ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலுமுள்ள புராதன நூல்களில் கூறப்பட்டிருக்கிற தீர்க்கதரிசிகள், பெரியோர்கள் ஆகியவர்களைக் குறித்த உண்மைகளை நமது பகுத்தறிவானது உண்மை என்று ஏற்றுக்கொள்ளும் போது, அவர்களிடம் நாம் நம்பிக்கை வைக்கலாம். அதன் பின்பு அத்தகைய தீர்க்கதரிசிகளை நாம் நம்மிடையே பார்க்கும்போது அவர்களிடம் நம்பிக்கை வைப்போம். குறிப்பிட்ட ஒரு சில கொள்கைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகத்தான் அவர்கள் விளங்குகிறார்களே தவிர, அவர்கள் விநோதமான மனிதர்கள் அல்லர் என்பதை அப்போது நாம் புரிந்துகொள்வோம்.

63. உன்னுடைய குறிக்கோளை அடைவதற்கு நீ ஏன் முயற்சி செய்யக்கூடாது? தோல்வியின் மூலம் மேலும் நாம் புத்திசாலிகளாகிறோம். காலம் எல்லையற்றது. இதோ இந்தச் சுவரைப் பார். இந்தச் சுவர் எப்போதாயினும் பொய் பேசியிருக்கிறதா? ஆனாலும் அது எப்போதும் ஒரு சுவராகத்தான் இருந்துகொண்டிருக்கிறது.

மனிதன் பொய் பேசுகிறான்—ஆனால் அவனே பிறகு ஒரு தெய்வமாகவும் ஆகிவிடுகிறான். ஏதாயினும் ஒன்றைச் செய்துகொண்டிருப்பது மேல். அது தவறாகவே இருந்தாலும்கூட அதை நீ பொருட்படுத்த வேண்டிய

தில்லை. ஒன்றுமே செய்யாமலிருப்பதைவிட அது எவ்வளவோ மேலானது. பசு ஒருபோதும் பொய் சொல்வதில்லை. ஆயினும் காலமெல்லாம் அது ஒரு பசுவாசத்தான் இருக்கிறது. ஏதாவது ஒன்றைச் செய்!

64. தொடர்ந்து புனிதமான எண்ணங்களையே சிந்தித்தபடி நன்மையைச் செய்து கொண்டிரு. தீய சம்ஸ்காரங்களைத் தலைகாட்டாதபடி அழுத்தி வைப்பதற்கு அது ஒன்றே ஒன்றுதான் வழி.

எப்போதும் எந்த மனிதனையும் உருப்படாதவன் என்று சொல்லாதே. ஏனென்றால், அவன் ஒருவிதப் பழக்க வழக்கங்களின் தொகுப்பாக, குறிப்பிட்ட ஓர் ஒழுக்கத்தின் அடையாளமாக மட்டும்தான் விளங்குகிறான். அவனிடமுள்ள பழைய குணங்களை மேலும் சிறந்த புதிய பழக்க வழக்கங்களால் தடுத்துவிட முடியும்.

ஒழுக்கம் என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் பழக்கங்களால்தான் உருவாகிறது. எனவே, மேலும் மேலும் மேற்கொள்ளும் பழக்கங்களால்தான் ஒழுக்கத்தை மேலும் சிறந்ததாகச் சீர்படுத்தி அமைக்க முடியும்... பிரம்மசரியம் அனுஷ்டிப்பவனுடைய மூளைக்கு அபாரமான ஆற்றலும் அதீதமான மனவலிமையும் உண்டு.

65. இடையறாத பயிற்சியின் மூலம் கஷ்டங்களை நாம் வெல்ல முடியும். எளிதில் பாதிக்கப்படும் வகையில் நம்மை நாமே விட்டு வைத்தாலன்றி, நமக்கு எதுவும் நேர்ந்துவிட முடியாது என்பதை நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

66. நான் ஒரு சமயம் இமயமலைப் பகுதியில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். நெடுஞ்சாலை ஒன்று எங்கள் முன்பு நீண்டு இருந்தது. ஏழைத் துறவிகளாகிய எங்களைத் தூக்கிச் செல்வதற்கு ஆள் வைப்பது எங்களுக்கு இயலாத காரியம்.

எனவே, வழி முழுவதும் நாங்கள் நடந்தே செல்ல வேண்டியிருந்தது. எங்கள் கூட்டத்தில் வயோதிகரான கிழவர் ஒருவர் இருந்தார். அவர், ''ஐயோ, இதை எப்படிக் கடந்து செல்வது? இதற்கு மேல் ஒரு அடியும் என்னால் நடக்க முடியாது! என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறது'' என்று சொன்னார்.

''கீழே குனிந்து உங்கள் கால்களைப் பாருங்கள்'' என்று நான் சொன்னேன். அவரும் அவ்விதமே நான் சொன்னபடி செய்தார். பிறகு அவரிடம் நான், ''இப்போது உங்கள் கால்களின் கீழே உள்ள இந்தப் பாதை, ஏற்கனவே நீங்கள் கடந்து வந்த சாலையாகும். மேலும் அதே சாலையைத்தான் நீங்கள் உங்கள் முன்னால் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்...விரைவில் அதுவும் உங்கள் கால்களின் கீழ் வந்துவிடப் போகிறது'' என்று கூறினேன்.

மிக உயர்ந்த பொருள்களெல்லாம் உங்கள் காலடியின் கீழ் இருக்கின்றன. ஏனென்றால், உண்மையில் நீங்கள் தெய்விக நட்சத்திரங்களாக இருந்துகொண்டிருக்கிறீர்கள்.

67. கோழைகளும் முட்டாள்களும் 'இதுதான் விதி' என்று சொல்வார்கள் என்பதாகச் சம்ஸ்கிருதப் பழமொழி ஒன்று சொல்லுகிறது. ஆனால் வலிமையுடைய மனிதனே எழுந்து நின்று, 'என்னுடைய தலைவிதியை நானே அமைத்துக் கொள்வேன்' என்று சொல்லுகிறான். வயதாகி மூப்பு நிலையை அடைந்துகொண்டிருப்பவர்தாம் விதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். இளைஞர்கள் பொதுவாக ஜோதிடத்தின் பக்கம் வருவதில்லை.

68. ஒருவனுடைய இயல்பு எப்படிப்பட்டது என்பதை உண்மையில் நீ தீர்மானிக்க விரும்பினால், அவன் செய்யும் பெரிய காரியங்களைக் கவனிக்காதே.

ஒவ்வொரு முட்டாளும் ஒரு சமயம் இல்லாவிட்டால் மற்றொரு சமயம் வீரனாகிவிடுவான். ஒரு மனிதனை அவன் செய்யும் மிகச் சாதாரணமான காரியங்களின் போது நீ கவனித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் இத்தகைய சாதாரணச் செயல்கள்தாம், பெரிய மனிதன் ஒருவனுடைய உண்மையான இயல்பை உனக்குத் தெரிவிப்பனவாக இருக்கும். வாய்ப்புகள் மிகப் பெருமளவில் கிடைக்கும்போது, மிகத் தாழ்ந்த மனிதன்கூட ஏதோ ஒரு வகையான உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டுவிடுகிறான். ஆனால் எங்கு இருந்தாலும், யாருடைய இயல்பு எப்போதும் ஒரே மாதிரியான பெருந்தன்மை உடையதாக இருக்கிறதோ அவன்தான் உண்மையில் மிகப் பெரிய மனிதனாவான்.

69. பிரதிபலன் எதையும் சிந்திக்காமல், நாம் உலகிற்குச் செலுத்தும் ஒவ்வோர் நல்லெண்ணமும் நமக்குள் சேகரித்து வைக்கப்படுகிறது. அத்தகைய நல்ல எண்ணம் நமது கர்மச் சங்கிலியை இணைக்கும் கண்ணி ஒன்றை உடைத்தெறிகிறது. மக்களுள் மிகவும் தூயவர்களாகும்வரை மேலும் மேலும் அது நம்மைத் தூய்மைப்படுத்திக்கொண்டே இருக்கிறது.

70. பகை, பொருமை ஆகியவற்றை நீ வெளியிட்டால், அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும். வேறு எந்தச் சக்தியாலும் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. ஒரு முறை நீ அவற்றை இயங்கச் செய்துவிட்டால் அதனுல் வரும் விளைவையும் நீ ஏற்றே ஆகவேண்டும். இதை நீ நினைவில் வைத்துக்கொண்டால், தீய செயல்களைச் செய்வதிலிருந்து அது உன்னைத் தடுத்து நிறுத்தும்.

71. இயற்கையை எதிர்த்துப் போராடும் எல்லாவற்றிலும் உயிர் உணர்ச்சி இருக்கிறது. இத்தகைய எதிர்ப்பு உள்ள இடத்தில் உயிர் வாழ்வதற்கான அறிகுறி வெளியாகிறது. ஒரு சிற்றெறும்பைக் கொல்வதற்கு நீ முயற்சி செய்தால், அதுகூடத் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உடனே எதிர்த்து நிற்கும். எங்கே போராட்டம் இருக்கிறதோ, எங்கு எதிர்ப்பு இருக்கிறதோ, அங்கு உயிர் இருப்பதற்கு உரிய அடையாளம் இருக்கிறது. உயிர் வாழ்வதற்கான உணர்ச்சி அங்கு வெளிப்படுகிறது.

72. மனிதன்தானே பணத்தை உண்டுபண்ணுகிருன்? பணம் மனிதனை உண்டுபண்ணியதாக எங்கேயாவது எப்போதாவது நீ கேள்விப்பட்டிருக்கிருயா? நீ உன்னுடைய எண்ணங்களையும் சொற்களையும் முற்றிலும் ஒன்ருக இருக்கும்படி செய்தால், அதைச் செய்ய உன்ஞல் இயலுமானுல், பணம் தண்ணீரைப் போலத் தாஞக உனது காலடியில் வந்து கொட்டும்.

73. இந்தப் பிரபஞ்சத்திலேயே நன்மைக்கு அழைத்துச் செல்லும் பாதைதான் மிகவும் கரடுமுரடாகவும் செங்குத்தானதாகவும் இருக்கிறது. அந்தப் பாதையில் இத்தனை பேர் வெற்றி பெற்றிருக்கிருர்களே என்பது தான் வியப்புக்கு உரிய விஷயம். பல பேர் தோல்வி அடைந்து விழுந்து போனதில் ஆச்சரியமே இல்லை.

ஆயிரம் முறை இடறி விழுவதன் மூலம்தான் நல்ல ஒழுக்கத்தை உறுதியாக நிலைநிறுத்த வேண்டும்.

74. ஒவ்வொரு பணியும் மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். ஏளனம், எதிர்ப்பு, பிறகு கடைசியில் ஏற்றுக்கொள்ளப்படுதல். தனது காலத்தை விட்டு முற்போக்காகச் சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனும் நிச்சயம் தவறாகவே புரிந்துகொள்ளப்படுவான். எனவே எதிர்ப்பும் அடக்குமுறையும் வரவேற்கத் தக்கவையே.

ஆனால் நான் மட்டும் உறுதியாகவும், தூய்மையாகவும், கடவுளிடம் அளவு கடந்த நம்பிக்கை உடையவனாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் இந்த இடைஞ்சல்கள் எல்லாம் மறைந்து போய்விடும்.

75. ஒவ்வொரு ஜீவான்மாவிலும் தெய்விகத் தன்மை மறைந்திருக்கிறது. வெளியேயும் உள்ளேயும் இருக்கும் இயற்கையைக் கட்டுப்படுத்தி, உள்ளே குடிகொண்டுள்ள இந்தத் தெய்விகத்தன்மையை மலரும்படி செய்வதுதான் முடிவான இலட்சியமாகும்.

இதைக் கர்மயோகம், கடவுள் வழிபாடு, மனக் கட்டுப்பாடு, தத்துவ விசாரம் என்னும் இவற்றுள் ஒன்றினாலோ, பலவற்றினாலோ, எல்லாவற்றினாலோ செய்து சாதித்துச் சுதந்திரமாய் இரு.

இதுவே சமயத்தின் முழு உண்மை ஆகும். சமய சித்தாந்தங்களோ, ஆகமக் கட்டுப்பாடுகளோ, சமயச் சடங்குகளோ, சாஸ்திரங்களோ, கோவில்களோ, இவை போன்ற மற்றவையோ, இதற்கு உதவி புரியும் இரண்டாம் தரமான முக்கியத்துவமுடைய சாதனங்களாக மட்டுமே அமைந்திருக்கின்றன.

76. ஒவ்வொருவனும் தன்னுடைய வழிதான் சிறந்தது என்று நினைக்கிறான். மிகவும் நல்லது. ஆனால் **உனக்கு** வேண்டுமானால் அது நல்லதாக இருக்கலாம் என்பதை நீ நினைவில் வைக்க வேண்டும். ஒருவனால் சிறிதுகூட ஜீரணிக்க முடியாத ஓர் உணவு, மற்றொருவனுக்கு எளிதில் ஜீரணமாகக் கூடியதாக இருக்கும். உனக்குப் பொருத்தமாக இருப்பதனாலேயே ஒவ்வொருவனுக்கும் அதுதான் வழி, சங்கரனுக்குப் பொருத்தமான சட்டை சந்திரனுக்கும் சங்கரிக்கும் பொருத்தமாக இருக்க வேண்டும்—என்ற முடிவிற்குத் தாவிவிடாதே.

கல்வியறிவில்லாத, பண்பாடற்ற, சிந்தனையில்லாத ஆண் பெண் அனைவரும் இத்தகைய குறுகலான சட்டைக்குள் புகுத்தப்பட்டிருக்கிறார்கள்!

நீயாகவே சிந்தித்துப் பார். நாத்திகனாக இருந்து விட்டுப் போ! இந்த உலகமே பெரிது என்று நினைக்கும் இலௌகிகனாக இருந்துவிட்டுப் போ! அதுகூட எவ்வளவோ பரவாயில்லை! மனதைப் பயன்படுத்திச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 'இந்த மனிதனுடைய வழி தவறானது' என்று சொல்வதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது? உனக்கு வேண்டுமானால் அது தவறாக இருக்கலாம். அதாவது, நீ அந்த வழியைப் பின்பற்றினால் அதனால் உனக்குக் கேடு விளையக்கூடும். ஆனால் அதற்காக அந்த வழியால் அவன் கீழ்நிலையை அடைந்துவிடுவான் என்பது அதன் பொருளல்ல.

எனவே, உன்னிடம் அறிவு இருந்து, மற்றொருவன் பலவீனனாக இருப்பதை நீ பார்த்தால், அதற்காக அவனை நீ கண்டிக்காதே. உனக்கு இயலுமானால் அவனுடைய நிலைக்கு இறங்கிச் சென்று அவனுக்கு நீ உதவிசெய். தானாகவே அவன் வளர்ச்சி பெற வேண்டும். நான் அவனுடைய தலைக்குள் ஐந்து மணி நேரத்தில் ஐந்து கூடை அறிவைத் திணித்துவிடுவேன். ஆனால், அதனால் என்ன நன்மை ஏற்பட்டுவிடப் போகிறது? அவன் முன்பு இருந்ததைவிட மேலும் சற்று அதிகம் மோசமானவனாகத்தான் இருப்பான்.

77. ''எழுந்திருங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இனியும் தூங்க வேண்டாம். எல்லாத் தேவைகளையும் எல்லாத் துன்பங்களையும் நீக்குவதற்கான பேராற்றல் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளேயும் இருக்கிறது. இதை நம்புங்கள். அப்போது அந்தப் பெரிய சக்தி உங்களிடமிருந்து வெளிப்படும்'' என்ற இந்த உண்மையை அனைவருக்கும் சென்று போதிப்பாயாக...எல்லையற்ற வலிமையும், எல்லையற்ற ஞானமும், வெல்ல முடியாத ஆற்றலும் உனக்குள்ளேயே குடிகொண்டிருப்பதை நீ உணர முடிந்தால், நீ அந்த ஆற்றலை வெளியே கொண்டுவர முடியுமானால், நீயும் என்னைப் போல் ஆக முடியும்.

4. கல்வியும் சமுதாயமும்

78. மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

79. கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா? இல்லை. அல்லது அது பலவிதமானவற்றைக் குறித்த அறிவா? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகிறதோ அந்தப் பயிற்சிதான் கல்வியாகும்.

80. வெறும் புள்ளி விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருப்பதல்ல, மனதை ஒருமுகப்படுத்துவதுதான் என்னைப் பொறுத்த வரையில் கல்வியின் அடிப்படையான இலட்சியமாகும்.

மீண்டும் ஒரு முறை நான் கல்வி கற்பதாக இருந்தால், அந்த விஷயத்தில் சுதந்திரம் ஏதாவது எனக்கு இருக்குமானால், புள்ளி விவரங்களை நான் படிக்க மாட்டேன். முதலில் மனதை ஒருமுகப்படுத்தும் ஆற்றலையும், பற்றில்லாமல் இருக்கும் திறந்த உள்ளத்தையும் வளர்த்துக் கொள்வேன். அதன் பிறகு, பண்படுத்தப் பட்ட அந்தக் கருவியைக் கொண்டு, நினைத்த நேரத்தில் உண்மைகளை நான் சேகரித்துக் கொள்வேன்.

81. பாமரர்களாகிய பொதுமக்களை வாழ்க்கைப் போராட்டத்திற்குத் தகுதி பெற்றவர்களாக இருக்க உதவி செய்யாத கல்வி, உறுதியான நல்ல ஒழுக்கத்தையும், பிறருக்கு உதவி புரியும் ஊக்கத்தையும், சிங்கம் போன்ற மன உறுதியையும் வெளிப்படுத்தப் பயன் படாத கல்வி, அதைக் கல்வி என்று சொல்வது பொருத்தமா? எத்தகைய கல்வி தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைத் தனது சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ, அதுதான் உண்மையான கல்வியாகும்.

82. கல்வி என்பது உன்னுடைய மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. அப்படித் திணிக்கப்படும் அந்த விஷயங்கள் வாழ்நாள் முழுவதும் ஜீரணமாகாமல் உனக்குத் தொந்தரவு கொடுத்துக்கொண்டே இருக்கும்.

வாழ்க்கையை உருவாக்கக் கூடிய, மனிதனை மனிதனாக்கக் கூடிய, நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக் கூடிய கருத்துக்களைக் கிரகித்து அவற்றை நாம் நம்முடையவையாக்கிக் கொள்ள வேண்டும்.

நீ ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்துக் கொண்டு, அவற்றை நீ உன்னுடைய வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊடுருவி நிற்கச் செய்தால்—ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்திருப்பவனை விட நீயே அதிகம் கல்வி கற்றவன் ஆவாய்.

83. நியூட்டன் புவியீர்ப்புச் சக்தியைக் கண்டு பிடித்தார் என்று சொல்கிறோம். அது எங்காவது ஒரு மூலையில் அவர் வருவார் என்று உட்கார்ந்து காத்துக் கொண்டிருந்ததா? அது அவர் உள்ளத்திலேயே இருந்தது. சரியான நேரம் வரவே அதை அவர் கண்டு பிடித்தார்.

காலமெல்லாம் உலகம் இது வரையிலும் பெற்று வந்திருக்கிற அறிவு முழுவதும் மனதிலிருந்துதான் வந்திருக்கிறது. பிரபஞ்சத்திலுள்ள அறிவு முழுவதும் நிரம்பிய மிகப் பெரிய நூல்நிலையம் உன்னுடைய உள்ளத்திலேயே அடங்கியிருக்கிறது. வெளி உலகம் வெறும் தூண்டுதலாக மட்டுமே அமைகிறது. அமைந்து உன்னுடைய உள்ளத்தை நீ ஆராய்வதற்குத் தேவையான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது.

84. ஒவ்வொருவனும் கட்டளையிடவே விரும்புகிறான். கீழ்ப்படிவதற்கு ஒருவரும் தயாராக இல்லை. பண்டைக் காலத்தில் நிலவி வந்த வியப்பிற்குரிய பிரம்மசரிய முறை இந்த நாளில் மறைந்து போனதுதான் இதற்குக் காரணம்.

முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும். எப்போதும் முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள். அதன் பின்பு எஜமானனாகும் தகுதி உனக்கு வந்து சேரும்.

85. கல்வி, கல்வி, கல்வி ஒன்றே இப்போது நமக்குத் தேவை! ஐரோப்பாவின் பல நகரங்களுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன். அங்கே சாதாரண ஏழை எளிய மக்களுக்குக்கூடக் கிடைத்திருக்கும் வாழ்க்கை

வசதிகளையும் கல்வியையும் நான் கவனித்திருக்கிறேன். அப்போதெல்லாம் நமது நாட்டு ஏழை எளிய மக்களின் பரிதாப நிலையை நினைத்து நான் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறேன். இந்த வேறுபாட்டிற்கு என்ன காரணம்? கல்வி என்பதுதான் எனக்குக் கிடைத்த விடை.

86. சிரத்தைதான் நமக்குத் தேவை. துரதிர்ஷ்டவசமாக இந்தியாவிலிருந்து இது கிட்டத்தட்ட மறைந்தே போயிருக்கிறது. இப்போது நாம் இருக்கும் நிலைமைக்கே சிரத்தையை இழந்துவிட்டதுதான் காரணமாகும். மனிதனுக்கு மனிதன் வேறுபடுவதற்குக் காரணம், இந்தச் சிரத்தையிலுள்ள வேறுபாடே தவிர வேறொன்றுமில்லை. இந்தச் சிரத்தைதான் ஒரு மனிதனைப் பலவீனனாகவும் தாழ்ந்தவனாகவும் ஆக்கிவிடுகிறது.

87. நமது தேசீய இரத்தத்தில் ஒரு பயங்கரமான நோய் ஊர்ந்துகொண்டிருக்கிறது. அதாவது, எதை எடுத்தாலும் எள்ளி நகையாடுவது, சிரத்தை இல்லாமல் இருப்பது. இந்த நோயை ஒழித்துக் கட்டுங்கள். வலிமையுடன் சிரத்தையைப் பெற்றவர்களாக இருங்கள். மற்றவை அனைத்தும் தாமாக நிச்சயம் வந்து சேரும்.

88. தாழ்ந்த நிலையிலுள்ள நம்முடைய மக்களுக்குக் கல்வியைத் தந்து, இழந்துவிட்ட தங்களின் உயர்ந்த நிலையை அவர்கள் வளர்த்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும். இதுதான் நாம் இப்போது செய்ய வேண்டிய ஒரே சேவையாகும்... உயர்ந்த கருத்துக்களை அவர்களுக்குக் கொடுங்கள். அந்த ஒரே ஒரு உதவிதான் அவர்களுக்குத் தேவைப்படுகிறது. பிறகு அதன் விளைவாக மற்ற நன்மைகள் எல்லாம் வந்து சேரும். இரசாயனப் பொருள்களை ஒன்றுசேர்த்து வைப்பதுதான் நமது கடமை. பின்பு அவை இயற்கையின் விதியையொட்டித் தாமாகவே படிகங்களாக மாறிவிடும். இப்போது மலை முகமதுவிடம் செல்லாவிட்டால், முகமதுதான் மலையிடம் செல்ல வேண்டும். ஏழைப் பையன் கல்வியை நாடி வர முடியாவிட்டால், கல்விதான் அவனை நாடிப் போக வேண்டும்.

89. எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, ஒருவனைத் தன்னுடைய

சுய வலிமையைக் கொண்டு நிற்கச் செய்யுமோ அத்தகைய கல்விதான் நமக்குத் தேவை.

90. தலைமுறை தலைமுறையாக நிலவிய, வெளியே ஓடும் மனதைத் தடுத்து நிறுத்திய கல்விமுறை இப்போது கிட்டத்தட்ட அழிக்கப்பட்டுவிட்டது. இதுவா கல்விமுறை?

இத்தகைய கல்விமுறையின் ஆதிக்கத்தின் விளைவாகப் பழங் கருத்துக்கள்கூட ஒவ்வொன்ருக மறைந்து கொண்டே வருகின்றன. புதிய கருத்துக்கள் பயன்படாமற்போனது பற்றியோ சொல்ல வேண்டியதே இல்லை.

மனிதனை மெல்ல மெல்ல இயந்திரமாக்கிக்கொண்டு வருவதும் ஒரு கல்வியா? அந்த இயந்திரமே எவ்வளவோ பாக்கியம் செய்தது. ஓர் இயந்திரத்தைப் போல நல்லவனுக இருப்பதை விடவும், ஒருவன் தன்னுடைய சுதந்திர மனப்பான்மையாலும் அறிவாலும் உந்தப் பட்டுத் தவறு செய்வதே மேல் என்பது என்னுடைய கருத்து.

91. மேலைநாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும் பிரம்மசரியமும், வாழ்க்கையின் அடிப் படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன.

எல்லா விதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது என்று வேதாந்தம் சொல்கிறது. இந்த அறிவு ஒரு சிறுவனிடங்கூட இருக்கிறது. இந்த அறிவை விழித்து எழும்படி செய்வதுதான் ஆசிரியனுடைய வேலையாகும்.

மதம்தான் எல்லாவற்றிற்கும் உயிர்நாடி. சமய வாழ்க்கை சோறு போன்றது. மற்றவை எல்லாமே கறி, கூட்டுப் போன்றவை. கறி, கூட்டு வகைகளை மட்டும் உண்பதனுல் அஜீர்ணம் ஏற்படுகிறது. அப்படியே சோற்றை மட்டுமே சாப்பிட்டாலும் அஜீர்ணம் ஏற்படும்.

92. பிரம்மசரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லா விதமான கல்வியறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும். அத்தகையவன் ஒரே ஒரு முறை, தான் கேட்டதையும் அறிவதையும் மறவாமல் நினைவில்

வைத்துக்கொள்கிறுன். இப்படிப்பட்ட பிரம்மசரியம் நம் நாட்டில் இல்லாமற் போனதனுல்தான், எல்லாமே இன்று அழிந்துபோகும் நிலையில் இருக்கின்றன.

93. குருகுல முறையில் ஆசிரியனேடு நேரடியாகத் தொடர்பு கொண்டு பயிற்சி பெறுவதுதான் சிறந்த கல்வி முறை என்பது எனது கருத்து. ஆசிரியரின் வாழ்க்கை ஒரு முன்மாதிரியாக அமையாமல் எந்த விதக் கல்வியையும் பெற முடியாது.

உங்கள் பல்கலைக் கழகங்களை எடுத்துக்கொள்ளுங்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளாக அவை இருந்து என்ன சாதித்திருக்கின்றன? (1897-ஆம் ஆண்டில் சென்னைச் சொற்பொழிவு ஒன்றில் விவேகானந்தர் குறிப்பிட்டது.) சுயமாகச் சிந்திக்கும் உண்மையான மனிதன் ஒருவனை யும் அவை உண்டாக்கியதாகத் தெரியவில்லை. அவை வெறும் தேர்வுகளை நடத்தும் நிறுவனங்களாக மட்டுமே இயங்கிக்கொண்டிருக்கின்றன. பொது நலத்திற்காக நம்மைத் தியாகம் செய்ய வேண்டும் என்ற கருத்து நமது நாட்டில் இன்னும் வளராமலேயே இருக்கிறது.

94. பழைய சமுதாயமானுலும் புதிய சமுதாய மானுலும் உண்மை எதற்கும் தலை வணங்காது. சமுதாயம்தான் உண்மைக்குத் தலைவணங்க வேண்டும் அல்லது அழிய வேண்டும். உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் சமுதாயங்களை உருவாக்க வேண்டும். சமுதாயத்திற்கு ஏற்றுற்போல் உண்மை தன்னை மாற்றி அமைத்துக்கொள்ளக் கூடாது.

எங்கு உயர்ந்த உண்மைகள் நடைமுறையில் இருக்கின்றனவோ, அந்தச் சமுதாயம்தான் சிறந்தது. இதுவே என்னுடைய கருத்து.

சமுதாயம் உயர்ந்த உண்மைகளுக்குத் தகுதி உடையதாக இல்லாவிட்டால், அதைத் தகுதி உடைய தாகச் செய். எவ்வளவு விரைவில் இதைச் செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு நன்மை ஏற்படும்.

95. மக்களின் தளைகளை நீக்கி உன்னுல் இயன்ற அளவுக்கு அவர்களை விடுதலை பெறச் செய். இன்பங்கள் என்ற உன்னுடைய எல்லா ஆசைகளையும் சமுதாயத்தின் நன்மையை முன்னிட்டு எப்போது உன்னுல் தியாகம்

செய்ய முடிகிறதோ அப்போது நீ ஒரு புத்தர் ஆகி விடுவாய். அப்போது நீ ஒரு முக்தன் ஆவாய்.

96. ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு மூன்று விஷயங்கள் அவசியம்:—

1. நன்மை தரக்கூடிய சக்திகளில் உறுதியான நம்பிக்கை.

2. பொறாமையும் சந்தேகமும் இல்லாமலிருத்தல்.

3. நல்லவர்களாக இருக்கவும் நன்மையைச் செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவிபுரிதல்.

97. உன்னுடைய இலட்சியம் ஜடப் பொருள் என்றால் ஜடப் பொருளாகவே நீ ஆகிவிடுவாய். கவனித்துப் பார். ஆன்மாவை அடைவதுதான் நம்முடைய இலட்சியம். அது ஒன்றே ஒன்றுதான் எப்போதும் இருந்து வருகிறது. ஆன்மாவைத் தவிர வேறொன்றும் இல்லை. அதைப் போலவே நாமும் என்றென்றும் வாழ்ந்திருப்போம்.

98. இந்து மதத்தைச் சேர்ந்தவன் குடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்; நடப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்; திருமணம் செய்துகொள்வதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்; கொள்ளையடிப்பதும் மத வாழ்க்கையை ஒட்டித்தான்.

ஒவ்வொரு நாடும் உலகிற்கு ஆற்ற வேண்டிய பணி ஒன்று உண்டு. அந்தப் பணிக்குத் தீங்கு நேராத வகையில் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அந்த நாடு நிலைத்து வாழும். ஆனால் அந்தப் பணிக்கு அழிவு வந்தவுடனே அந்த நாடு சிதைந்துவிடுகிறது.

99. கற்பு நிலையிலிருந்து வழுவதுதான் ஒரு நாட்டின் அழிவிற்கு முதல் அறிகுறி என்பதை வரலாற்றில் நீ பார்க்கவில்லையா? கற்புத் தவறுதல் என்ற கேடு சமுதாயத்தில் நுழையும்பொழுது அந்த இனத்திற்கு முடிவுக் காலம் நெருங்குவது தெளிவாகிவிடுகிறது.

100. இப்போது நாம் விலங்குகளைவிட அதிக அளவில் ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயத்தின் கட்டுப்பாடு என்னும் சாட்டையடிகளால்தான் நாம் அழுத்தி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறோம். இன்று சமூகம், 'நீ திருடினால் நான் உன்னைத் தண்டிக்கப்

போவதில்லை' என்று சொல்லிவிடுமானால், உடனே நாம் விரைந்து ஒருவர் மற்றொருவருடைய சொத்துக்களைப் பறிப்பதற்காகப் பாய்ந்து ஓடுவோம். போலீஸ்காரர்கள் தாம் நம்மை நல்ல ஒழுக்கம் உடையவர்களாக வைத்திருக்கிறார்கள். சமுதாயத்தின் பொது அபிப்பிராயம் தான் நம்மை ஒழுக்கமுள்ளவர்களாக வைத்திருக்கிறது. உண்மையில் மிருகங்களைவிட நாம் சிறிதும் உயர்ந்தவர்களாக இல்லை.

101. சமுதாயத்தில் காணப்படும் பெரும்பாலான மதப் பிரிவுகள் தாற்காலிகமானவையாகும். நீர்க்குமிழிகளைப் போலச் சிறிது காலம் இருந்து அவை மறைந்து விடும். ஏனென்றால் அதன் தலைவர்கள் பொதுவாகச் சிறந்த ஒழுக்கம் இல்லாதவர்களாக இருப்பதுதான் இதற்குக் காரணம். பரிபூரணமான அன்பு, தீங்கிழைத்தவர்களுக்கும் பதிலுக்குத் தீங்கு நினைக்காத இதயம்—ஆகிய இவைதாம் சிறந்த ஒழுக்கத்தை உருவாக்குகின்றன. தலைவரிடம் சிறந்த ஒழுக்கம் இல்லாவிட்டால், அவரிடம் நம்பிக்கை வைப்பதற்கு வாய்ப்பில்லை. தலைவர் தூய்மையுடையவராக இருக்கும்போது, உறுதியான நிலைத்த நம்பிக்கையும் பற்றும் ஏற்படுகின்றன.

ஒரு கொள்கையை எடுத்துக்கொள். அதற்காகவே உன்னை அர்ப்பணித்துப் பொறுமையுடன் போராடிக் கொண்டிரு. உனக்கு ஆதரவான ஒரு காலம் வரும்.

102. 'உங்களுடைய சமயத்தால் (religion) சமுதாயத்துக்கு என்ன நன்மை?' என்று நம்மைக் கேட்கிறார்கள். இவ்விதம் கேட்பதனால் உண்மையின் சோதனைக்களனாகச் சமுதாயம் ஆகிறது. இது தர்க்கத்திற்கு மிகவும் முரண்படுகிறது.

சமுதாயம் என்பது வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு நிலை. அதில் நாம் கடந்து சென்றுகொண்டிருக்கிறோம். சமுதாயம் மாறாமல் ஒரு நிலையிலேயே எப்போதும் நிரந்தரமாக இருப்பதாக இருந்தால் அது, குழந்தை என்றென்றைக்கும் குழந்தையாகவே இருப்பதைப் போன்றதாகும்.

முழு வளர்ச்சி அடைந்த மனிதனாகிய குழந்தை என்ற ஒரு நிலை இருக்க முடியாது. மனிதன், குழந்தை என்ற இரண்டு சொற்களுமே ஒன்றுக்கொன்று முரண்

படுகின்றன. எனவே பரிபூரண நிலையை அடைந்த சமுதாயம் என்று ஒன்று இருப்பதற்கில்லை. சமுதாயத்தின் இத்தகைய ஆரம்ப நிலைகளிலிருந்து மனிதன் வளர்ச்சி அடைய வேண்டும். அவன் வளர்ச்சியும் அடைவான்... ''உனக்குள் இருக்கும் தாமரையை நீ ஏன் மலரும்படிச் செய்யக்கூடாது? அப்படிச் செய்தால் தேனீக்கள் அங்கே தாமாக வந்து சேரும்'' என்று என்னுடைய குருநாதர் சொல்வது வழக்கம்.

103. மற்றவர்களிடம் தீய தன்மை இருப்பதாக நீ உணராதே. தீய தன்மை பலவீனத்தாலும் அறியாமையாலும் ஏற்படுகிறது. மக்களிடம் நீங்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வதனுல் என்ன நன்மை ஏற்படப் போகிறது? குறை கூறுவதனுலும் அழிவு முறையினுலும் எந்த விதமான நன்மையும் ஏற்படப் போவதில்லை. இவற்றைவிட உயர்ந்தது எதையாகிலும் அவர்களுக்கு நாம் தர வேண்டும். அவர்களுடைய பெருமைக்கு உரிய இயல்பை, அவர்களுடைய பிறப்புரிமையை அவர்களிடம் எடுத்துச் சொல்.

104. நான் 'சீர்திருத்தம்' என்று சொல்லவில்லை. மாருக 'முன்னேறிச் செல்' என்று சொல்கிறேன். இப்போது சீர்திருத்தம் செய்ய வேண்டிய அளவுக்கு எதுவும் கெட்டுவிடவில்லை.

சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்க்கையை அனுசரித்து அமைத்துக் கொள்வதுதான் வெற்றிகரமான வாழ்க்கைக்கு உரிய முழு ரகசியமாகும். இந்த உண்மை, வாழ்க்கை மலர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாக இருந்து பெரிதும் துணைபுரிகிறது. மாற்றியமைத்துக் கொள்வதும், அனுசரித்துப் போவதும் அடக்கி அழுத்தி வைக்க முயற்சி செய்யும் புறச் சக்திகளை எதிர்த்துப் போராடுவதன் விளைவாகத் தோன்றுகின்றன. சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னை நன்ருக அனுசரித்து அமைத்துக் கொள்பவன், நீண்ட காலம் வளமான வாழ்க்கை வாழ்கிருன். நான் இதை எடுத்துச் சொல்லாவிட்டாலும் சமுதாயம் மாறியபடிதான் இருக்கிறது. அப்படியே சமுதாயம் மாறித்தான் ஆகவேண்டும்.

105. அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறென்றுமே நமக்குத் தேவையில்லை. வளர்ச்சியடைவதுதான் வாழ்க்கை, அதாவது விரிவடைதல்.

அதுதான் அன்பாகும். எனவே அன்புதான் வாழ்க்கை ஆகும். அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஒரே நியதியாகும்.

எல்லா விதமான சுயநலமும் மரணம்தான். இந்த உண்மை இம்மை மறுமையாகிய இரண்டு உலகங்களுக்கும் பொருந்தும். நன்மை செய்துகொண்டிருப்பது தான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமலிருப்பதுதான் மரணம். இப்போது நாம் பார்க்கிற மக்களில் தொண்ணூறு சதவீதம் இறந்துபோனவர்கள். அவர்கள் பிசாசுகள்தாம். எனது அருமைக் குழந்தைகளே, அன்பு செலுத்துபவர்களைத் தவிர வேறு யாரையும் வாழ்வதாகக் கருத முடியாது.

106. புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது: ''மேலை நாட்டுக் கருத்துக்கள், மொழி, உணவு, உடை, நடைமுறைகள் ஆகியவற்றை நாம் பின்பற்றினால்தான், மேலை நாட்டினரைப் போன்று நாமும் உறுதியும் ஆற்றலும் உடையவர்கள் ஆவோம்.''

மறு புறம் பழைய இந்தியா சொல்கிறது: ''முட்டாள்கள்! மற்றவர்களுடைய கருத்துக்களைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவதனால் ஒருநாளும் அவை ஒருவனுக்குச் சொந்தமாகிவிடா. உழைத்துப் பெற்றாலன்றி எதுவும் உனக்குச் சொந்தமாகிவிடாது. புலியின் தோலைப் போர்த்துக்கொண்ட பசு, புலியாகிவிடுமா?''

புதிய இந்தியா ஒரு புறம் சொல்கிறது: ''மேலை நாடுகள் செய்வது நிச்சயம் சரியாகத்தான் இருக்கும். இல்லாவிட்டால் அவை எப்படி இவ்வளவு பெருமை உடையவையாக ஆகியிருக்க முடியும்?''

மறு புறம் பழைய இந்தியா சொல்கிறது: ''மின்னலின் ஒளி மிகவும் நன்றாகத்தான் பிரகாசிக்கும். ஆனால் அது ஒரு கணம்தான். குழந்தைகளே! உங்கள் கண்களை அது கூசச் செய்வதைக் கவனியுங்கள். எச்சரிக்கையாக இருங்கள்!''

107. மேலை நாடுகளிலுள்ள சமுதாய வாழ்க்கை முறை கணீரென்று சிரிப்பதைப் போன்றதாகும். ஆனால் அதன் அடியில் அழுகையும் புலம்பலும் மறைந்திருக்கின்றன. அதன் முடிவும் தேம்பியழுவதாகவே அமையப் போகிறது. மேற்புறத்தில் மட்டுமே வேடிக்கையும் விளை

யாட்டும் அங்குக் காணப்படுகின்றன. ஆனால் உண்மையில் அளவில்லாத துயரமே அதில் நிறைந்திருக்கிறது.

மாறாக, இந்த நாட்டிலோ வெளிப்படையாக இருளும் துயரமும் காணப்படுகின்றன. ஆனால் அவற்றின் அடியில் கவலையின்மையும் மகிழ்ச்சியும் மறைந்திருக்கின்றன.

108. 'மக்கட்பேற்றாலோ செல்வத்தாலோ அல்ல; தியாகத்தால் மட்டுமே அமரநிலை அடையப்படுகிறது' என்ற இந்த அறைகூவலை உபநிஷதங்கள் காலம் முதல் உலகிற்கு நாம் விடுத்து வந்திருக்கிறோம். வாழையடி வாழையாக, இனத்திற்குப் பின் இனமாக, பல இனங்கள் இந்த அறைகூவலை ஏற்றுக்கொண்டன. ஆசைகளை அடிப்படையாகக் கொண்டு, இந்த வாழ்க்கைப் புதிரைத் தீர்க்கத் தங்களால் ஆனவரையிலும் அவை முயற்சி செய்தன. ஆனால் அவை எல்லாம் தோல்வியையே அடைந்திருக்கின்றன.

பழைய இனங்கள் எல்லாம் பொன்னாசை, அதிகார வெறி ஆகியவற்றின் விளைவாகிய கொடுமை, துன்பம் முதலியவற்றின் சுமை தாங்க முடியாமல் அழிந்தே போயிருக்கின்றன. புதிய இனங்களோ அதே சுமைகளால் தள்ளாடி விழும் நிலையில் இருக்கின்றன.

இந்த நிலையில் வெற்றி பெறப்போவது அமைதியா, போரா? பொறுமையா, பொறுமையின்மையா? நன்மையா, தீமையா? தோள் வலிமையா, அறிவு வலிமையா? இலௌகிகமா, ஆன்மிகமா?— வாழ்க்கைப் போராட்டத்தில் தப்பிப் பிழைக்கப்போவது எது என்ற கேள்விக்குப் புதிய இனங்கள் இனிமேல்தான் பதிலைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன.

ஆனால் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நாம் நம்முடைய பிரச்னையைத் தீர்த்திருக்கிறோம். தீராத இந்தப் பிரச்னைக்கு நாம் அளித்த விடை, உலக ஆசை இல்லாமலிருத்தல் அதாவது தியாகம் என்பதுதான்.

5. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

109. ஒரு காரியத்தின் பயனில் கருத்தைச் செலுத்துமளவிற்கு, அந்தக் காரியத்தைச் செய்யும் முறையிலும் கருத்தைச் செலுத்த வேண்டும். இது என்னுடைய வாழ்க்கையில் நான், கற்றுக்கொண்ட மிகப் பெரிய பாடங்களுள் ஒன்ருகும்......இந்த ஒரு பாடத்திலிருந்து பல பெரிய பாடங்களை நான் எப்போதும் கற்றுக்கொண்டு வந்திருக்கிறேன். குறிக்கோளுக்குச் செலுத்தும் கவனத்தை, அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்த வேண்டும் என்பதில், வெற்றிக்கு உரிய எல்லா இரகசியமும் அடங்கியிருப்பதாக எனக்குத் தோன்றுகிறது.

110. நாம் மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவிபுரிவதும் உலகிற்கு நன்மை செய்வதும்தான்.

நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும். ஆனுல் உலகிற்கு நன்மை செய்வதனுல், உண்மையில் நமக்கு நாமேதான் உதவி செய்துகொள்கிறேம்.

உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு, ''ஏ பிச்சைக்காரா! இதை வாங்கிக்கொள்'' என்று நீ சொல்லாதே. மாருக, அவனுக்குக் கொடுப்பதனுல் உனக்கு நீயே உதவி புரிந்து கொள்ள முடிந்ததை நினைத்து, அந்த ஏழை அங்கு இருந்ததற்காக அவனிடம் நீ நன்றியுள்ளவனுக இரு. கொடுப்பவன்தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும் இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனுக இரு. இதன் மூலம் தூய்மையும் பரிபூரணத் தன்மையும் உன்னை வந்தடையும்.

111. சமநிலையிலிருந்து பிறழாதவன், சாந்தமானவன், நன்மையை ஆராய்ந்து ஏற்பவன், அமைதி படைத்தவன், இரக்கமும் அன்பும் பெரிதும் உள்ளவன்— இத்தகையவன் நல்ல பணிகளில் ஈடுபடுகிருன். அதன் மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக்கொள்கிருன்.

112. ஒரு பெரிய காரியத்தைச் செய்து முடிப்பதற்கு நீண்டகால இடையருத முயற்சி பெரிதும் தேவைப்படுகிறது. இத்தகைய முயற்சியில் ஒரு சிலர் தோல்வியுற்ருலும் அதைக் குறித்து நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இவ்விதம் பலர் வீழ்ச்சியுறுவதும், துன்பங்கள் நேருவதும், பெருமளவில் கஷ்டங்கள் உண்டாவதும் இயல்பே ஆகும். மனிதன் தனது சுயநலத்தையும் மற்றுமுள்ள எல்லாப் பேய்களையும் ஆன்மிக ஞானம் என்ற நெருப்பைக் கொண்டு தன்னிடமிருந்து விரட்ட முயற்சி செய்யும்போது, அவை அந்த முயற்சியை எதிர்த்துப் போராடுகின்றன.

113. தீமையைச் செய்வதனுல் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிருேம். நன்மையைச் செய்வதனுல் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்துகொள்கிருேம்.

கர்மயோகத்தின் விதியின்படி, ஒருவன் செய்த ஒரு கர்மத்தை, அது தனக்கு உரிய பலனை விளைவித்து முடிக்கும் வரையிலும் அழிக்க முடியாது. கருமம் தனக்கு உரிய பலனை விளைவிப்பதை இயற்கையிலுள்ள எந்தச் சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது. நான் ஒரு தீய செயலைச் செய்தால், அதற்கு உரிய துன்பத்தை நான் அனுபவித்தே ஆகவேண்டும். இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் இதைத் தடுக்கவும் முடியாது; நிறுத்தி வைக்கவும் முடியாது. அதே போல, நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்தால் அது தனக்கு உரிய நல்ல பலனை விளைவிப்பதைப் பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது.

114. 'நான்' அல்லேன், 'நீயே' என்னும் இந்த மனப்பான்மைதான் எல்லா நன்மைகளுக்கும் எல்லாச் சிறந்த ஒழுக்கங்களுக்கும் அடிப்படையாக விளங்குகிறது.

இருப்பது சொர்க்கமா நரகமா என்று யார் இங்கே கவலைப்படுகிருர்கள்? ஆத்மா என்ற ஒன்று இருக்கிறதா இல்லையா என்று யார் கவலைப்படுகிருர்கள்? மாருத ஒன்று இருக்கிறதா இல்லையா என்று யார் கவலைப்படுகிருர்கள்? இதோ, இங்குள்ள உலகில் துன்பம் நிறைந்திருக்கிறது. புத்தர்பெருமான் செய்ததைப்போல, இந்தத் துன்பத்தைக் குறைப்பதற்கு முயற்சிசெய். அல்லது அந்த முயற்சியிலேயே உயிரை விட்டுவிடு.

நீ கடவுள் நம்பிக்கை உடையவனாக இருந்தாலும் சரி, அல்லது நாத்திகனாக இருந்தாலும் சரி; ஆக்ஞேய வாதியாக (agnostic) இருந்தாலும் சரி, அல்லது வேதாந்தியாக இருந்தாலும் சரி; கிறிஸ்தவனாக இருந்தாலும் சரி, அல்லது இஸ்லாமியனாக இருந்தாலும் சரி, உன்னுடைய சுக துக்கங்களை மறந்து நீ வேலை செய். இதுதான் நீ இப்போது கற்றுக்கொள்ள வேண்டிய முதற் பாடமாகும்.

115. ''கடவுளைக் குறித்து உங்களுடைய பலவிதமான கருத்துக்களைப் பொருட்படுத்த நான் தயாராக இல்லை. ஆத்மாவைக் குறித்த நுட்பமான பலவிதச் சித்தாந்தங்களை எல்லாம் விவாதித்துக் கொண்டிருப்பதனால் என்ன நன்மை ஏற்படப்போகிறது? நன்மையைச் செய்யுங்கள்; அதோடு நல்லவராகவும் இருங்கள். இது உங்களை முக்திக்கு அழைத்துச் செல்லும்'' என்று தீர்க்க தரிசிகளிலேயே புத்தர் ஒருவர் மட்டும்தான் கூறினார்.

எந்தவிதமான சுயநல நோக்கமும் இல்லாமல், பணம் புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல், நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன்தான் சிறப்பாகப் பணியாற்றுகிறான். இத்தகைய மனநிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும்போது, அவன் ஒரு புத்த பகவான் ஆகி விடுவான். உலகத்தையே மாற்றி அமைக்கக்கூடிய வகையில் வேலை செய்யும் சக்தி அத்தகையவனிடமிருந்து வெளிப்படுகிறது.

116. நம்மைப் பற்றியே முதலில் நினைத்துக் கொள்ளும் சுயநலம்தான் மிகப் பெரிய பாவமாகும். 'நான்தான் முதலில் சாப்பிடுவேன், நான்தான் மற்றவர்களைவிட அதிகச் செல்வம் பெற்றவனாக இருப்பேன், எல்லாவற்றையும் நானே வைத்திருக்க வேண்டும்' என்றும், 'மற்றவர்களுக்கு முன்பு நான்தான் சொர்க்கம் போவேன், மற்றவர்களுக்குக் கிடைப்பதற்கு முன்பு நான் முக்தியை அடைவேன்' என்றும் நினைப்பவன்தான் சுயநலவாதி ஆவான்.

'நான்தான் கடைசி ஆளாக இருப்பேன், சொர்க்கத்திற்குப் போவதைப் பற்றியும் நான் பொருட்படுத்தவில்லை. நரகத்திற்குச் செல்வதன் மூலமாக என்னுடைய சகோதரர்களுக்கு என்னால் உதவி செய்ய முடியுமானால்,

நரகத்திற்குச் செல்லவும் நான் .தயாராக இருக்கிறேன்" என்று சுயநலம் இல்லாதவன் சொல்கிருன்.

இத்தகைய தன்னலமற்ற மனப்பான்மைதான் ஆன்மிக வாழ்க்கை இருப்பதற்கும் இல்லாதிருப்பதற்கும் உரிய சோதனையாகும். இவ்விதச் சுயநலமற்ற தன்மையைப் பெருமளவில் பெற்றிருப்பவன், பெருமளவிற்கு ஆன்மிக வாழ்க்கையைப் பெற்றவனுகிருன். அவனே மற்றவர்களைக்காட்டிலும் சிவபெருமானுக்கு அருகில் இருக்கிருன்.

117. உன்னுல் ஒருவருக்கும் உதவி செய்ய முடியாது. மாருக உன்னுல் சேவைதான் செய்ய முடியும். கடவுளின் குழந்தைகளுக்குத் தொண்டு செய். உனக்கு அப்படித் தொண்டு செய்யும் பாக்கியம் இருந்தால், அவர்களுக்குத் தொண்டு செய்வதன்மூலம் ஆண்டவனுக்கே நீ தொண்டு செய்தவனுகிருய்.

தனது குழந்தைகளில் யாரேனும் ஒருவருக்காவது உதவி செய்யும் வாய்ப்பை ஆண்டவன் உனக்குக் கொடுத்தால் அதன் மூலம் நீ பாக்கியம் பெற்றவன் ஆகிருய். ஆனுல் அது காரணமாக உன்னைப்பற்றி நீ மிகவும் பெருமையாக நினைத்துக் கொள்ளாதே. மற்றவர்களுக்குக் கிடைக்காத இந்த அரிய வாய்ப்பு உனக்குக் கிடைத்திருக்கிறது. இதனுல் நீ பாக்கியசாலி ஆகிருய். எனவே நீ செய்யும் இந்தச் சேவையைக் கடவுள் வழிபாடாகவே செய்.

118. ஆண்டவனுக்கு உதவுவதற்காக என்று இல்லாமல், அவருக்காகப் பணியாற்றும் பேறு பெற்ற நாம் பாக்கியசாலிகள் ஆவோம். 'உதவி' என்ற சொல்லை உனது உள்ளத்திலிருந்தே விலக்கிவிடு. நீ உதவி செய்ய முடியாது. அப்படி நீ நினைப்பதுதான் தெய்வ நிந்தனையாகும். அவருடைய விருப்பத்தினுல் தான் நீ இங்கு இருக்கிருய். நீ அவருக்கு உதவி செய்வதாகவா சொல்கிருய்? இல்லை, உன்னுல் அவரை வழிபடத்தான் முடியும். நீ ஒரு நாய்க்கு ஒரு பிடி சோறு கொடுக்கும்போது, அந்த நாயைக் கடவுளாகவே பாவித்து வழிபடு. அந்த நாயினுள்ளே கடவுள் இருக்கிருர். அவரே எல்லாமுமாய் இருக்கிருர்; எல்லாவற்றிலும் இருக்கிருர்.

119. கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டிருக்கிறார். இதைத் தவிரத் தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை—இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்துகொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.

120. உலகமாகிய இந்த நரகத்தில் ஒருவனால் ஒரே ஒரு நாளைக்காகிலும் ஒரே ஒருவனுடைய இதயத்திற்குச் சிறிது இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்க முடியுமானால், அந்த ஒன்றே ஒன்று மட்டும்தான் உண்மையாகும். இந்த உண்மையை வாழ்நாளெல்லாம் பட்ட கஷ்டங்களுக்குப் பிறகு நான் உணர்ந்துகொண்டேன். மற்றவை எல்லாம் பொருளற்ற வெறும் பகற்கனவுகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

121. துன்பம் விளைவதற்கு அறியாமையைத் தவிர வேறு எதுவுமே காரணமில்லை. இந்தக் கருத்தைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போல நான் தெளிவாகப் பார்க்கிறேன். உலகிற்கு யார் ஒளிதரப் போகிறார்கள்? பண்டைக் காலத்தில் தியாகம்தான் வாழ்க்கைக்கு உரிய விதியாக இருந்தது. இனி வரப்போகும் பல கோடி நூற்றாண்டுகளுக்கும் இந்த விதி அப்படியேதான் இருக்கப் போகிறது. பலரின் நன்மைக்காக, அனைவரின் சுகத்திற்காக, உலகில் தைரியமும் சிறப்பும் பெருமளவில் பெற்றிருப்பவர்கள் தங்களைத் தியாகம் செய்துகொண்டு தான் ஆகவேண்டும். என்றென்றும் நிலைத்த மாறாத அன்பும் கருணையும் பொருந்திய பலநூறு புத்தபிரான்கள் இப்போது தேவைப்படுகிறார்கள்.

122. தேவையில்லாத விஷயங்களைப் பற்றி அலட்டிக்கொள்வதில் நமது சக்தியைச் சிதற விடாமல், அமைதியுடனும் ஆண்மையுடனும் ஆக்கபூர்வமான பணிகளில் நாம் ஈடுபடுவோமாக. யார் ஒருவர் எதைப் பெறுவதற்குத் தகுதி உடையவராக இருக்கிறாரோ, அதை அவர் பெறாமல் தடுத்து நிறுத்துவதற்கு இந்தப் பிரபஞ்சத்திலுள்ள எந்தச் சக்தியாலும் முடியாது. இந்தக் கருத்தை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். கடந்த காலம் மிகவும் பெருமைக்கு உரியதாக இருந்தது என்பதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை. ஆனால்

எதிர்காலம் மேலும் சிறப்பாக அமையப்போகிறது என்பதை நான் முழு மனதுடன் நம்புகிறேன்.

123. மோகமாகிய முதலையின் வாயில், மக்கள் எப்படிப் பரிதாபமாகச் சிக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்! அந்தோ! இதயத்தைப் பிளக்கக் கூடிய அவர்களின் சோகக் குரலைக் கேளுங்கள். முன்னேறிச் செல்லுங்கள்! கட்டுண்டு கிடக்கும் மக்களைப் பந்த பாசங்களிலிருந்து விடுவிப்பதற்காகவும், எளியவர்களின் துன்பச் சுமையைக் குறைப்பதற்காகவும், அறியாமையில் மூழ்கியிருக்கும் இருண்ட கிணறுகள் போன்ற உள்ளங்களை ஒளிப்பெறச் செய்வதற்காகவும், ஏ வீரர்களே! முன்னேறிச் செல்லுங்கள்! 'அஞ்சாதே! அஞ்சாதே!' என்று வேதாந்த முரசு முழங்கிக்கொண்டிருப்பதைக் கேளுங்கள்.

124. நம்மிடமுள்ள தெய்விக இயல்பை வெளிப்படுத்துவதற்கான ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்விக இயல்பை வெளிப்படுத்தும்படி செய்துகொள்ளும் வகையில் அவர்களுக்கு உதவி செய்வதுதான்.

இயல்பாகவே இயற்கையில் ஏற்றத் தாழ்வுகள் இருக்குமானால், அப்போதுங்கூட அனைவருக்கும் சமமான வாய்ப்பு வசதிகள் இருக்கத்தான் வேண்டும். அல்லது ஒரு சிலருக்கு அதிகமாகவும், மற்றும் சிலருக்குக் குறைவாகவும்தான் வாய்ப்பு வசதிகள் அமைந்திருக்கும் என்றால், வலிமையுள்ளவர்களுக்குத் தருவதைவிட, பலவீனமானவர்களுக்குத்தான் அதிக அளவில் வாய்ப்புகள் தரப்பட வேண்டும். இதையே வேறு விதமாகச் சொல்வதென்றால், சண்டாளன் ஒருவனுக்குத் தேவையான அளவிற்குப் பிராம்மணன் ஒருவனுக்குக் கல்வி தேவையில்லை. பிராம்மணனுடைய மகனுக்கு ஓர் ஆசிரியர் தேவைப்பட்டால், சண்டாளனுடைய மகனுக்குப் பத்து ஆசிரியர்கள் தேவைப்படுவார்கள். யார் ஒருவனுக்குப் பிறவியிலேயே இயற்கை கூரிய அறிவாற்றலைத் தரவில்லையோ, அத்தகையவனுக்குத்தான் பெருமளவிற்கு உதவிகள் கொடுக்கப்பட வேண்டும். திறமையுள்ளவனுக்கே மீண்டும் உதவி செய்பவன், கொல்லன் வீதியில் ஊசியை விற்கும் பைத்தியக்காரனைப் போன்றவன். ஏழை எளியவர்கள்,

ஒதுக்கப்பட்டவர்கள், கல்வியறிவில்லாதவர்கள் ஆகிய இவர்களே உன்னுடைய தெய்வங்களாக விளங்கட்டும்.

125. தூய்மையாக இருப்பதும் மற்றவர்களுக்கு நன்மை செய்வதும்தான், எல்லா வழிபாடுகளின் சாரமாகும். ஏழைகளிடமும் பலவீனர்களிடமும் நோயாளிகளிடமும் சிவபெருமானைக் காண்பவனே, உண்மையில் சிவபெருமானை வழிபடுகிறான். சிவபெருமானை விக்கிரகத்தில் மட்டும் காண்பவனுடைய வழிபாடு ஆரம்ப நிலையில்தான் இருக்கிறது.

126. கடவுளிடம் நம்பிக்கையில்லாதவன், தத்துவ தர்சனங்கள் இல்லாதவன், மதப் பிரிவு எதிலும் சேராதவன், எந்த ஒரு கிறிஸ்தவக் கோயிலுக்கும் இந்து கோயிலுக்கும் செல்லாதவன், இலௌகிகப் பற்றிலேயே தோய்ந்து போனவன் என்று இப்படியெல்லாம் ஒருவன் இருந்தாலுங்கூட, அவனும் மிக உயர்ந்த நிலையை அடைய முடியும் என்பதைப் புத்தர் பெருமானுடைய வரலாறு காட்டுகிறது... ஒரு யாகத்தில் விலங்குகளைப் பலியிடுவதைத் தடுத்து நிறுத்துவதற்காகத் தமது உயிரை வழங்கவும் அவர் ஒருவர் தாம் எப்போதும் தயாராக இருந்தார். ''நீ சொர்க்கம் போவதற்கு ஓர் ஆட்டுக் குட்டியைப் பலியிடுவது உதவி செய்யுமென்றால், ஒரு மனிதனைப் பலியிடுவது அதைவிடவும் அதிகமாக உனக்கு உதவி செய்யும். எனவே என்னை நீ பலியிடு'' என்று ஒரு முறை ஓர் அரசனிடம் அவர் கூறினார். அதைக் கேட்ட அந்த அரசன் வியப்படைந்து போனான்.

127. 'நல்லவர்கள் மற்றவர்களுடைய நன்மைக்காக மட்டுமே வாழ்கிறார்கள். மற்றவர்களுடைய நன்மைக்காக அறிஞன் தன்னைத் தானே தியாகம் செய்துவிட வேண்டும்.' உனக்கு நான் நன்மை செய்வதன் மூலமாகத்தான் என்னுடைய நன்மையை நான் பெற முடியும். இதைத் தவிர வேறு ஒரு வழியுமில்லை.

128. கிராமம் கிராமமாகச் சென்று மனிதகுலத்திற்கும் பரந்த இந்த உலகத்திற்கும் நன்மை செய். மற்றவர்களுக்கு முக்தியை வாங்கிக் கொடுப்பதற்காக நீ நரகத்திற்கும் செல்ல வேண்டும். மரணம் வருவது இவ்வளவு உறுதியாக இருக்கும்போது நல்ல ஒரு காரியத்திற்காக உயிரை விடுவது மேல்.

129. பெரியவர்கள் பெருந் தியாகங்களைச் செய்கிறார்கள். அதன் விளைவாக வரும் நன்மைகளை மனித குலம் பெற்று அனுபவிக்கிறது. இந்த உண்மையை நீ உலக வரலாறு முழுவதிலும் காணலாம். உனது சொந்த முக்திக்காக எல்லாவற்றையும் நீ துறந்துவிட விரும்பினால், அது அவ்வளவு ஒன்றும் பாராட்டுவதற்கு உரியதில்லை. உலகத்தின் நன்மைக்காக உன் முக்தியையும் நீ தியாகம் செய்துவிட விரும்புகிறாயா? அப்படி நீ செய்தால் கடவுளாகவே நீ ஆகிவிடுவாய். இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்.

130. இந்த உலகம் கோழைகளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து நீ தப்பி ஓட முயற்சி செய்யாதே. வெற்றியா தோல்வியா என்று நீ கவனித்துக் கொண்டிருக்காதே. பரிபூரணமான தியாக உள்ளத்துடன் சேவையில் ஈடுபடு. வெற்றி பெறுவதற்காகவே பிறந்துள்ள மனம், உறுதியுடன் தானாகவே இணைந்து, விடாமுயற்சி செய்கிறது என்பதை உணர்ந்துகொள்... வாழ்க்கை என்னும் போர்க்களத்தின் நடுவில் வாழ்ந்து வா. ஒரு குகையில் இருக்கும்போதும் சரி, அல்லது தூங்கும்போதும் சரி, யார் வேண்டுமானாலும் அமைதியாக இருக்க முடியும். மும்முரமான வேலை என்னும் சுழலில் நின்றபடி உனது குறிக்கோளாகிய ஆத்மனை நீ அடைய வேண்டும். ஆத்மனை நீ கண்டுபிடித்து விட்டால் எதுவுமே உன்னை அசைக்க முடியாது.

131. புனிதமான வாழ்க்கையின் விளைவாக எழும் உற்சாகத்தினால் எழுச்சி அடைந்தவர்கள்; கடவுளிடம் அழியாத நம்பிக்கை என்பதை அரணாகப் பெற்றவர்கள்; ஏழை எளியவர்களிடமும் தாழ்ந்தவர்களிடமும் ஒடுக்கப்பட்டவர்களிடமும் கொண்ட இரக்கம் காரணமாகச் சிங்கத்தைப் போன்ற தைரியம் அடைந்தவர்கள்—இத்தகைய ஆண்களும் பெண்களும் நூறாயிரம் பேர் வேண்டும். இவர்கள் மோட்சம், பரோபகாரம், தாழ்ந்தவர்களின் முன்னேற்றம், சமூக சமத்துவம் ஆகிய இந்த உயர்ந்த கொள்கைகளைப் பிரசாரம் செய்தபடி இந்த நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரை செல்வார்கள்.

132. என் மகனே! உனக்கு எனது சொற்களின் பேரில் ஏதாவது மரியாதை இருக்குமானால், முதலாவ

தாக உன்னுடைய அறையின் எல்லாக் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து விடு. இதுவே நான் உனக்குத் தரும் முதல் அறிவுரையாகும். கீழ்நோக்கிச் சென்ற படியும் துன்பத்தில் மூழ்கியபடியும் ஏராளமான ஏழை மக்கள் நீ வாழும் பகுதியில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நீ அவர்களை அணுகிச் சென்று உன்னுடைய ஆர்வத்தையும் உற்சாகத்தையும் செலுத்தி அவர்களுக்குத் தொண்டு செய். நோய்வாய்ப்பட்டவர்களுக்குத் தேவையான மருந்து வகைகளை வழங்க ஏற்பாடு செய். உன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்தி அந்த நோயாளிகளுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய். பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு. அறியாமையில் உள்ளவனுக்கு உன்னால் முடிந்த அளவிற்குக் கல்வியறிவைப் புகட்டு. என் மகனே! நான் உனக்குச் சொல்கிறேன்—இந்த முறையில் உன்னுடைய சகோதரர்களாகிய மக்களுக்கு நீ தொண்டு செய்ய ஆரம்பிப்பாயானால், நிச்சயமாக உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

133. அந்நாளில் நிலவிய தொண்டு மனப்பான்மை, கீழ்ப்படிதல், தன்னடக்கம் ஆகிய வீரனுக்கு உரிய பண்புகள் இன்று எங்கே போய்விட்டன? போருக்குச் செல்லும் வீரன் தன்னைத் தியாகம் செய்துகொள்கிறானேயன்றி, தனது நலத்தைக் கருதுவதில்லை. ஒருவன் மற்றவர்களுடைய இதயங்களின் மீதும் வாழ்க்கையின் மீதும் ஆணை செலுத்த வேண்டுமானால், முதலில் கட்டளைக்கு உட்பட்டு முன்னேறிச் சென்று தன் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்.

134. அச்சமே மரணம். அச்சத்திற்கப்பால் நீ போக வேண்டும். இன்று முதல் அச்சம் அற்றவனாக இரு. நீ மோட்சம் பெறும்பொருட்டும் பிறருடைய நலத்துக்காகவும் உயிரைக் கொடுக்கச் சித்தமாக இரு. எலும்பும் சதையும் பொருந்திய இந்தச் சுமையைச் சுமந்துகொண்டு திரிவதனால் என்ன பயன்?

135. பணம் படைத்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் இருக்கிறார்களே, அவர்களிடம் நம்பிக்கை வைக்க வேண்டாம். வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைவிட, செத்துப்போனவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள். பணிவும் தாழ்மையும் கொண்டு,

அதே சமயத்தில் நம்பிக்கைக்கு உரியவர்களுமாகிய உங்களிடம்தான் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். திட்டம் எதுவும் தேவையில்லை. அதனுல் ஆகப்போவதும் ஒன்றுமில்லை. துன்பத்தால் வாடுகிறவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். பிறகு உதவிக்காகக் கடவுளை நோக்குங்கள். உங்களுக்குத் தேவைப்படும் உதவி நிச்சயமாக வந்தே தீரும்.

......குளிராலோ பசியாலோ இந்த நாட்டிலேயே (அமெரிக்காவில்) நான் அழிந்து போக நேரலாம். ஆனுல் இளைஞர்களே! ஏழைகள், அறியாமை மிக்கவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய நலனுக்காகப் போராடும் என்னுடைய இரக்கம், முயற்சி ஆகியவற்றை உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். நாள்தோறும் கீழ்நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இந்த முப்பது கோடி மக்களின் நல்வாழ்வை மீட்டுத் தருவதற்காக உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாகச் சபதம் மேற்கொள்ளுங்கள்.

136. தன்னம்பிக்கையே வடிவெடுத்த, நிறைந்த தூய்மையே வடிவெடுத்த ஆறு மனிதர்கள் ஆற்றிய பணிதான் இந்த உலகத்தின் வரலாருகத் திகழ்கிறது. இரக்கம் உள்ள இதயம், சிந்தனை ஆற்றல் படைத்த மூளை, வேலை செய்யக்கூடிய கைகள் ஆகிய இந்த மூன்றும் நமக்குத் தேவை. வலிமை நிறைந்த ஒரு களஞ்சியமாக உன்னை உருவாக்கிக் கொள். முதலில் உலக மக்களின் துன்பங்களைக் குறித்து நீ வருந்து... வெறுப்பு உணர்ச்சியாலோ, பொருமையாலோ, உன்னுடைய மனம் அலைக்கழிக்கப்படாமல் இருக்கிறதா என்று உன்னையே நீ கேட்டுக்கொள். உலகின்மீது வெறுப்புணர்ச்சி, கோபம் ஆகியவை அடுக்கடுக்காகச் சுமத்தப்பட்டு வருகின்றன. அது காரணமாக நல்ல காரியங்கள் தொடர்ந்து பலகாலமாக நிறைவேற்றப்படாமற் போயிருக்கின்றன. மாருகத் தீமையே விளைவிக்கப்பட்டிருக்கிறது. நீ தூய்மை உள்ளவனுக இருந்தால், வலிமை உள்ளவனுக இருந்தால், நீ ஒருவனே உலகிலுள்ள அத்தனை பேருக்கும் சமமானவனுவாய்.

137. மற்றவர்களுடைய நன்மைக்காக என்னுடைய இந்த வாழ்க்கை அழிந்து போகிற அந்த

நாளும் வருமா? இந்த உலகம் வெறும் குழந்தை விளையாட்டு அல்ல. மற்றவர்களின் நன்மைக்காகத் தங்களுடைய இதயத்தின் இரத்தத்தைச் சிந்தி, பாதை அமைப்பவர்கள்தாம் பெரியோர்கள் ஆவார்கள். ஒருவர் தமது உடலைத் தந்து பாலம் ஒன்றை அமைக்கிறார். அந்தப் பாலத்தின் உதவியால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அந்த ஆற்றைக் கடந்துவிடுகிறார்கள். இப்படி நீண்ட நெடுங்காலமாக நடந்துகொண்டு வந்திருக்கிறது. இந்த முறை அப்படியே இருக்கட்டும். அப்படியே இன்றைக்கும் இருக்கட்டும்.

6. மதமும் ஒழுக்கமும்

138. பாமரனைப் பண்புள்ளவனாகவும், பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம் எனப்படும்.

139. மனிதன் முடிவில்லாத பிரம்மாண்டமான ஒரு வட்டம் போன்றவன். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியாக விளங்கும் பரிதி எங்குமில்லை. ஆனால் அந்த வட்டத்தின் மையம் குறிப்பிட்ட ஒரு புள்ளியில் அமைந்திருக்கிறது.

கடவுள் பிரம்மாண்டமான ஒரு பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றளவுப் பகுதியான பரிதியும் எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம், எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்திருக்கிறது. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இலக்கணம் இதுதான்.

140. சுயநலம், சுயநலமின்மை என்பவற்றைத் தவிரக் கடவுளுக்கும் சாத்தானுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. கடவுளுக்குத் தெரிந்த அளவுக்குச் சாத்தானுக்கும் எல்லாம் தெரியும். கடவுளுக்குச் சமமான ஆற்றல்கள் சாத்தானுக்கும் உண்டு. ஆனால் தெய்விகத்தன்மை மட்டும்தான் அதனிடம் இல்லை. எனவே அது சாத்தானாகவே இருக்கிறது.

இந்தக் கருத்தை நவீன உலகத்தோடு ஒப்பிட்டுப் பார். தெய்விகத்தன்மை இல்லாமல் பெறுகிற மிதமிஞ்சிய அறிவும் ஆற்றலும் மனிதர்களைச் சாத்தான்களாக்கிவிடுகின்றன.

141. நம்மை முன்னேற்றத்திற்கு அழைத்துச் செல்வதே நல்லொழுக்கம். கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வதே தீய ஒழுக்கம். மிருக இயல்பு, மனித இயல்பு, தெய்விக இயல்பு என்ற இந்த மூன்று குணங்களால் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். உன்னிடமுள்ள தெய்விகத் தன்மையை வளர்க்கக் கூடியதுதான் நல்லொழுக்கமாகும். உன்னிடமுள்ள மிருக இயல்பை அதிகரிக்கச் செய்வதே தீய ஒழுக்கம். மிருக இயல்பை உன்னிடமிருந்து அழித்துவிட்டு மனிதத்தன்மை கொண்டவனாக நீ மாற வேண்டும். அதாவது அன்புள்ளமும் தர்ம சிந்தனையும் உடையவனாக இருக்க வேண்டும்.

பிறகு நீ அந்த நிலையையுங்கூடக் கடந்து சென்று தூய ஸத்-சித்-ஆனந்தமாக ஆக வேண்டும். சுடும் தன்மை இல்லாத நெருப்பாகவும், அற்புதமான அன்புள்ளவனாகவும், ஆனால் அதே சமயத்தில் பாமர மனிதனின் உணர்ச்சி வசப்பட்ட அன்பு என்ற பலவீனத்திற்கும் துன்ப உணர்ச்சிக்கும் உட்படாதவனாகவும் நீ ஆகவேண்டும்.

142. சுயநலமற்ற தன்மையே கடவுள் ஆகும். ஒருவன் சிம்மாசனத்தில் வீற்றிருந்து தங்கத்தாலான அரண்மனையில் வாழ்ந்தபோதும் அறவே சுயநலம் இல்லாதவனாக இருக்கலாம். அப்போது அவன் கடவுளிடமே இருக்கிறான். மற்றொருவன் குடிசையில் வாழ்ந்து கந்தைத் துணியை உடுத்துபவனாக இருக்கலாம். அவனுக்கு உலகில் செல்வம் எதுவுமே இல்லாமலிருக்கலாம். அப்படி இருந்தும் அவன் சுயநலம் உடையவனாக இருந்தால் அவன் இலௌகிகத்தில் ஒரேயடியாக மூழ்கியவனே ஆவான்.

143. நீ உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான், நீ சமய வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறியாகும். ஒருவன் வாடிய முகத்தோடு இருப்பது குன்ம வியாதியின் விளைவாக இருக்கலாமேயன்றி, அது மத வாழ்க்கை ஆகாது. துன்பம் பாவத்தினால் ஏற்படுகிறது. அதைத் தவிர, பாவம் விளைவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. இருளடைந்த முகங்களோடு உனக்கு என்ன தொடர்பு வேண்டியிருக்கிறது? அப்படி இருப்பது பயங்கரமானது. உன் முகத்தில் இருள் சூழ்ந்திருந்தால், அன்றைத் தினம் நீ வெளியே

போகாமல் உன் அறையின் கதவை மூடிக்கொண்டு உள்ளேயே இரு. வெளியுலகத்திற்கு இந்த நோயைச் சுமந்துகொண்டு போவதற்கு உனக்கு என்ன உரிமை இருக்கிறது?

144. தீர்க்கதரிசிகளின் ஆற்றல் எங்கே இருந்தது என்பதை உலக வரலாற்றிலிருந்தே நீ அறிந்ததில்லையா? அது எங்கே இருந்தது? அவர்களின் அறிவாற்றலிலா இருந்தது? அவர்களில் எவராவது தத்துவத்தைப் பற்றியோ, மிகவும் நுட்பமான தர்க்க நியாயங்களைப் பற்றியோ அருமையான ஒரு நூலாவது எழுதியிருக்கிறார்களா? அவர்களில் ஒருவருமே அப்படி எதுவும் எழுதியதில்லை. ஒரு சில வார்த்தைகளை மட்டுமே அவர்கள் பேசினார்கள்.

நீ இயேசு கிறிஸ்துவைப் போன்ற மனநிலையைக் கொள். கிறிஸ்து பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். புத்தரைப் போன்ற மனநிலையைக் கொள். புத்தர் பெருமானாகவே நீ ஆகிவிடுவாய். உயர்ந்த மனநிலைதான் வாழ்க்கையாக அமைகிறது; வலிமையைத் தருகிறது; உயிர்நாடியாக விளங்குகிறது. அத்தகைய மனநிலை இல்லாமற் போனால், அறிவாற்றல் எவ்வளவுதான் வேலை செய்தாலும் கடவுளை அடைய முடியாது.

145. ஒரே வார்த்தையில் வேதாந்தத்தின் இலட்சியம்: 'மனிதனின் உண்மையான இயல்பை அறிந்து கொள்வது' என்பதுதான். மேலும், 'கண்ணுக்குப் புலப்படும் கடவுளாக விளங்கும் உன் சகோதரனையே நீ வழிபட முடியாவிட்டால் கண்ணுக்குப் புலப்படாமல் மறைந்திருக்கும் கடவுளை எப்படி நீ வழிபட முடியும்?'— இதுவே வேதாந்தம் அறிவுரையாக வழங்கும் செய்தியாகும்.

146. நீ உண்மையில் தூய்மையுள்ளவனாக இருந்தால் தூய்மை இல்லாததை நீ எப்படிப் பார்க்க முடியும்? ஏனென்றால், உனக்குள்ளே இருப்பதுதான் உனக்கு வெளியிலேயும் இருக்கிறது. நமக்குள்ளேயே அசுத்தம் இல்லாவிட்டால், அதை நாம் வெளியில் பார்க்க முடியாது—இந்த உண்மை, வேதாந்தத்தின் அனுஷ்டானப் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. வாழ்க்கையில் இந்தக் கருத்தை ஏற்று நடத்த நாம்

அனைவரும் முயற்சி செய்வோம் என்று நான் நம்புகிறேன்.

147. *உன்னிடமுள்ள தெய்விகத் தன்மைதான், 'கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார்' என்பதற்கு உரிய சான்றாகும். நீ ஒரு தீர்க்கதரிசியாக இல்லாவிட்டால் கடவுளைப் பற்றிய எந்த உண்மையும் ஒருபோதும் இருந்திருக்க முடியாது. நீ கடவுளாக இல்லாவிட்டால், கடவுள் என்ற ஒருவர் இருக்கவில்லை, இனி இருக்கப் போவதும் இல்லை.—இந்த உண்மையே வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியம் என்று வேதாந்தம் சொல்லுகிறது.

நாம் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசியாகவே ஆக வேண்டும். நீ ஏற்கனவே தீர்க்கதரிசியாகத்தான் இருக்கிறாய். ஆனால் அதை நீ அறியாமல் மட்டுமே இருக்கிறாய். இதை நீ உணரவே வேண்டும்.

ஆன்மாவினால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக்காதே. அப்படி நினைப்பது மதத்திற்கு மிகவும் முரண்பட்ட கருத்தாகும். பாவம் என்பது ஒன்று உண்டென்றால், அது, 'நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள்' என்று சொல்வதொன்றுதான் பாவம்.

148. கடவுள் இல்லாதது என்று எதுவுமே இல்லை என்று வேதாந்தம் சொல்லுகிறது. உயிருள்ள கடவுள் உனக்கு உள்ளேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார். அப்படியிருந்தும் நீ மாதாகோயில்களையும் ஆலயங்களையும் கட்டிக்கொண்டிருக்கிறாய். மேலும், எல்லா விதமான கற்பனைப் பிதற்றல்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கிறாய். மனித உடலிலுள்ள மனித ஆன்மா ஒன்றுதான் வழிபட வேண்டிய ஒரே கடவுளாகும். எல்லா விலங்குகளுங்கூடத் தெய்வத்தின் கோயில்கள்தாம். ஆனால், மனிதனே இவற்றுள் மேலானவன். கோவில்களில் தாஜ்மகாலைப்போல மனிதன் உயர்ந்தவன்.

---

*நீ தெய்வத்தன்மை நிறைந்தவனாகவே எப்போதும் இருந்துகொண்டிருக்கிறாய். எப்போதும் ஒரு தீர்க்கதரிசியாகவே இருக்கிறாய். கடவுளாக இருக்கிறாய்—என்று இங்கு அத்வைத முறையில் சுவாமிஜி குறிப்பிடுகிறார்.

கடவுளை நான் அத்தகைய கோவிலில் வழிபட முடியவில்லை என்றால், வேறு எந்தக் கோயிலும் எனக்கு எவ்விதப் பயனையும் தரப்போவதில்லை.

149. சமயசாதனையின் நுட்ப இரகசியமெல்லாம் கொள்கைகளில் இல்லை; அதை அனுஷ்டிப்பதில்தான் அடங்கியிருக்கிறது. நல்லவனாகவே இருந்து நன்மை செய்வதுதான் சமயசாதனையின் முழு உண்மையாகும். 'கடவுளே! கடவுளே!' என்று அழைத்துக்கொண்டிருப்பவன் சமயச் சான்றோன் ஆகிவிடமாட்டான். ஆனால் பரமபிதாவின் விருப்பத்தை நிறைவேற்றுகிறவனே சான்றோன் ஆவான்.

150. ஆன்மிக வாழ்க்கைக்கோ மனதுக்கோ உடலுக்கோ பலவீனத்தை உண்டுபண்ணும் எதையும் உன் கால்விரலாலும் தீண்டாதே. மனிதனிடம் இயற்கையாகப் புதைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவதே சமய வாழ்க்கையாகும். எல்லையில்லாத சக்தி சுருள் சுருளாக இந்தச் சிறிய மனித உடலுக்குள் சுருட்டி அடக்கி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தச் சக்தி விரிந்து பரந்துகொண்டே இருக்கிறது. இதுதான் மனிதனுடைய வரலாறு, சமயத்தின் வரலாறு, நாகரிகத்தின் வரலாறு, முன்னேற்றத்தின் வரலாறு ஆகிய அனைத்துமாகும்.

151. மனிதனுக்கு மன அமைதியைத் தருவதுதான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும். மறு உலகத்தில் இன்பம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த உலக வாழ்க்கையில் துன்பத்தை அனுபவிப்பது அறிவுடைய செயலாகாது. ஒருவன் இங்கேயே, இப்போதே, இன்பத்தைப் பெற வேண்டும். இப்படிப்பட்ட இன்பத்தைத் தரக்கூடிய மதம் எதுவாக இருந்தாலும் அந்த மதம்தான் சமுதாயத்திற்கு ஏற்ற உண்மையான மதமாகும்.

152. எப்போதெல்லாம் எந்த ஒரு மதம் வெற்றி பெறுகிறதோ அப்போதெல்லாம் அந்த மதத்துக்குப் பொருளாதார வலிமை இருக்க வேண்டும். அதைப் போல ஆயிரக் கணக்கான மதப் பிரிவுகள் அதிகாரத்திற்கு வரப் போராடியபடி இருக்கலாம். ஆனால், உண்மையில் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கக் கூடிய மதம் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றும். வயிறுதான் மனிதனுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

அவன் நடந்து செல்லும்போது வயிறுதான் முதலில் போகிறது. பிறகு அதைத் தொடர்ந்து அவனுடைய தலை போகிறது, இதை நீங்கள் பார்த்ததில்லையா? மனிதனின் தலை முதலில் போகப் பல யுகங்கள் ஆகும்.

உங்களுடைய குழந்தைக் கனவுகள் கலைய ஆரம்பித்து, பொருள்களை உள்ளது உள்ளபடியே நீங்கள் பார்க்க ஆரம்பிக்கும்போது, உங்களுடைய தலை போய் விடுகிறது. தலை முதலில் போக ஆரம்பிக்கும் அதே சமயத்தில் நீங்களே வெளியே போய்விடுவீர்கள்.

153. இரசாயனமும் இயற்கை விஞ்ஞானமும் எப்படி இந்தப் பௌதிக உலகம் பற்றிய உண்மைகளைக் கையாள்கின்றனவோ, அதைப் போலவே மதம் அரிய தத்துவ உண்மைகளைக் கையாள்கிறது. ஒருவன் இரசாயனத்தைக் கற்க இயற்கை என்னும் புத்தகத்தைப் படிக்க வேண்டும். உன்னுடைய மனம், இதயம் ஆகியவை தாம் மதத்தைக் கற்பதற்கு நீ படிக்க வேண்டிய நூல்களாகும்.

ஞானி பெரும்பாலும் பௌதிக விஞ்ஞானம் பற்றித் தெரியாதவராக இருக்கிறார். ஏனென்றால், அவர் தமக்குள் இருக்கும் புத்தகத்தைப் படிக்கிறார். அது பௌதிக விஞ்ஞானத்தைத் தெரிந்து கொள்வதற்குத் தவறான புத்தகமாகும்.

விஞ்ஞானியுங்கூடப் பெரும்பாலும் மதத்தைப் பற்றித் தெரியாதவராக இருக்கிறார். ஏனென்றால், அவருங்கூடத் தவறான புத்தகத்தையே படிக்கிறார்; அதாவது அவர் தமக்கு வெளியே உள்ள புத்தகத்தைப் படிக்கிறார்.

154. 'நான் மதப்பற்று உள்ளவனாக இருக்க விரும்பினேன். இந்தத் தத்துவங்களை எல்லாம் அனுபவித்து அறிந்துகொள்ள விரும்பினேன். ஆனால் அவ்விதம் அவற்றை என்னால் அனுபவித்து அடைய முடியாமற் போய்விட்டது. ஆதலால், நான் எதையுமே நம்புவது கிடையாது' என்று சொல்லுகிற பல மனிதர்களை நீ இந்த உலகிலே பார்க்கலாம். படித்தவர்களில் கூட இப்படிப்பட்டவர்கள் இருப்பதை நீ காணலாம். 'என் வாழ்நாள் முழுவதும் மதப்பற்று உள்ளவனாக இருப்பதற்கு நான் முயற்சி செய்தேன்; ஆனால் அதிலே

ஒன்றுமில்லை' என்று மக்களில் பலர் உன்னிடம் சொல்வார்கள். ஆனால் அதே சமயத்தில் நீ இந்த நிகழ்ச்சியையும் காண்பாய்: ஒருவர் இரசாயன சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்ற ஒரு பெரிய விஞ்ஞானியாக இருக்கிறார். அவர் உன்னிடம் வந்து இரசாயனத்தைப்பற்றிச் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். ''நான் இரசாயன விஞ்ஞானியாகத் திகழ வேண்டும் என்று வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் அப்படியிருந்தும் என் முயற்சியில் நான் ஒன்றும் வெற்றி பெற்றதாகத் தெரியவில்லை, எனவே இரசாயனத்தைப் பற்றிய எதையும் நான் நம்புவதில்லை'' என்று நீ அவரிடம் சொல்வாயானால் அவர் உன்னைத் திருப்பி, ''எப்போது நீ முயற்சி செய்தாய்?'' என்று கேட்பார். ''நான் தூங்கச் செல்லும்போது, 'ஓ இரசாயனமே! நீ என்னிடம் வா' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தேன். அது என்னிடம் வரவே இல்லை'' என்று நீ சொல்வாய். இரசாயன விஞ்ஞானி உன்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு, ''அப்பனே! இரசாயனத்தைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு அது வழியே அல்ல. நீ இரசாயனப் பரிசோதனைச் சாலைக்குச் சென்று, எல்லா வகையான அமிலங்களையும் காரங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு ஏன் அவ்வப்போது உன் கைகளைச் சுட்டுப் பொசுக்கிக் கொள்ளவில்லை? நீ அப்படிச் செய்திருந்தால் இரசாயனத்தைப் பற்றிய ஞானம் உனக்கு வந்திருக்கும்'' என்று சொல்லுவார். மதம் சம்பந்தமாக அப்படிப்பட்ட பெரிய முயற்சியை நீ எடுத்துக்கொள்கிறாயா? ஒவ்வொரு துறைக்கும் அதைக் கற்பதற்கென்று ஒரு தனி வழிமுறை இருக்கிறது. அத்தகைய முறையில்தான் மதத்தையும் கற்க வேண்டும்.

155. இலெளகிக உலகம் பற்றிய சக்தியின் மையமாக ஐரோப்பா இருக்கிறது. அது தன்னுடைய இந்த நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும். ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையாக அது தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளாவிட்டால், இன்னும் ஐம்பதே ஆண்டுகளில் நொறுங்கி அழிந்துவிடும். ஐரோப்பாவை இத்தகைய அழிவிலிருந்து காப்பாற்றக் கூடியவை உபநிஷத உண்மைகளே ஆகும். (சுவாமிஜி 1897-இல் சொன்னது.)

156. வேதங்கள், பைபிள், குரான் ஆகிய இவற்றுக்கும் அப்பால் மக்களை நாம் அழைத்துப் போக விரும்புகிறோம். என்றாலும் இந்தச் செயலை வேதங்கள், பைபிள், குரான் ஆகியவற்றைச் சமரசப்படுத்தி வைப்பதன் மூலமாகத்தான் சாதிக்க முடியும். எல்லா மதங்களும், ஒரு பரம்பொருளான அந்த ஒரே ஒரு மதத்தின் புறத் தோற்றங்களே ஆகும். இந்த உண்மையை மனிதகுலத்திற்குப் போதிக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஒவ்வொருவனும் தனக்கு மிகவும் பொருத்தமாக உள்ள பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்வான்.

157. ஒழுக்கம் உள்ளவனாக இரு. தைரியம் உள்ளவனாக இரு. இதய பூர்வமான, உறுதி பிறழாத ஒழுக்கத்தில் நிலைபெற்றிரு. மத சம்பந்தமான தத்துவ உண்மைகளைப் போட்டு உனது மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம். கோழைதான் பாவம் செய்கிறான். தைரியசாலி ஒருபோதும் பாவம் செய்வதில்லை. மனதால்கூட அவன் பாவத்தை நினைப்பதில்லை.

158. சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுதான் ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணம் ஆகும்.

159. ஒரு மனிதன் மிகவும் அருமையான நடையில் சிறந்த கருத்துக்களைப் பற்றிப் பேசுபவனாக இருக்கலாம். ஆனால், அது மக்களைக் கவருவதாக இருக்காது. மற்றொருவன் பேச்சில் அழகிய மொழி, கருத்து என்னும் இவற்றுள் எதுவும் இல்லாமலிருக்கலாம். ஆனால், அவனுடைய சொற்கள் கேட்பவர்களின் உள்ளங்களைக் கவர்கின்றன. அவனுடைய ஒவ்வொரு செயலும் சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்தச் சக்தி ஓஜஸ்ஸினால் வருவதாகும்...கற்பொழுக்கம் உடைய ஆண்களும் பெண்களும் மட்டுமே ஓஜஸ்ஸை மேலே எழுப்பி மூளையில் சேமித்து வைக்க முடியும். ஆகையால்தான் பிரம்மசரியம் எப்போதும் மிகவும் உயர்ந்த ஒழுக்கமாகக் கருதப்பட்டு வருகிறது. ஒருவன் பிரம்மசரியத்திலிருந்து தான் வழுவியதாக உணர்ந்தால், ஆன்மிகச் சக்தி அவனிடமிருந்து போய்விடுகிறது. அத்தகையவன் தன் மன உறுதியை இழந்துவிடுகிறான். இதனால்தான், மகத்தான ஆன்மிக வலிமையைப் பெற்ற பெரியோர்களை உருவாக்கித் தந்த உலகிலுள்ள எல்லா மதச் சம்பிரதாயங்

களும் பரிபூர்ணப் பிரம்மசரியத்தை எப்போதும் வலியுறுத்தி வந்திருக்கின்றன.

160. நீதிநூல்கள் எப்போதும் 'நான் அல்லேன், நீயே' என்று சொல்லுகின்றன. அவற்றின் இலட்சியம் 'சுயநலம்' அல்ல, 'சுயநலமின்மை' என்பதே ஆகும்.

ஒருவன் புலன்களின் மூலம் எல்லையற்ற ஆற்றலையோ, முடிவில்லாத பேரின்பத்தையோ அடைவதற்கு முயற்சி செய்யும்போது, அவன் தன் குறுகிய இயல்பை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறான். வீணான இந்த இயல்பை நாம் கைவிட வேண்டும்—இதையேதான் நீதி நூல்கள் கூறுகின்றன.

'நானே முதலில் இருக்க வேண்டும்' என்று புலன்கள் கூறுகின்றன. 'நான் கடைசியில் வைக்கப்பட வேண்டும்' என்று நீதிநூல்கள் கூறுகின்றன. இந்தத் தியாகத்தின் அடிப்படையில்தான் எல்லா நீதிநூல்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இலௌகிக உலகில் உள்ள 'நான்' என்னும் குறுகிய நினைவை வளரவொட்டாமல் அழிக்கும் முறையில்தான் நீதிநூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

அகண்டமான மெய்ப்பொருள் இந்த இலௌகிக உலகில் ஒருபோதும் வெளிப்படுவதில்லை. அவ்விதம் வெளிப்படுவதற்குச் சாத்தியமும் இல்லை. அது அப்படி வெளிப்படும் என்று நாம் நினைத்துப் பார்க்கவும் வழி இல்லை.

161. மக்கள் ஏன் ஒழுக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை இலௌகிகப் பயன்களை மட்டும் குறிக்கோளாகக் கொண்டவனுடைய கருத்துக்களால் விளக்கிக் காட்ட முடியாது. ஏனென்றால், முதலாவதாக, அப்படிப்பட்டவனுடைய மனப்பான்மையிலிருந்து எந்த விதமான ஒழுக்க நெறியையும் நாம் பெற முடியாது. மெய்ப்பொருளை நாடிச் செல்லும் நமது முயற்சியும், புலன்களுக்கும் அப்பாற்பட்ட நிலையை அடைவதற்கு மேற்கொள்ளும் முயற்சியும் ஆகிய இவை நடைமுறை வாழ்வுக்கு ஒத்துவராதவை; அசட்டுத்தனமானவை; அவற்றை நாம் புறக்கணித்துக் கைவிட்டுவிட வேண்டும் என்று அவன் விரும்புகிறான்.

ஆனால் அதே மூச்சில் அவன், நம்மை நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கும்படியும் உலகிற்கு நன்மை செய்யும்படியும் கூறுகிறான். உலகத்திற்கு நான் ஏன் நன்மை செய்ய வேண்டும்? நன்மை செய்வது இரண்டாவதாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம். முதலில் நமக்கென்று ஓர் இலட்சியம் இருந்தாக வேண்டும். ஒழுக்கமாக இருப்பதே நம்முடைய இலட்சியத்தின் முடிவல்ல. மாறாக, அது ஓர் இலட்சியத்தை அடையச் செய்யும் பாதையாக மட்டும்தான் இருக்கிறது.

முடிவான இலட்சியம் என்ற ஒன்று இல்லாமற் போனால், நாம் ஏன் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்க வேண்டும்? நான் எதற்காக மற்றவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும்? நான் ஏன் மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யக் கூடாது? இன்பமாக இருப்பதுதான் மக்களுடைய இலட்சியம் என்றால், நான் என்னை மகிழ்ச்சியுடன் வைத்துக்கொண்டு மற்றவர்களை ஏன் துன்பத்தில் ஆழ்த்திவிடக் கூடாது? அப்படிச் செய்வதிலிருந்து என்னை எது தடுத்து நிறுத்துகிறது?

இரண்டாவதாக, இலௌகிகப் பயன் வேண்டும் என்ற அடிப்படை மிகவும் குறுகலானது. இப்படிப்பட்டவர்களின் கருத்துக்கள் தற்காலச் சமுதாயத்தின் சூழ்நிலைகளில் மட்டும்தான் வேலை செய்ய முடியும். இந்தச் சூழ்நிலைகளைக் கடந்து, அப்பால் அந்தக் கருத்துக்களுக்கு எந்தவித மதிப்பும் கிடையாது. ஆனால் மதம், ஆன்மிக வாழ்க்கை ஆகியவற்றிலிருந்து பெறப்படும் ஒழுக்கம், நீதி ஆகிய இவை பரந்த மனிதகுலம் முழுவதிலும் புகுந்து நற்செயலாற்ற முடியும். அது ஒரு தனி மனிதனை எடுத்துக்கொள்கிறது. என்றாலும், அதன் தொடர்புகள் அனைத்தும் அகண்டமான மெய்ப்பொருளோடு தொடர்பு கொண்டவையே ஆகும். ஏனென்றால், சமுதாயம் என்பது இத்தகைய தனி மனிதர்கள் பலருடைய ஒரு தொகுப்பே தவிர வேறு இல்லை.

7. நமது தாய்நாடு

162. இந்தியா அழிந்துவிடுமா? அது அப்படி அழிந்துவிடுமானால் உலகிலிருந்து எல்லா ஞானமும் அழிந்து போய்விடும். நிறைந்த ஒழுக்கங்கள் எல்லாம் மறைந்தே போய்விடும். சமயத்தின் மீது நமக்குள்ள

இதயபூர்வமான இனிய அனுதாப உணர்ச்சிகள் எல்லாம் அழிந்து போய்விடும். எல்லா உயர்ந்த இலட்சியங்களும் மறைந்து போய்விடும். அவை இருந்த இடத்திலே காமமும் ஆடம்பரமும் ஆண்தெய்வமாகவும் பெண் தெய்வமாகவும் குடிகொண்டு ஆட்சி செய்யும். பணமே அங்குப் பூசாரியாக உட்கார்ந்துகொள்ளும். வஞ்சகம், பலாத்காரம், போட்டி ஆகியவற்றையே அது தன்னுடைய பூஜைக்கிரியை முறைகளாக வைத்துக் கொள்ளும். மனித ஆன்மாவையே அது பலிபீடத்தில் பலியாக்கும். ஆனால் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி என்றுமே நடக்கப் போவதில்லை.........

உயர்ந்த பண்பு, ஒழுக்கம், ஆன்மிகம் ஆகிய எல்லாச் சிறந்த பெருமைகளுக்கும் பிறப்பளித்தவள் நமது இந்தியத் தாய். முனிவர்கள் பலர் வாழ்ந்த நாடு இந்த நாடு. கடவுளுக்குச் சமமான மகான்கள் இன்னமும் இந்த நாட்டிலேதான் வாழ்ந்து வருகிறார்கள். இத்தகைய இந்தியாவா அழிந்து போய்விடும்?

எனது அருமைச் சகோதரா! ஒரு பழைய கை விளக்கை எடுத்துக் கொண்டு, இந்தப் பரந்த உலகிலுள்ள நாடு நகரங்கள், பட்டி தொட்டிகள், காடு கழனிகள் எல்லாவற்றின் ஊடேயும் உன்னை நான் பின் தொடர்கிறேன். உன்னால் முடியுமானால், இப்படிப்பட்ட தலைசிறந்த மகான்களை வேறு எந்த நாட்டிலாவது தேடிக் காட்டு, பார்க்கலாம்.

163. நமது தாய்நாட்டிற்கு இந்த உலகம் பட்டிருக்கும் கடன் மகத்தானதாகும். நாட்டுக்கு நாடு எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் பொறுமை உள்ள இந்துவுக்கு, சாதுவான இந்துவுக்கு உலகம் கடமைப் பட்டிருப்பதைப் போன்று, பூமியிலே வேறு எந்த இனத்துக்கும் உலகம் இவ்வளவு பெரிய அளவிலே கடன்பட்டிருக்கவில்லை என்பதை நீ பார்க்கலாம்........

கிரீஸ் நாகரிகம் தோன்றுவதற்கு முன்பே, ரோம் நாகரிகம் பிறப்பதற்கு வெகு நீண்ட காலத்திற்கு முன்பே, தற்கால இந்த நவீன ஐரோப்பியர்களின் முன்னோர் காட்டுமிராண்டிகளாகத் தங்களுடைய உடலிலே பச்சை குத்திக்கொண்டு காடுகளில் திரிந்து வாழ்ந்த அந்தக் காலத்திலேயே, நமது நாட்டில் மிக உயர்ந்த நாகரிகம் இருந்து வந்திருக்கிறது. ஏன், அதற்கும் முன்பேகூட

வரலாற்றிலே குறிப்புக்களை கண்டுபிடிக்க முடியாத, சரித்திரமே புக முடியாத, இருண்ட அவ்வளவு மிகப் பழமையான காலத்திலிருந்து இன்று வரையிலும் பல உயர்ந்த கருத்துக்களும் சிந்தனைகளும் இந்த நாட்டிலிருந்துதான் அலையலையாக வெளியே சென்று பரவியிருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் அன்புடனும் வாழ்த்துக்களுடனும் சமாதானத்துடனுமே சென்றிருக்கின்றன.

164. மற்ற ஆரிய நாடுகளின் முன்னேற்றத்தின் முன்பு, இந்தியாவின் முன்னேற்றம் ஒளி மங்கிக் காணப்படுவதற்கான காரணத்தை நீ சொல்ல முடியுமா? அவள் அறிவாற்றலில் குறைந்தவளா? அல்லது திறமையில்தான் குறைந்தவளா? அவளுடைய கலை, கணித அறிவு, தத்துவங்கள் ஆகிய இவற்றைப் பார். பிறகு அறிவாற்றலில் இந்திய அன்னை குறைந்தவள் என்று நீ சொல்ல முடியுமா? அவள் தன்னுடைய மயக்கத்திலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, தனது நீண்ட நெடுங்கால உறக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டும். இந்த ஒன்றுதான் உலக நாடுகளின் முன்னணியில் தனக்கு உரிய உயர்ந்த இடத்தை அவள் திரும்பப் பெறுவதற்குத் தேவையாகும்... துறவும் தொண்டுமே இந்தியாவின் இலட்சியங்கள். இந்தப் பாதையிலே மேலும் மேலும் அவளை ஈடுபடுத்துங்கள். மற்றவை தாமாக வந்து சேரும்.

165. அமரத்துவம் வாய்ந்த எனது அருமைக் குழந்தைகளே! நமது நாடு என்னும் இந்தக் கப்பல், பல்லாயிரக் கணக்கான நீண்ட நெடுங்காலமாகத் தனது நாகரிகத்தை ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறது. தனது எண்ணற்ற அரும்பெரும் செல்வங்களால் இந்த உலகம் முழுவதையும் மேலும் மேலும் வளமாக்கிக் கொண்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான நூற்றூண்டுகளாக நமது இந்தக் கப்பல், வாழ்க்கை என்னும் கடலைக் கடக்க நமக்கு உதவி புரிந்து வந்திருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்களை வாழ்க்கைக் கடலின் துன்பமற்ற மறுகரைக்கு அழைத்துச் சென்றபடியே இருக்கிறது. ஆனால், இன்று அந்தக் கப்பலில் ஓர் ஓட்டை விழுந்து பழுதடைந்து போயிருக்கிறது. இந்த நிலைக்கு உங்களுடைய தவறுகளே காரணம். அல்லது வேறு காரணங்களும் இருக்கலாம். அதைக் குறித்து நாம் அவ்வளவாகப் பொருட்படுத்த

வேண்டியதில்லை. நீங்கள் அதில் அமர்ந்துகொண்டிருக் கிறீர்கள். இப்போது நீங்கள் செய்யப்போகும் காரியம் என்ன? அந்தக் கப்பலைத் திட்டிக்கொண்டு, நீங்கள் ஒரு வருடன் ஒருவர் சண்டை போட்டுக்கொண்டு இருக்கப் போகிறீர்களா? அல்லது நீங்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் ஒற்றுமையாக இணைந்து, அந்தக் கப்பலைப் பழுது பார்க்க உங்கள் திறமைகள் அனைத்தையும் பயன் படுத்தப் போகிறீர்களா? நமது இதயத்தை மனமுவந்து அந்தப் பணிக்கு நாம் தருவோமாக. அல்லது அந்தப் பணியிலே தோல்வி அடைந்தால், மனதில் திட்டிக் கொண்டிருக்காமல் வாழ்த்திக்கொண்டே அனைவரும் ஒன்ருக மூழ்கி இறந்துவிடுவோமாக.

166. ஓர் அரக்கி தன்னுடைய உயிரை ஒரு சிறிய பறவையில் வைத்திருந்தாள். அந்தப் பறவை கொல்லப்பட்டாலன்றித் தன்னை ஒருவராலுமே கொல்ல முடியாது என்று சொல்லிக்கொண்டிருந்தாள். இந்த அரக்கியின் கதையை நாம் குழந்தைகளாக இருந்தபோது கேட்டிருக்கிறேம். ஒரு நாட்டின் வாழ்க்கையும் அதைப் போன்றதே ஆகும்...... இப்போது நமது நாடாகிய இந்த அரக்கியின் உயிர்நாடி எங்கே இருக்கிறது என்பது உங்களுக்குப் புரிந்திருக்கும். அது மதத்தில்தான் இருக் கிறது. இதை ஒருவராலுமே அழித்துவிட முடியவில்லை. எனவேதான் இந்திய நாடு எத்தனை எத்தனையோ துன் பங்களையும் சோதனைகளையும் கடந்து இன்னமும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது. 'ஒரு நாட்டினுடைய உயிர் நாடியைச் சமய வாழ்க்கையில் வைத்துக்கொண்டிருப் பதனுல் என்ன நன்மை ஏற்பட்டுவிடப்போகிறது? அதை மற்ற நாடுகளில் உள்ளதைப் போன்று, சமுதாயச் சுதந் திரத்திலோ அல்லது அரசியல் சுதந்திரத்திலோ வைத் தால்என்ன?'—என்று படித்த இந்தியர் ஒருவர் கேட் கிருர். இவ்வாறு பேசிக்கொண்டிருப்பது மிகவும் சுலபம்........உண்மை இதுதான்: ஓர் ஆறு தன்னு டைய உற்பத்தி ஸ்தானமாகிய மலையிலிருந்து ஓராயிரம் மைல் தூரம் கீழே இறங்கி ஓடி வந்திருக்கிறது. அந்த ஆறு மீண்டும் தனது உற்பத்தி ஸ்தானத்துக்குத் திரும்பிப் போகுமா? அல்லது போகத்தான் முடியுமா? ஒருவேளை எப்போதாவது அந்த ஆறு அப்படித் திரும்பிப் போக முயற்சி செய்யுமானல், நாலாபுறங்களிலும் சிதறி, ஒன்றுமே இல்லாமல் வற்றிப் போய்விடும். எப்படி இருந்

தாலும், அந்த ஆறு, பரந்த அழகிய சமவெளிகளில் பாய்ந்தோடியோ அல்லது கரடுமுரடான நிலத்தில் பாய்ந்து சென்ருே, விரைவிலோ அல்லது காலம் தாழ்ந்தோ உறுதியாகக் கடலில் சென்று கலக்கத்தான் போகிறது. பதினுயிரம் ஆண்டுகளாக நமது நாட்டில் இருந்து வரும் நமது சமுதாயத்தின் வாழ்க்கை அமைப்பு முறையைத் தவறு என்று சொன்னுல், அதைத் திருத்து வதற்கு வேறு வழியே கிடையாது. இப்போது அதற்கு ஒரு புதிய இயல்பை உருவாக்குவதற்கு முயற்சி செய் தால், அது அழிவில்தான் முடியும். இந்த முடிவு தவிர்க்க முடியாததாகிவிடும்.

167. நமது நாட்டின் உயிர் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்த்தால் சாம்பல் பூத்து இறந்து விட்டதைப் போலக் காணப்படுகிறது. ஆனுல் அதன் அடியில் நெருப்பைப் போன்று அது இன்றும் கனன்று எரிந்துகொண்டிருக்கிறது. நமது நாட்டின் வாழ்க்கை மதத்தில்தான் அமைந்திருக்கிறது. அதன் மொழியும் மதம்தான்; மதமே அதனுடைய கருத்துக்கள்; அத னுடைய அரசியல், சமுதாயம், நகராட்சி மன்ற அமைப் புக்கள், பிளேக் தடுப்பு வேலைகள், பஞ்ச நிவாரணப் பணிகள்—ஆகிய இவை எல்லாமே மதத்தின் மூலமாகத் தான் நடத்தப்பட்டு வந்திருக்கின்றன. இனிமேலும் அப்படியே நடத்தப்பட வேண்டும். அவ்விதம் இந்தப் பணிகள் நடத்தப்படாவிட்டால், எனது நண்பரே, உம்முடைய எல்லாக் கூச்சல்களும் புலம்பல்களும் ஒன்றுமே இல்லாமல் பயனற்றவையாக முடிந்து போகும்.

168. ஒவ்வொரு நாட்டிலும் மேற்கொள்ளப் படும் வழிமுறைகள் ஒரே மாதிரியாகத்தான் இருக் கின்றன. வலிமை படைத்த ஒருசிலர் கட்டளை இடு கிருர்கள். அவற்றை எல்லாம் எஞ்சியுள்ள மக்கள் அனை வரும் செம்மறி ஆடுகளைப் போல, முடிந்த முடிவுகளாக ஏற்றுப் பின்பற்றி நடப்பார்கள். அவ்வளவுதான் விஷயம். உங்களுடைய பாராளுமன்றம், சட்டசபை, வாக்களிப்பு முறை, உங்கள் பெரும்பான்மை மக்க ளுடைய இரகசிய வாக்களிப்பு முறை—ஆகிய இவை அனைத்தையும் நான் பார்த்திருக்கிறேன். எனது நண் பரே, இவை எல்லாம் எல்லா இடத்திலும் ஒரே மாதிரி

யாகத்தான் நடைபெறுகின்றன...இப்போது இங்கு இருக்கிற கேள்வி இதுதான்: இத்தகைய வலிமையைப் பெற்றவர்கள் இந்தியாவிலே யார் இருக்கிருர்கள்? ஆன் மிகத் துறையில் மிகப் பெரும் வலிமை படைத்த சமயச் சான்ருேர்களிடையே அவர்கள் இருக்கிருர்கள். அவர்கள் தாம் நமது சமுதாயத்தை முன்னின்று வழி நடத்து கின்றனர். தேவைப்படும்போது மீண்டும் அவர்களே சமூகத்தின் விதிமுறைகளையும் பழக்க வழக்கங்களையும் மாற்றியமைக்கிருர்கள். அவர்கள் சொல்வதை நாம் அமைதியுடன் கேட்கிருேம். அவர்களின் கட்டளைகளைப் பின்பற்றி நடக்கவும் செய்கிருேம்.

169. முதலில் இதை நீ புரிந்துகொள்ள முயற்சி செய். மனிதன் சட்டங்களை உருவாக்குகிருஞ அல்லது சட்டங்கள் மனிதனை உருவாக்குகின்றனவா? மனிதன் பணத்தைச் சம்பாதிக்கிருஞ அல்லது பணம் மனிதனைப் படைக்கிறதா? பெயரையும் புகழையும் மனிதன் தேடிக் கொள்கிருஞ அல்லது பேரும் புகழும் மனிதனை உரு வாக்குகின்றனவா? எனது நண்பனே, முதலில் மனிதனுக இரு. அதன் பிறகு இவை எல்லாம் தாமாகவே உன்னைத் தொடர்ந்து வருவதைக் காண்பாய். வெறுக்கத்தக்க பொருமையையும், நாய்களைப் போல ஒருவரை ஒருவர் பார்த்துப் பொருமையுடன் குரைத்துக்கொண்டிருப் பதையும் விட்டொழித்துவிடு. ஒரு நல்ல இலட்சியத் துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத் துடன் வீரனுக விளங்கு. நீ மனிதனுகப் பிறந்திருக் கிருய். நீ வாழ்ந்து மறைந்ததற்கு உன் பின்னுல் ஓர் அழியாத அறிகுறி எதையாவது விட்டுச் செல்.

170. உண்மை, அன்பு, நேர்மை ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நீ நேர்மை உள்ளவனுக இருக்கிருயா? இறந்தே போனுலும் சுயநலம் இல்லாதவனுக இருக்கிருயா? அன்பு செலுத்துபவனுக இருக்கிருயா? அப்படியானுல் மரணத்துக்கும் நீ அஞ்ச வேண்டியதில்லை.

எனது அருமைக் குழந்தைகளே! முன்னேறிச் செல் லுங்கள். பரந்த இந்த உலகம் ஒளியை வேண்டுகிறது. அதை எதிர்பார்க்கிறது. இந்தியா மட்டும் அத்தகைய ஒளியைப் பெற்றிருக்கிறது. ஜாலவித்தையிலே இந்தியா அந்த விளக்கைப் பெற்றிருக்கவில்லை. போலித் தன்மை

யினுலும் அந்த விளக்கைப் பெற்றிருக்கவில்லை. ஆனுல் உண்மையான மதத்தின் தலைசிறந்த சமய போதனை யாகவும் மிகவும் உயர்ந்த ஆன்மிக உண்மையாகவும் அந்த விளக்கை இந்தியா பெற்றிருக்கிறது. ஆகையால் தான் பலவிதமான இன்ப துன்பங்களில் இருந்தும் இன்று வரையிலும் கடவுள் இந்தியாவைப் பாதுகாத்து வைத்திருக்கிருர். இப்போது அதற்கு உரிய சரியான நேரம் வந்துவிட்டது.

எனது வீரக் குழந்தைகளே, நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க்குட்டிகளின் குரைப்பைக் கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. ஆகாயத்தின் இடியோசைகளைக் கேட்டும் நீங்கள் அஞ்ச வேண்டாம். எழுந்து நின்று வேலை செய்யுங்கள்.

171. மிருகபலத்தால் அல்லாமல், ஆன்மிக பலத்தால் மட்டுமே இந்தியா எழுச்சி பெறப்போகிறது. அழிவு முறையின் மூலமாக அதன் எழுச்சி உண்டாகப் போவதில்லை. மாருக, அமைதி, அன்பு ஆகிய முறை களின் மூலமாகத்தான் இந்தப் பணி நடைபெறும்........ புராதன பாரத அன்னை மீண்டும் ஒரு முறை விழிப் படைந்துவிட்டாள். தனது அரியணையிலே அவள் அமர்ந் திருக்கிருள். புத்திளமை பெற்று, என்றுமே இல்லாத அரும்பெரும் மகிமைகளோடும் அவள் திகழ்கிருள்— இந்தக் காட்சியைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போலத் தெளிவாக நான் பார்க்கிறேன். அமைதியும் வாழ்த்தும் நிறைந்த குரலில் இந்தப் பாரத அன்னையை உலகம் முழுவதிலும் பிரகடனப்படுத்துங்கள்.

172. கையில் கலப்பை பிடித்த உழவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழும்பட்டும்! மீனவர்கள், சக்கிலியர்கள், தோட்டிகள் ஆகியவர்களின் குடிசைகளிலிருந்து புதிய இந்தியா எழட்டும்! பலசாக்குக் கடைகள், பலகாரக் கடைகளிலிருந்தும் அவள் தோன் றட்டும்! தொழிற்சாலைகள், கடைவீதிகள், சந்தைகள் ஆகியவற்றிலிருந்தெல்லாம் புதிய இந்தியா எழுந்து வெளிவரட்டும்!

173. இந்தியர்களாகிய நம்மிடம் மிகப் பெரிய ஒரு குறைபாடு இருக்கிறது. அது காரணமாக நாம் மிகவும் துன்பப்படுகிறோம். அதாவது, நிரந்தரமான ஒரு

ஸ்தாபனத்தை நாம் உருவாக்க இயலாதவர்களாக இருக்கிறோம். அதற்குக் காரணம், நம்முடைய அதிகாரத்தைப் பிறருடன் நாம் பங்கிட்டுக்கொள்ள ஒருபோதும் விரும்புவதில்லை. நாம் இறந்துபோன பிறகு என்ன நடக்கும் என்பதைப்பற்றியும் நாம் ஒருபோதும் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

174. ஜெனரல் ஸ்ட்ராங் (General Strong) என்னும் எனது ஆங்கிலேய நண்பர் ஒருவர், சிப்பாய்க் கலகத்தின் போது இந்தியாவில் இருந்தார். அவர் சிப்பாய்க் கலகம் பற்றிய பல கதைகளை எனக்குக் கூறுவது வழக்கம்.

ஒரு நாள், நான் அவருடன் பேசிக்கொண்டிருந்த போது இடையில் அவரைக் கேட்டேன்: ''சிப்பாய்கள் போதுமான அளவுக்குத் தேர்ச்சி பெற்ற வீரர்களாக இருந்திருக்கிறார்கள். மேலும் அதோடு அவர்களிடம் தேவையான அளவு துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் உணவுப் பொருள்களும் இருந்திருக்கின்றன. அப்படி இருந்தும் அவர்கள் ஏன் படுதோல்வியடைந்தார்கள்?''

அதற்கு அவர், ''சிப்பாய்க் கலகத்தின் படைத் தலைவர்கள், போரில் தாங்கள் முன்னணியில் ஈடுபடுவதற்குப் பதிலாக, படைக்குப் பின்னால் பாதுகாப்பான ஒரு பகுதியில் இருந்துகொண்டு, 'வீரர்களே, சண்டை போடுங்கள்!' என்று கத்திக்கொண்டிருந்தார்கள். தலைமை ஏற்பவர்கள், தாங்கள் முதலில் மரணத்தை எதிர்நோக்க முன்வந்தாலன்றி, எஞ்சிய படைவீரர்கள் முழுமனதுடன் போரில் ஈடுபட முன்வரமாட்டார்கள்'' என்று பதில் சொன்னார்.

ஒரு தலைவன் என்பவன் தன்னுடைய தலையைப் பலி கொடுக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். ஓர் இலட்சியத்துக்காக நீ உன் உயிரையும் அர்ப்பணிக்கக் கூடியவனாக இருந்தால்தான், நீ ஒரு தலைவனாக இருக்க முடியும். ஆனால் நாம் அனைவரும் தேவையான தியாகம் எதையும் செய்யாமலேயே தலைவர்களாகிவிட விரும்புகிறோம். அதன் விளைவு வெறும் பூஜ்யமாக முடிந்து போய்விடுகிறது. நாம் சொல்வதை ஒருவரும் கேட்பதில்லை.

175. முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக்கொள். மேலைநாட்டு மக்களிடையே சுதந்திர மனப்பான்மை மிகவும் அதிகம். என்றாலும் அவர்களிடம், கீழ்ப்படியும் தன்மையும் அதற்கு நிகராகவே இருக்கிறது. ஆனால் இங்கு நாமோ, கர்வம் கொண்டவர்களாக இருக்கிறோம். இந்த உணர்ச்சி எப்போதும் எந்தக் காரியத்தையும் சாதிப்பதில்லை. பெருமளவில் துணிவு, எல்லையற்ற வீரம், அளவு கடந்த ஆற்றல், அதோடு இவை அனைத்திற்கும் மேலாக முழு அளவிலான கீழ்ப்படியும் தன்மை—ஆகிய இந்தக் குணங்கள்தாம் தனி மனிதனின் முன்னேற்றத் துக்கும் ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கும் இட்டுச் செல்கின்றன. இத்தகைய குணங்கள் நம்மிடம் அறவே இல்லாமற் போய்விட்டன.

176. அடிமைகளின் குணமாகிய பொறாமைதான் நமது நாட்டின் அழிவுக்கே காரணமாக அமைந்திருக் கிறது. ஆண்டவனே தன் முழு வலிமையைச் செலுத்தி யும் இந்தக் காரணத்தால் நமக்கு உதவி ஒன்றுமே செய்ய முடியாமற் போயிற்று. தன் கடமைகளை எல்லாம் செய்து முடித்துவிட்டு இறந்துபோன ஒருவனாக இப்போது என்னை நீ நினைத்துக்கொள். அந்த வேலைகளின் சுமை முழுவதும் உன் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள்.

நமது தாய்நாட்டின் இளைஞர்களே! இந்தப் பணியை நிறைவேற்றுவதற்காகவே விதியால் நீங்கள் நிய மிக்கப்பட்டவர்கள் என்று உங்களை நீங்கள் கருதுங்கள். இத்தகைய ஆக்கபூர்வமான நற்பணிகளில் தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக முழுமனதுடன் ஈடு படுங்கள்.

177. தனி ஒரு மனிதனோ அல்லது ஒரு நாடோ மற்றச் சமூகத்தினரிடமிருந்து விலகி நின்று வாழ முடி யாது என்பதை மனப்பூர்வமாக நம்புகிறேன். ஒருவருக்கு ஒருவர் கொடுப்பதும் வாங்குவதும்தான் இயற்கையில் உள்ள விதியாகும். இந்தியா மீண்டும் ஒரு முறை தன் உயர்ந்த நிலையை அடைய விரும்பினால், அது தன்னிடமுள்ள அரும் பெரும் ஆன்மிகப் பொக் கிஷங்களை வெளியே கொண்டு வந்து ஏனைய உலக நாடுகளிடையே பரப்பியாக வேண்டும். அதற்குப் பதி லாக மற்ற நாடுகள் கொடுப்பதையும் பெறத் தயாராக

இருக்க வேண்டும். இது முற்றிலும் இன்றியமையாத தாகும்.

விரிந்துகொண்டே போவதுதான் வாழ்க்கை. குறுகிச் செல்வதை மரணம் என்றுதான் சொல்ல வேண்டும். அன்புதான் வாழ்க்கையாகும். வெறுத்து ஒதுக்குவதை மரணம் என்றுதான் சொல்ல வேண்டும். என்றைய தினம் மற்ற இனத்தவர்களை நாம் வெறுக்க ஆரம்பித்தோமோ, அன்று முதலே நாம் இறந்துபோகத் தொடங்கிவிட்டோம். மலர்ந்து விரிவதாகிய வாழ்க்கைக்கு நாம் திரும்பிச் செல்லாவிட்டால், நமது அழிவை எதுவுமே தடுத்து நிறுத்த முடியாது.

178. பாமர மக்களைப் புறக்கணித்து ஒதுக்கியது தான் நமது நாடு செய்த பெரும்பாவம் என்று நான் கருதுகிறேன். நமது வீழ்ச்சிக்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தியாவின் பாமர மக்களுக்குச் சிறந்த கல்வியையும், நல்ல உணவு வசதிகளையும் கொடுத்து, அவர்களை நன்றாகக் கவனிக்க வேண்டும். அந்தப் பாமர மக்கள்தாம் நம்முடைய கல்விக்கு வரியாகப் பணம் தருகிறார்கள். அவர்களே நமது கோயில்களையும் கட்டுகிறார்கள். ஆனால் அவற்றுக்குப் பதிலாக அவர்களுக்குக் கிடைப்பதோ வெறும் உதைகள்தாம். நடைமுறையில் அவர்கள் நம் அடிமைகளாகவே இருக்கின்றனர். இந்தியாவை முன்னேற்றமடையச் செய்ய விரும்பினால், இந்தப் பாமர மக்களுக்காக நாம் வேலை செய்தாக வேண்டும்.

179. இந்துக்கள் தங்களுடைய கடந்த கால வரலாற்றை ஆழ்ந்து படிக்கும் அளவிற்கு ஏற்ப, அவர்களின் எதிர்காலம் மேலும் மேலும் பெருமைக்கு உரியதாக அமையும். யார் ஒருவர் இந்தியாவின் கடந்த காலப் பெருமைகளை வீடுதோறும் கொண்டு சென்று போதிக்கிறாரோ, அவரே நம் தாய்நாட்டிற்கு மிகப் பெரிய அளவில் நன்மை செய்தவராவார். இந்தியாவின் வீழ்ச்சி, பண்டைக் காலத்தில் நிலவிய சட்டங்களும் பழக்க வழக்கங்களும் தவறானவையாக இருந்த காரணத்தால் ஏற்பட்டுவிடவில்லை. மாறாக, அவற்றுக்கு உரிய நியாயமான முடிவு கிட்டும் வரையிலும் அவற்றைக் கடைப்பிடிப்பதற்கு அனுமதி அளிக்கப்படாத காரணத்தால்தான் இந்த வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

180. செய்து முடிக்கப்பட வேண்டிய பணிகள் மிகவும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் அவற்றை நிறைவேற்றி முடிப்பதற்கான வசதிகளோ இந்த நாட்டில் இல்லை. நம்மிடம் அறிவு இருக்கிறது; ஆனால் பணி புரிவதற்கான கைகள்தாம் இல்லை. நம்மிடம் வேதாந்தக் கருத்துக்கள் இருக்கின்றன; ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய ஆற்றல் இல்லை. நமது நூல்களில் உலக சமத்துவம் பற்றிய கொள்கை கூறப்பட்டிருக்கிறது; ஆனால் நடைமுறை வாழ்க்கையிலோ நாம் பெருமளவுக்கு வேற்றுமை பாராட்டுகிறோம். இதே இந்தியாவில்தான், மிகவும் உயர்ந்த, சுயநலமற்ற, பயன் கருதாத பணியைக் குறித்த உண்மைகள் போதிக்கப்பட்டன; ஆனால் நடைமுறையில் நாம் மிகவும் கொடூரமானவர்கள்; இதயம் இல்லாதவர்கள். நமது சதைப்பிண்டமாகிய உடலைத் தவிர வேறு எதைப்பற்றியுமே நினைக்க முடியாதவர்கள்.

செல்வச் செழிப்பை இழந்து, அதிர்ஷ்டத்தை இழந்து, பகுத்தறிவையும் அறவே இழந்து, நசுக்கப்பட்டு, என்றைக்கும் பட்டினியால் வாடியபடி சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டவர்களாகவும் பொறாமை கொண்டவர்களாகவும் உள்ள இந்த இந்திய நாட்டு மக்களை, யாரேனும் ஒருவர் மனப்பூர்வமாக நேசித்தால், இந்தியா மீண்டும் விழித்துக்கொள்ளும் என்று நான்கூடத்தான் நம்புகிறேன்.

எப்போது, பரந்த இதயம் படைத்த நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் வாழ்க்கையின் ஆடம்பரங்களையும் எல்லா இன்பங்களையும் துறந்துவிட்டு, ஆதரவற்ற நிலை, அறியாமை ஆகிய நீர்ச்சுழலில் சிறிது சிறிதாக மிகக் கீழ்நிலைக்கு மூழ்கிச் சென்றுகொண்டிருக்கும் நம் நாட்டுக் கோடானுகோடி மக்களின் நல்வாழ்விற்காக வருந்திக் தங்களின் முழு ஆற்றலையும் செலுத்தி உழைக்க முன்வருவார்களோ, அப்போதுதான் இந்தியா விழித்தெழும்.

181. இந்தியாவிலுள்ள எல்லாத் தீமைகளுக்கும் அடிப்படை வேராக அமைந்துள்ளது இந்த நாட்டு ஏழை மக்களின் இழிந்த நிலையே ஆகும். மேலைநாட்டு ஏழை மக்களைப் பேய்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களோடு ஒப்பிட்டால் நம் நாட்டு மக்களைத் தேவ

தூதர்கள் என்றே சொல்ல வேண்டும். ஆகவே, இவர்களின் நிலையைச் சுலபமாக உயர்த்திவிடலாம். இவர்களுக்குக் கல்வியை அளித்து, இவர்கள் இழந்துவிட்ட தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளும்படி செய்வதே இப்போது நாம் இவர்களுக்குச் செய்ய வேண்டிய ஒரே சேவையாகும்.

182. கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக இந்தியாவில் சீர்திருத்த மன்றங்களும் சீர்திருத்தக்காரர்களும் நீர்க்குமிழிகளைப் போலத் தோன்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தோ! அவர்களில் ஒவ்வொருவரும் தோல்வியே அடைந்திருக்கின்றனர். சீர்திருத்தத்தின் இரகசியம் எங்கே இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியாமற் போய்விட்டது. அவர்களுக்கு இருந்த அவசரத்தில் நமது சமுதாயத்திலுள்ள எல்லாத் தீமைகளையும் மதத்தின் மேலேயே அவர்கள் சுமத்திவிட்டார்கள். தன் நண்பனின் நெற்றியிலே உட்கார்ந்த கொசுவைக் கொல்வதற்காக ஒருவன் முயற்சி செய்தான். அவன் கொடுத்த பலமான அடிகள் மனிதனையும் கொசுவையும் சேர்த்தே கொன்றுவிட்ட கதையைப் போல, இந்தச் சீர்திருத்த முறைகளும் அமைந்துவிட்டன. ஆனால், இந்த முயற்சியில் அதிர்ஷ்டவசமாக அசைக்க முடியாத ஒரு பெரிய பாறையின் மீதே மோதிக் கொண்டார்கள். மோதலினால் ஏற்பட்ட அந்த அதிர்ச்சியே அவர்களை நசுக்கி அழித்துவிட்டது. சுயநலம் இல்லாத, உயர்ந்த, ஆனால் அதே சமயத்தில் தவறான வழியில் சென்ற அந்தச் சீர்திருத்தக்காரர்களின் புகழ் வாழட்டும். உறங்குகிற கும்பகர்ணனை எழுப்புவதற்கு, அந்தப் பெரிய அதிர்ச்சிகளெல்லாம் தேவைப்பட்டன. ஆனால், அந்த முயற்சிகள் எல்லாம் அழிவு வேலைகளைச் சேர்ந்தவையே ஆகும்; ஆக்கப் பணிகள் ஆகிவிடா. இந்தக் காரணத்தால்தான், அந்த முயற்சிகள் எல்லாம் நிலைத்து நிற்கக் கூடியவை அல்ல. எனவேதான் அவை யாவும் அழிந்து போயிருக்கின்றன. நாம் அவர்களை வாழ்த்துவோமாக. அவர்களின் அனுபவத்தின் மூலமாக நாம் பயனடைவோம். நீ கிழக்கு, மேற்குத் திசைகள் எல்லாவற்றிலும் முயற்சி செய்து பார். இந்து என்னும் இனம் முற்றிலும் அழிந்து மறைந்து, அதற்குப் பதிலாக வேறு ஒரு புதிய இனம் அந்த இடத்துக்கு வரும்

வரையிலும், இந்தியா அழிந்து மறையும் வரையிலும், இந்தியா ஒருபோதும் ஐரோப்பாவாக ஆகிவிடாது.

183. இதை நீ கவனத்தில் வைத்துக்கொள்: ஆன்மிக இலட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு, மேலை நாட்டு லௌகிக நாகரிகத்தின் பின்னுல் நீ செல்வாயானுல், அதன் விளைவாக மூன்றே தலைமுறைகளில் உனது இனம் அழிந்துபோய்விடும். ஏனென்ருல், நமது நாட்டின் முதுகெலும்பு முறிந்து, எந்த அடிப்படையின் மீது நமது நாட்டின் கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளதோ, அந்த அடித்தளம் ஆட்டம் கண்டுவிடும். நாலா பக்கங்களிலும் அழிவைத்தான் நீ காண்பாய்.

184. எனது சகோதரர்களே! நாம் அனைவரும் கடுமையாக உழைப்போமாக. உறங்குவதற்கு இது நேரமில்லை. எதிர்கால இந்தியா நமது உழைப்பைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது. இந்தியத் தாய் தயாராகக் காத்திருக்கிருள். அவள் உறங்கிக்கொண்டு மட்டும்தான் இருக்கிருள். எழுமின்! விழிமின்! இந்த நமது தாயகமாகிய தேவி, தனது அழிவற்ற அரியணையின் மீது புத்திளமை பெற்றவளாக, முன்பு எப்போதும் இருந்ததை விடவும் அதிகமான மகிமை கொண்டவளாக அமர்ந்திருப்பதைக் காணுங்கள்.

185. கண்டனம் செய்யும் சொல் எதையுமே சொல்ல வேண்டாம். உதடுகளை மூடிக்கொண்டு உங்கள் இதயங்களைத் திறந்து வையுங்கள். நீங்கள் ஒவ்வொருவரும் நாட்டின் சுமை முழுவதும் உங்களின் தோள்களின் மீதே சுமத்தப்பட்டிருப்பதாக எண்ணிக்கொண்டு, இந்த நாட்டின் கதிமோட்சத்திற்காகவும் உலகத்தின் கதிமோட்சத்திற்காகவும் பணியாற்றுங்கள். வேதாந்தத்தின் ஒளியையும் வாழ்க்கை முறைகளையும் வீட்டுக்கு வீடு எடுத்துச் செல்லுங்கள். ஒவ்வொருவரிடமும் மறைந்திருக்கும் தெய்விகத் தன்மையை அதன் மூலமாக வெளிப்படுத்துங்கள்.

186. உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும்தாம். காலமெல்லாம் அழுதுகொண்டிருந்தது போதும். இனி அழுகை என்ற பேச்சே இருக்கக் கூடாது. சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

187. உறுதியுடன் இரு. அதற்கு மேலாகத் தூய்மையாகவும், முழு அளவில் சிரத்தை உள்ளவனுக வும் இரு. உன் விதியில் நீ நம்பிக்கை கொண்டிரு. அது, கையில் காசில்லாத உன்னை நம்பித்தான் இருக் கிறது. ஏழையாக இருக்கிருய். ஆகவே நீ வேலை செய் வாய். உன்னிடம் எதுவுமே இல்லாத காரணத்தால் சிரத்தை உள்ளவனுக இருப்பாய். அவ்விதம் இருப்ப தனுல் எல்லாவற்றையும் துறந்துவிடுவதற்கும் நீ தயா ராக இருப்பாய். இதைத்தான் நான் இப்போது உனக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன்.

188. என் குழந்தைகளே! இரக்கம் கொள்ளுங்கள். ஏழைகள், அறியாமையில் இருப்பவர்கள், நசுக்கப்பட்ட வர்கள் ஆகியவர்களுக்காக இரக்கம் கொள்ளுங்கள். இதயமே நின்றுபோகும் வரையிலும், மூளை கொதித்துப் போகும் வரையிலும் இரக்கம் கொள்ளுங்கள். உங்க ளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதோ என்று நினை யுங்கள். அதன் பிறகு கடவுளின் காலடிகளில் உங்கள் ஆன்மாவை அர்ப்பணியுங்கள். அப்போது உங்களுக்கு ஆற்றல் வந்து சேரும்; உதவி வந்து சேரும்; அசைக்கவே முடியாத உறுதியான வலிமை வந்து சேரும். போராட் டம்! போராட்டம்! இதுவே கடந்த பத்து ஆண்டுகளாக என் வாழ்க்கையின் இலட்சியமாக இருந்து வந்திருக் கிறது. இப்போதும் போராட்டம் என்றுதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எங்கும் எல்லா இடத் திலும் இருள் சூழ்ந்திருக்கும் போதும் போராட்டம் என்றுதான் நான் சொல்வது வழக்கம். வெளிச்சம் வரும் போதும் போராட்டம் என்றுதான் நான் சொல்கிறேன். என் குழந்தைகளே! அஞ்ச வேண்டாம்.

189. கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தை நாலா புறங்களிலும் பரப்புங்கள். செயலாற்றுங்கள்! செய லாற்றுங்கள்! வேலை செய்யும்போது ஒரு வேலைக்காரனைப் போலவே இருங்கள். சுயநலம் அற்றவர்களாக இருங்கள். ஒரு நண்பன் மற்ரெருவரைத் தனிமையில் தூற்றுவதை ஒருபோதும் கேட்டுக்கொண்டிருக்காதீர்கள். எல்லையற்ற பொறுமையைக் கடைப்பிடியுங்கள். வெற்றி உங்களுடை யதே. கவனமாக இருங்கள். உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருங்கள். உண்மையில் பிடிப் புள்ளவர்களாக இருங்கள். மெதுவாகவே என்ருலும்

நிச்சயமாக நீங்கள் வெற்றி பெறப்போவது உறுதி. முழு வேலையும் உங்களையே பொறுத்திருப்பதாக நினைத்து, வேலையில் ஈடுபடுங்கள். ஐம்பது நூற்றாண்டுகள் உங்களை எதிர்நோக்கி இருக்கின்றன. எதிர்கால இந்தியா உங்களைப் பொறுத்தே அமையப் போகிறது. வேலை தொடரட்டும்.

190. இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், நவீனத் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் ஆகிய உங்களிடம்தான் என் நம்பிக்கை இருக்கிறது. இவர்களிடமிருந்தே என் தொண்டர்கள் தோன்றுவார்கள். சிங்கங்களைப் போல அவர்கள் எல்லாப் பிரச்னைகளையும் தீர்த்து வைப்பார்கள். நான் என் கருத்தை வகுத்து அதற்காக என் வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறேன். இந்தியா முழுவதும் இந்தக் கருத்துக்கள் பரவும் வரையிலும், அவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இந்த அரிய கருத்துக்களைப் பரப்பிக்கொண்டே செல்வார்கள்.

191. தங்களுடைய தாய்நாட்டின் நன்மைக்காக எல்லாவற்றையும் துறக்கவும் தங்களுடைய உயிரைத் தியாகம் செய்யவும் கூடியவர்களாக ஒருசில இளைஞர்களே நமக்குத் தேவை. முதலில் அவர்களுடைய வாழ்க்கையை நாம் நல்ல முறையிலே உருவாக்க வேண்டும். அதன் பிறகுதான் ஏதாவது உண்மையான முன்னேற்றத்தை எதிர்பார்க்கலாம்.

192. மற்றவர்களுக்காக நாம் மேற்கொள்ளும் மிகக் குறைந்த அளவு உழைப்பும் நமக்குள்ளே இருக்கும் சக்தியைத் தட்டி எழுப்புகிறது. மற்றவர்களுடைய நன்மையைக் குறித்துச் சிறிதளவு நினைப்பதுங்கூடச் சிங்கத்திற்குச் சமமான ஆற்றலை நமது இதயத்திற்குப் படிப்படியாகத் தருகிறது. நான் உங்களை எல்லாம் மிகவும் நேசிக்கிறேன். என்றாலும், நீங்கள் அனைவரும் பிறருக்காக உழைத்து உழைத்து அந்தப் பணியில் இறந்து போவதையே நான் விரும்புகிறேன். நீங்கள் அவ்விதம் இறந்துபோனால் நான் மிகவும் மகிழ்வேன். எழுந்திருங்கள்! தேச முன்னேற்றம் என்னும் சக்கரத்தை நகர்த்துவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். இந்த வாழ்க்கை எவ்வளவு காலத்திற்கு நிலைத்திருக்கப் போகிறது? இந்த உலகத்திற்கு நீங்கள் வந்திருக்கிறீர்கள்.

உங்களுக்குப் பின்னால் நீங்கள் வாழ்ந்து மறைந்ததற்கு அறிகுறியாக எதையாவது விட்டுச் செல்லுங்கள். அப்படி இல்லாவிட்டால் இந்த மரம், கல் முதலியவற்றுக்கும் உங்களுக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

193. தன் உள்ளங்காலிலிருந்து உச்சந்தலை வரையிலும் உள்ள நாடி நரம்புகளில் பாய்ந்து செல்லும் ஏராளமான ரஜோகுணத்தைப் பெற்ற ஒரு மாவீரன்—ஆன்மிக உண்மைகளை அறிய வேண்டும் என்னும் துணிவும், தேவைப்பட்டால் அதற்காகத் தன் உயிரையும் பணயம் வைக்கவும் தயாராக உள்ள வீரன்—தியாகத்தையே தன் கவசமாகவும் ஞானத்தையே வாளாகவும் ஏந்திய ஒரு வீரன்—இத்தகைய ஒரு மாவீரனே இப்போது நமக்கு மிகவும் தேவைப்படுகிறான். வாழ்க்கையை இன்பம் அனுபவிக்கும் பூஞ்சோலையாக நினைத்து உருகி நிற்கும் காதலனின் மனநிலை நமக்குத் தேவையே இல்லை. மாறாக, வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாது எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது தேவை.

194. உங்களிடமே நீங்கள் நம்பிக்கை வையுங்கள். ஒரு காலத்தில் நீங்கள் வேதகாலத்தைச் சேர்ந்த ரிஷிகளாக இருந்தீர்கள். இப்போது நீங்கள் வேறுவித வடிவம் தாங்கி வந்திருக்கிறீர்கள். அவ்வளவுதான் விஷயம். உங்கள் அனைவரிடமும் எல்லையற்ற ஆற்றல் குடிகொண்டிருப்பதைப் பட்டப்பகல் வெளிச்சத்தைப் போல அவ்வளவு தெளிவாக நான் பார்க்கிறேன். ஆடைகளை வரிந்து கட்டிக்கொண்டு உங்கள் இதயத்தையும் ஆன்மாவையும் முழு அளவில் ஈடுபடுத்தி வேலைகளில் மும்முரமாக ஈடுபடுங்கள். நிலையில்லாத இந்தப் பொருளையும் புகழையும் வைத்துக்கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நான் என்ன நினைக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியுமா? முக்தி அல்லது இவை போன்றவற்றைக் குறித்து நான் பொருட்படுத்தவே இல்லை. உங்கள் அனைவருடைய உள்ளத்திலும் இத்தகைய எண்ணங்களை எழுப்பி விடுவதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள். ஒரே ஒரு மனிதனுக்கு நல்வழியில் பயிற்சி அளிப்பதற்காக, நூறாயிரம் பிறவிகளை எடுப்பதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

195. என் மகனே! மரணம் நேருவதைத் தடுப்பதற்கில்லை என்றால் கற்களைப் போலவும் கட்டைகளைப் போலவும் செத்து மடிவதைவிட வீரர்களைப் போல இறப்பது மேலானது அல்லவா? நிலையில்லாத இந்த உலகிலே இரண்டொரு நாள் அதிகமாகவே வாழ்ந்து விடுவதனால் பெறப்போகிற பயன் என்ன? வாழ்க்கை என்னும் கத்தி துருப்பிடித்து அழிந்து போவதைவிடத் தேய்ந்து அழிவதே மேலானது. அதிலும் குறிப்பாக, மற்றவர்களுக்கு ஒரு சிறிதளவிற்கு நன்மை செய்வதற்காக அழிந்துபோவது மிகவும் நல்லது.

196. உடலில் உறுதி இல்லாமலும், மனதில் ஊக்கம் இல்லாமலும், தங்களுக்கென்று புதிய கருத்து எதுவுமே இல்லாமலும், உயிரில்லாத களிமண் உருண்டைகள் போல இவர்கள் என்னதான் செய்யப்போகிறார்கள்? உற்சாகப்படுத்தித் தூண்டிவிடுவதன் மூலமாக இவர்களிடம் நான் உயிர்ப்பு உண்டாக்க விரும்புகிறேன். இந்தப் பணிக்காக நான் என்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்திருக்கிறேன். வேத மந்திரங்களின் தவிர்க்க முடியாத எழுச்சி மிக்க வலிமையால் இவர்களை நான் எழுப்பி விடுவேன். 'எழுமின்! விழிமின்!' என்னும் இந்த அச்சமற்ற செய்தியை இவர்களிடம் அறைகூவிச் சொல்வதற்காகவே நான் பிறந்திருக்கிறேன். இந்தப் பணியில் நீங்கள் என்னுடைய உதவியாளர்களாக இருங்கள்.

197. மக்களின் எண்ணிக்கையோ, செல்வமோ, வறுமையோ முக்கியமல்ல. சொல், செயல், சிந்தனைகளால் ஒன்றாக விளங்கும் ஒருசிலரால் உலகையே ஆட்டி வைக்க முடியும்—இந்த உண்மையை எப்போதும் மறந்துவிடாதீர்கள். எதிர்ப்பு ஏற்படுவது நல்லதுதான். அணை போட்டுத் தடுக்காவிட்டால் ஓர் ஆறு வேகத்தைப் பெற முடியுமா? ஓர் இயக்கம் புதிதாகவும் நன்மை தருவதாகவும் இருக்கும் அளவுக்கு ஏற்ப ஆரம்பத்தில் எதிர்ப்புகளைச் சந்திக்கவும் நேரும். இந்த எதிர்ப்புகளே பிறகு வரப்போகும் வெற்றிக்கு அறிகுறியாகும்.

198. பாராட்டப்படுகிறேனோ இல்லையோ, இந்த இளைஞர்களை ஒன்று திரட்டிச் செயலில் ஈடுபடச் செய்வதற்காக நான் பிறந்திருக்கிறேன். அது மட்டுமல்ல, ஒவ்வொரு நகரத்திலும் நூற்றுக்கணக்கான பேர் என்னுடன் சேர்ந்துகொள்ளத் தயாராக இருக்கிறார்கள். அவர்

களைத் தடுத்து நிறுத்தவே முடியாத அலைகளைப் போலப் புரட்டி அடித்துக்கொண்டு போகும் வகையில் இந்தியா முழுவதும் அனுப்பி வைக்க விரும்புகிறேன். அவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களாகவும் சமுதாயத்தால் நசுக்கப் பட்டவர்களாகவும் உள்ளவர்களின் வீட்டு வாசலுக்கே சென்று, வசதி, ஒழுக்கம், மதம், கல்வி ஆகியவற்றைக் கொண்டு சேர்ப்பார்கள். இதை நான் சாதித்தே தீரு வேன்! அல்லது செத்து மடிவேன்!

199. நீங்கள் உண்மையிலேயே என் குழந்தைக ளானல், எதற்குமே அஞ்சி ஸ்தம்பித்து நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்க ஏறுகளைப் போலத் திகழ் வீர்கள். இந்தியாவையும், இந்த உலகம் முழுவதையுமே நாம் தட்டியெழுப்பியாக வேண்டும். தங்களுடைய பணியைச் செய்து முடிப்பதற்காகத் தீயில் குதிப் பதற்கும் என் குழந்தைகள் தயாராக இருக்க வேண்டும்.

200. ஓ பாரத நாடே! உன் பெண்மையின் இலட்சியம் சீதை, சாவித்திரி, தமயந்தி என்பதை நீ மறந்துவிடாதே! நீ வணங்கும் தெய்வம் யோகிகளுக் கெல்லாம் பெரிய யோகியும் எல்லாவற்றையும் துறந்து விட்ட சங்கரரும் ஆகிய உமாபதியே என்பதை நீ மறக்க வேண்டாம். உன் திருமணம், உன் செல்வம், உன் வாழ்க்கை ஆகியவை உன் ஐம்புலன் இன்பத்துக்காக அல்ல; உன் தனிப்பட்ட சுய இன்பத்துக்காகவும் அல்ல என்பதை நீ மறந்துவிடாதே. தேவியின் பலிபீடத்தில் பலியாவதற்கென்றே பிறந்திருக்கிருய் என்பதை நீ மறக்காதே. தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், அறி யாமை மிக்கவர்கள், ஏழைகள், கல்வியறிவற்றவர்கள், சக்கிலியர், தோட்டிகள் ஆகியவர்கள் அனைவருமே உன் னுடன் இரத்தத் தொடர்புடைய நெருக்கமான உற வினர்களே, உன் உடன்பிறந்த சகோதரர்களே என்பதை நீ மறந்துவிடாதே.

201. எங்கெல்லாம் கொள்ளைநோய் பரவுகிறதோ, பஞ்சம் ஏற்படுகிறதோ, மக்கள் துன்பத்தில் வாடுகிருர் களோ அங்கெல்லாம் நீங்கள் அனைவரும் சென்று அவர் களுடைய துன்பத்தைக் குறைக்க முயற்சி செய்யுங்கள். மிஞ்சிப் போனல் இந்த முயற்சியில் அதிகப் பட்சம் நீங்கள் உயிரிழக்க நேரிடலாம். அதனலென்ன? உங்களைப் போல எத்தனை எத்தனையோ பேர் நாள்தோறும் புழுக்களைப் போலப் பிறப்பதும் இறப்பதுமாக இருக்

கிறார்கள். அதனால் இந்தப் பரந்த உலகத்திற்கு என்ன குறைந்து போய்விட்டது? மரணம் வருவதோ உறுதி. ஆனால் இறப்பதற்கு என்று மேலான இலட்சியத்தைக் கொண்டிரு. மேலானதொரு குறிக்கோளுக்காக வாழ்ந்து இறந்துபோவது மிகவும் சிறந்தது.

202. மேலைநாட்டு உதவி எதையுமே நீங்கள் நம்பி இருக்கக் கூடாது. தனிமனிதர்களைப் போலவே நாடு களும் தங்களுக்குத் தாங்களே உதவி செய்துகொள்ள வேண்டும். இதுதான் உண்மையான தேசபக்தியாகும். ஒரு நாடு அவ்விதம் செய்ய முடியாமற் போனால், அதற்கு உரிய சரியான நேரம் இன்னும் வரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட நாடு, காலம் வரும் வரையிலும் சற்றுக் காத்திருக்கத்தான் வேண்டும்.

203. மரணம் வரும் வரையிலும் வேலை செய். நான் உன்னுடன் இருக்கிறேன். நான் இறந்தபிறகும் என் ஆவி உன்னுடன் இருந்து வேலை செய்யும். இந்த வாழ்க்கை வருவதும் போவதுமாக இருக்கிறது. செல்வம், புகழ், இன்பங்கள் இவை எல்லாமே ஏதோ ஒரு சில நாட்களுக்குத்தான் நிலைத்திருக்கப் போகின்றன. உலகப் பற்று நிறைந்த ஒரு புழுவைப் போல இறந்து போவதைவிட, உண்மையை எடுத்துப் போதித்துக் கொண்டே கடமை என்னும் களத்திலே உயிரை விடுவது மிக மிக மேலானது. முன்னேறிச் செல்!

8. பல்சுவை

204. கவலைப்பட வேண்டாம். பெரிய மரத்தின் மீதுதான் புயற்காற்று மோதுகிறது; கிளறிவிடுவதனால் நெருப்பு மேலும் நன்றாக எரிகிறது; தலையில் அடிபட்ட பாம்பு படமெடுக்கிறது என்று இப்படி எவ்வளவோ சொல்லிக்கொண்டே போகலாம்.

நெஞ்சு புண்பட்டு வேகும்போதும் துன்பப் புயல் நம்மைச் சுற்றி நாலா புறங்களிலும் வீசும்போதும், இனி வாழ்க்கையில் ஒளியையே காண முடியாதோ என்று தோன்றும்போதும், நம்பிக்கையும் துணிவும் கிட்டத் தட்ட அறவே நம்மை விட்டு அகன்றுவிட்டபோதும், அப்படிப்பட்ட ஒரு பெரிய ஆன்மிகப் புயல் சூழ்ந்த நிலையின் நடுவில்தான் பிரம்மத்தினுடைய ஒளி நமது உள்ளத்தினுள் பிரகாசிக்கிறது.

ஆடம்பர வாழ்க்கையின் மடியிலே தாலாட்டப்பட்டு வளர்ந்தவன், ரோஜா மலர்ப் படுக்கையில் படுத்திருப்பவன், எப்போதுமே ஒரு துளிக் கண்ணீர் சிந்தாதவன் எவனே, அவன் என்றைக்காகிலும் சான்றோனாக ஆகியிருக்கிறானா? இத்தகையவன் என்றைக்காகிலும் தனக்குள் இருக்கும் பிரம்மத்தை மலரச் செய்திருக்கிறானா?

205. அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள்.

ஏனென்றால் அறிவுக்கு, பகுத்தறிவு என்னும் ஒரே ஒரு நிலை மட்டும்தான் உண்டு. அந்த ஒரு நிலைக்குள் இருந்தபடியே அறிவு வேலை செய்கிறது. தனக்கு உரிய அந்த எல்லையைக் கடந்து அறிவு செல்ல முடியாது.

அறிவாற்றலால் ஒருபோதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது. இதயம், அறிவையும் கடந்து, தெய்விக அருள் என்னும் நிலையை அடைகிறது. அன்புள்ளம் கொண்ட மக்களுக்குப் பாலிலிருந்து வெண்ணெய் கிடைக்கிறது. அறிவாற்றல் நிறைந்த மக்களுக்கோ எஞ்சியுள்ள மோர் மட்டுமே கிடைக்கிறது.

206. நாம் அனைவரும் நேர்மையானவர்களாகத் திகழ்வோமாக. இலட்சியத்தை நம்மால் பின்பற்ற முடியவில்லை என்றால், நமது பலவீனத்தை நாம் ஒப்புக்கொள்வோம். ஆனால் இலட்சியத்தை நாம் இழிவுபடுத்தாமல் இருப்போமாக. இலட்சியத்தைத் தாழ்ந்த நிலைக்குக் கொண்டுபோக எவரும் முயற்சி செய்ய வேண்டாம்.

207. மனிதகுலம் பிழையிலிருந்து உண்மைக்குச் செல்லவில்லை என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, உண்மையிலிருந்து மற்றோர் உண்மைக்குத்தான் பிரயாணம் செய்கிறது. தாழ்ந்த ஓர் உண்மையிலிருந்து உயர்ந்த மற்றோர் உண்மைக்கு மனிதகுலம் செல்வதாக நீங்கள் கருதலாமேயன்றி, பிழையிலிருந்து உண்மைக்குச் செல்கிறோம் என்று நினைப்பது பொருந்தாது.

208. உயிரினம் தாழ்ந்ததாக இருப்பதற்கு ஏற்ப, புலன் இன்பத்தை நாடும் நாட்டமும் அவற்றில் மிகுந்து

காணப்படும். மக்களில் ஒரு சிலர்தாம் நாய், ஓநாய் ஆகியவை உணவைத் தின்னும்போது காட்டும் அதே அளவு ஆர்வத்தோடு உணவைச் சாப்பிட முடியும். ஆனால், நாயும் ஓநாயும் அனுபவிக்கும் இன்பமெல்லாம் புலன்களுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன.

எல்லா நாடுகளிலும் மனித இனத்தில் தாழ்ந்த இயல்புடையவர்கள், புலன் இன்பங்களிலேயே மகிழ்ச்சி அடைபவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் பண்பாடு மிக்கவர்களும் படித்தவர்களும் சிறந்த சிந்தனை, தத்துவங்கள், கலைகள், விஞ்ஞானங்கள் ஆகியவற்றில் இன்பம் காண்பவர்களாக இருக்கிறார்கள். ஆன்மிக வாழ்க்கை என்பது இவற்றை எல்லாம் கடந்த மிகவும் உயர்ந்த நிலையில் இருக்கிறது.

209. புத்தர், இயேசுகிறிஸ்து போன்ற பெரியோர்களின் வரலாறுதான் இந்த உலகத்தின் வரலாறாகத் திகழ்கிறது. உணர்ச்சி வசப்படாதவர்களும் பற்றற்றவர்களும் இந்த உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள்.

210. வாழ்க்கையில் வெற்றி பெற்ற ஒவ்வொருவரும் பின்னணியில் ஏதோ ஓரிடத்தில் அளவற்ற நேர்மையும், அளவற்ற சிரத்தையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். அந்தக் குணங்கள்தாம், அவர் வாழ்க்கையில் அடைந்த சிறந்த வெற்றிகளுக்குக் காரணங்களாகும். அவர் முற்றிலும் சுயநலம் அற்றவராக இல்லாமலிருக்கலாம். ஆனால் அப்படி இருப்பதற்கிடையிலும் அவர் சுயநலத்தைத் துறந்துவிடும் நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவராக இருந்திருப்பார். அவர் அறவே சுயநலம் இல்லாதவராக இருந்திருப்பாரானால், அவர் அடைந்த வெற்றி புத்தர்பிரானின் வெற்றியைப் போன்றோ இயேசுநாதரின் வெற்றியைப் போன்றோ ஒரு மாபெரும் வெற்றியாக விளங்கியிருக்கும். சுயநலமற்ற தன்மையின் அளவுதான், வெற்றியின் அளவை எல்லா இடத்திலும் நிர்ணயம் செய்கிறது.

211. உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக் கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

212. முன்னேறிக்கொண்டே இரு! முறையற்ற ஒரு செயலைச் செய்துவிட்டதாகவே நீ நினைத்தாலும், அதற்காக நீ திரும்பிப் பார்க்க வேண்டாம். அவை போன்ற தவறுகளை முன்பு செய்யாமல் இருந்திருந்தால், இன்று நீ இருக்கும் நிலையை அடைந்திருக்க முடியும் என்று இப்போது நம்புகிருயா? நீ செய்த தவறுகளை வாழ்த்து; அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழி காட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கு நல்வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்! உன் நிலை எப்படிப்பட்டதாக இருந் தாலும், அதைக் குறித்து நீ கவலைப்பட வேண்டாம். இலட்சியத்தை உறுதியாகப் பற்றிக்கொண்டு முன்னே றியபடியே இரு!

213. மற்றவர்களுக்கு நன்மை செய்வதுதான் தர்ம மாகும். மற்றவர்களுக்குத் தீமை செய்வது பாவமாகும். வலிமையும் ஆண்மையுமே தர்மம். பலவீனமும் கோழைத்தனமும் தீமை. சுதந்திரமான வாழ்க்கை புண் ணியமாக அமைகிறது. மற்றவர்களிடம் அன்பு செலுத்து வதுதான் புண்ணியச் செயலாகும். மற்றவர்களை வெறுத்து ஒதுக்குவதே பாவச் செயலாகும். கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் கொண்டிருப்பது தர்மம். சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதே பாவம். ஒருமைப்பாடு காண்கிற ஞானமே தர்மமாகும். வேற்று மையைக் காண்பதுதான் பாவச் செயலாக அமைந்திருக் கிறது.

214. தற்காலத்தில் ஒருவன் மோசஸ், இயேசு கிறிஸ்து, புத்தர் ஆகியவர்களின் மேற்கோள்களை எடுத்துக்காட்டாகச் சொன்னல், அவன் ஏளனத்துக்கு ஆளாகிருன். ஆனல் ஒரு ஹக்ஸ்லி, டின்டால், டார்வின் ஆகிய இவர்களின் பெயர்களை அவன் சொல்லட்டும். அவர்களுடைய கருத்து என்னவாக இருந்தாலும் மக்கள் அதை அப்படியே கேள்விக்கிடமின்றி நம்பிவிடுவார்கள்.

'ஹக்ஸ்லி இப்படிச் சொல்லியிருக்கிருர்' என்று குறிப்பிட்டால் அதுவே பலருக்குப் போதுமானதாக இருக்கிறது.

நாம் மூடநம்பிக்கையிலிருந்து விடுபட்டவர்கள்தாம் என்ருலும், முன்பு கூறியது மதவாழ்க்கையைச் சேர்ந்த மூடநம்பிக்கையாக இருந்தது. பின்னல் குறிப்பிட்ட இது, விஞ்ஞான ரீதியான மூடநம்பிக்கையாக இருக்

கிறது. மதத்தைச் சேர்ந்த மூடநம்பிக்கைகளின் மூலமாகத்தான் உயிரோட்டம் தரக்கூடிய ஆன்மிகக் கருத்துக்கள் வெளிவந்திருக்கின்றன. விஞ்ஞான ரீதியான இன்றைய இந்த மூடநம்பிக்கையின் மூலமாகவே காமமும் பேராசையும் விளைந்திருக்கின்றன. முதலில் கூறிய மூடநம்பிக்கை கடவுள் வழிபாடாக இருந்தது. பின்னுல் கூறிய இதுவோ அருவருக்கத் தக்க செல்வம் புகழ் அதிகாரம் ஆகியவற்றின் வழிபாடாக இருக்கிறது. இது தான் இந்த இரண்டு மூடநம்பிக்கைகளுக்கும் உள்ள வேறுபாடு.

215. மக்களிடையே உண்மையான சமத்துவம் என்பது எப்போதுமே இருந்ததில்லை; இனி இருக்கப் போவதும் இல்லை. இங்கு நாம் அனைவரும் சமமானவர்களாக எப்படி இருக்க முடியும்? அப்படிப்பட்ட சாத்தியமே இல்லாத ஒரு சமத்துவம் மரணத்தையே குறிப்பிடுகிறது. ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்கும் இடையில் வேறுபாட்டை எது உண்டாக்குகிறது? இந்த வேறுபாடு பெரும்பாலும் அறிவாற்றல் காரணமாக ஏற்படுகிறது. நாம் யாவரும் ஒரே அளவிலான அறிவாற்றலுடன்தான் பிறந்திருக்கிறோம் என்று தற்காலத்தில் பைத்தியக்காரனைத் தவிர வேறு எவரும் சொல்ல மாட்டார்கள்.

216. வாழ்க்கையில் எனக்கு உள்ள ஒரே பேராவல் இதுதான்: ஒவ்வொருவரின் இருப்பிடத்துக்கும் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டு செல்லக்கூடிய ஓர் இயக்கத்தை ஏற்படுத்தி அதை நடத்தி வைக்க வேண்டும். அதன் பிறகு ஆண்களும் பெண்களும் தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ளட்டும். வாழ்க்கையின் மிக முக்கியமான பிரச்னை குறித்து நம் முன்னோர்களும் மற்ற நாட்டவர்களும் கொண்டிருந்த கருத்துக்களை அவர்கள் தெரிந்து கொள்ளட்டும். குறிப்பாக இப்போது மற்ற நாட்டவர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் பார்த்து அதன் பிறகு அவர்கள் ஒரு முடிவுக்கு வரட்டும்.

இரசாயனப் பொருள்களை ஒன்றுசேர்த்து வைப்பது தான் நமது வேலையாகும். இயற்கையின் நியதியையொட்டி அவை தாமாகவே படிகங்களாக மாறுதலடைந்துவிடும். கடுமையாக உழை. உறுதியாக இரு. பாமர மக்களின் மதத்துக்கு ஊறு விளைவிக்காமல் அவர்

களை முன்னேற்றமடையச் செய்வதே உன் இலட்சியமாக இருக்கட்டும்.

217. மக்கள் உன்னைப் புகழ்ந்தாலும் சரி, இகழ்ந்தாலும் சரி; அதிர்ஷ்ட தேவதை உனக்கு அருள் புரியட்டும், அல்லது புரியாமல் போகட்டும்; உன் உடல் இன்றைக்கே வீழ்ந்து போகட்டும்—நீ மட்டும் உண்மை என்னும் பாதையிலிருந்து அணுவளவேனும் பிறழ்ந்து செல்லாமல் இருப்பதில் கவனமாக இரு.

அமைதியாகிய துறைமுகத்தை ஒருவன் அடைவதற்குள் எத்தனை எத்தனை பெரும் புயல்களையும் அலைகளையும் சமாளித்து வரவேண்டியிருக்கிறது!

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்தவனாகிறானோ அந்த அளவுக்குத் தக்கபடி, அவன் கடுமையான சோதனைகளையும் கடந்து சென்றாக வேண்டும்.

218. கீழ்த்தரமான தந்திரங்களினால் இந்த உலகிலே மகத்தான காரியம் எதையும் சாதித்துவிட முடியாது. இது என் உறுதியான நம்பிக்கை.

219. எவன் ஒருவன் தன்னைக் குறித்து மிதமிஞ்சிய எச்சரிக்கை உள்ளவனாக இருக்கிறானோ, அத்தகையவன் வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆபத்துக்கு ஆளாகிறான். யார் ஒருவன் தனக்கு உள்ள கௌரவமும் மரியாதையும் போய்விடுமோ என்று பயந்தபடி இருக்கிறானோ அத்தகையவன் அவமானத்தைத்தான் அடைகிறான். நஷ்டம் வந்துவிடுமோ என்று எவன் ஒருவன் எப்போதும் பயந்துகொண்டே இருக்கிறானோ அத்தகையவன் எப்போதும் நஷ்டத்தையே அடைகிறான். இவற்றை எனது வாழ்க்கையில் நான் பார்த்திருக்கிறேன்.

220. வாழ்க்கையில் நான் செய்ய வேண்டிய பணி என்ன என்பது எனக்குத் தெரியும். ஒரு குறிப்பிட்ட பிரிவினரிடம் அதிகப் பற்றும், வேறு ஒரு பிரிவினரிடம் தீவிர வெறுப்பும் கொண்டிருப்பது என்பதும் என்னிடம் இல்லை. நான் இந்தியாவிற்கு எந்த அளவுக்குச் சொந்தமானவனோ, அதே அளவுக்கு உலகம் முழுவதற்கும் சொந்தமானவன். படித்த இந்துக்களிடையே நீ காணும் அந்தச் சாதிவெறி பிடித்த, மூடநம்பிக்கை கொண்ட, இரக்கமற்ற, போலித்தனம் மிக்க, நாத்திக மனம் கொண்ட கோழைகளில் ஒருவனாக வாழ்ந்து இறந்து

போவதற்காகப் பிறந்தவன் என்று என்னை நீ நினைக்கிறாய்? கோழைத்தனத்தை நான் வெறுக்கிறேன். கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. கடவுளும் உண்மையும்தான் இந்த உலகிலுள்ள ஒரே அரசியலாகும். மற்றவை எல்லாம் வெறும் குப்பைதான்.

221. ஆன்மிக வாழ்க்கையில் நான் பேரின்பம் பெறுமற் போனால் அதற்காகப் புலனின்ப வாழ்க்கையிலா திருப்தியை நாடுவேன்? எனக்கு அமுதம் கிடைக்காமற் போனால் அதற்காகச் சாக்கடை நீரையா நாடிச் செல்வேன்?

222. நீயே தூய்மை பொருந்தியவன். ஓ மாபெரும் வீரனே! கண்விழித்து எழுந்திரு. இந்த உறக்கம் உனக்குப் பொருந்தாது. விழித்துக்கொள். எழுந்து நில். இந்த உறக்கம் உனக்கு ஏற்றதல்ல. துன்பப்படுபவனாகவும் பலவீனனாகவும் உன்னை நீ நினைக்காதே. எல்லாம் வல்ல ஆற்றல் படைத்தவனே! விழித்தெழுந்து உன் இயல்பை நீ வெளிப்படுத்து. உன்னை நீயே பாவி என்று நினைப்பது உனக்குப் பொருந்தாது. உன்னை நீயே பலவீனன் என்று நீ கருதுவதும் உனக்குப் பொருந்தாது. இந்த உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல். உனக்கும் சொல்லிக்கொள். அப்போது உன் வாழ்க்கையில் ஏற்படும் விளைவை நீ கவனி. மின்னல் வேகத்தில் எப்படி எல்லாம் மாறிவிடுகிறது என்பதைப் பார். பின்பு அந்த உண்மைகளை மனிதகுலத்திற்கு எடுத்துச் சொல். அதன் மூலம் மக்களுக்கு அந்த உண்மைகளின் ஆற்றலை எடுத்துக்காட்டு.

223. உன்னைப் போன்ற மக்களிடம்தான் நான் நம்பிக்கையை வைத்திருக்கிறேன். என் சொற்களின் உண்மையான கருத்தைப் புரிந்துகொண்டு, அந்த ஒளியில் உன்னைச் செயலில் ஈடுபடுத்திக்கொள். உனக்கு நான் போதுமான அளவுக்கு அறிவுரைகளை வழங்கியிருக்கிறேன். இப்போது அதில் சிறிதளவாவது செயலுக்குக் கொண்டுவா. என் அறிவுரைகளைக் கேட்டதன் பயனாக வாழ்க்கையில் நீ வெற்றியைப் பெற்றாய் என்பதை உலகம் புரிந்துகொள்ளட்டும்.

முற்றும்

ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைப் பற்றிச் சில வரிகள் . . .

ஸ்ரீராமகிருஷ்ண மடமும் சங்கமும் என்பது ஒரு துறவியர் இயக்கமாகும். இது சுவாமி விவேகானந்தரால் கல்கத்தா அருகே பேலூர் மடத்தைத் தலைமையகமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. துறவும் தொண்டுமே இதன் தலையாய கொள்கைகள் ஆகும்!

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற அடிப்படைக் கொள்கையுடன் பல துறைகளில் இந்த மடம் பணியாற்றுகிறது. குறிப்பாக சமயம், மருத்துவம், கல்வி, கிராமப்புற முன்னேற்றப் பொதுப் பணிகள், புயல், பஞ்ச நிவாரணப் பணிகள் முதலிய பல துறைகளில் பாரதம் முழுவதும் நடத்தப்படுகிறது. மற்றும் உலகின் மற்ற முக்கிய நாடுகளிலும் தன் கிளைகளை அமைத்துத் தொண்டாற்றி வருகிறது.



ஸ்ரீராமகிருஷ்ண மடம், சென்னை.


சென்னை, ஸ்ரீராமகிருஷ்ண மடமும் அதன் ஒரு முக்கியக் கிளையாகும். இது, குறிப்பாகப் பல துறைகளில் பணியாற்றுகிறது. அது பற்றிய முழு விபரங்களும் இங்கு விரிவாகத் தரப்பட்டுள்ளன.

இந்த அனைத்துப் பணிகளிலும் ஒத்துழைக்க ஆர்வமுள்ள அன்பர்களை மகிழ்வோடு வரவேற்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு நேரிலோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

மடத்தின் பணிகள் பற்றி ஒரு கண்ணோட்டம்

சமயத் தொண்டு



எமது கோயிலின் உட்புறம்

தினசரி வழிபாடு : பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பூஜை காலை 8 மணி முதல் 9 வரை. மாலையில் தீபாராதனையும் கூட்டு வழிபாடும். ஏகாதசி அன்று மாலையில் ஸ்ரீராம நாம சங்கீர்த்தனம் பாடுதல்.

சிறப்பு வழிபாடு	:	ஸ்ரீராமநவமி, சிவராத்திரி, ஸ்ரீகிருஷ்ண ஜன்மாஷ்டமி, நவராத்திரி, காளிபூஜை மற்றும் விசேஷ நாட்களில்.
விழாக்கள்	:	ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீசாரதா தேவி, சுவாமி விவேகானந்தர், சுவாமி ராமகிருஷ்ணனந்தர் மற்றும் மாபெரும் உலக போதகர்களான புத்தர், சங்கரர், ராமானுஜர், சைதன்யர், போன்றவர்களின் பிறந்த நாட்களைச் சிறப்பாக கொண்டாடுதல்.
பயிற்சிகள்	:	மடத்தின் துறவியர்க்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
ஆன்மிக உரையாடல்	:	ஆன்மிக விஷயங்களில் சந்தேகம் உள்ளவர்கள் மடத்தின் தலைவரான ஸ்ரீமத் சுவாமி தபஸ்யானந்தஜி மஹராஜ் அவர்களைச் சந்தித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

பிரச்சாரம்

புத்தக வெளியீட்டுத் துறை	:	தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் ஐநூற்றுக்கும் அதிகமான புத்தகங்களும் மற்றும் முதல் மூன்று மொழிகளில் மாதப் பத்திரிகைகளும் வெளியிடப்படுகிறது.
சமயச் சொற்பொழிவுகள்	:	எல்லா வார நாட்களிலும் மாலை நேரத்தில் மடத்தில் சுவாமிகளால் ஆன்மிகச் சொற்

		பொழிவுகள் நடத்தப்படு கிறது.
ஞாயிற்றுக் கிழமைகளில்	:	ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை களிலும் மாலை நேரத்தில் சத் சங்கங்கள் கூட்டு வழிபாடுகள் நடத்துதல்.
		சஹஸ்ரநாம மந்திரங்களை ஜபித்தல், தியானம் செய்தல், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், சுவாமிகள் மற்றும் பல அறிஞர் களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் நடத்துதல் ஆகியவை இந்தச் செயல் முறையில் அடங்கும்.
சொற்பொழிவுகள்:		சென்னையிலும் மாநிலத்தின் பிற பகுதிகளிலும் நடத்தப் படும் சமய விழாக்களிலும் மற் றும் சமயக் கூட்டங்களிலும் சுவாமிகள் பங்கேற்றல்.
		அன்பர்களின் சங்கமான ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா சங்கம்; இதன் மூலமாக விழாக்கள், கூட்டங்கள், ஏழைகளுக்கு உணவளித்தல் போன்ற பணி களை நகரத்தின் பல பகுதி களில் வேண்டிய காலங்களில் மடம் செய்கிறது.

மருத்துவம்



எமது மருத்துவமனையின் ஒரு பகுதி

இலவச மருத்துவமனை	:	அலோபதி, பல் மருத்துவம், காது மூக்கு தொண்டை பகுதி, கண் மருத்துவப் பகுதி, எக்ஸ்-ரே பிரிவு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தனிப் பிரிவு, அறுவைச் சிகிச்சை மற்றும் ஓமியோபதி மருத்துவ முறைப் பிரிவுகள், காசநோய் நீரிழிவு நோய், இருதய நோய் பிரிவுகள், யோக சிகிச்சை, உடல்கூறு இயல் மருந்தகம் மற்றும் பரிசோதனைக்கூடம் ஆகியவற்றைக் கொண்டது.
நடமாடும் மருத்துவமனை	:	ஓரிரு டாக்டர்கள் அடங்கிய குழுக்களுடன் தேவையான கருவிகளையும் மருந்துகளையும் உள்ளடக்கிய வேன் ஒன்று வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள

130 கிராமங்களில் வாழும் 1,50,000 மக்களுக்குச் சேவை புரிகிறது.

கல்வித்துறை

நூல் நிலையம் : ஸ்ரீராமகிருஷ்ண நூற்றுண்டு விழா நினைவு நூலகத்தில் 20,998 புத்தகங்களையும் 7,472 புத்தகங்களை சுற்றுக்கு விடப்பட்டும் 454 பத்திரிகைகள் மற்றும் வெளியீடுகளையும் 12 தினசரிகளையும் கொண்டு சிறந்த நூலகமாகச் செயல்படுகிறது. தினசரி சராசரியாக 45 நபர்கள் இதன் மூலம் பயன் அடைகிறுர்கள்.

பள்ளிகள் : ஸ்ரீராமகிருஷ்ண மடம் தேசீய (ஆரம்ப) பள்ளி, ஜார்ஜ் டவுன்- மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 837.

விவேகானந்தர் நூற்றுண்டு விழா பெண்கள் உயர்நிலைப் பள்ளி, ஜார்ஜ் டவுன் - எண்ணிக்கை 809.

மேலே குறிப்பிட்ட இந்த இரண்டு பள்ளிகளும் குடிசை வாழ் மற்றும் ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளுக்குக் கல்வி வழங்கி வருகிறது.

மேற் கூறிய அனைத்துப் பணிகளும் அன்பர்களின் நன்கொடைகள் மூலமே செய்யப்பட்டு வருகிறது. பொதுத் தொண்டில் ஆர்வமுள்ள அன்பர்கள் இந்த நற்பணிக்கு தங்களால் இயன்ற நன்கொடை வழங்கி பெரும் பயனடைய அன்புடன் அழைக்கிறோம்.

அப்படிப் பெறப்படுகிற அனைத்து நன்கொடைகளுக்கும் (வருமான வரிச் சட்டம் 80ஜி பிரிவின்படி) வருமான வரி விலக்கு உண்டு என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது மாதப் பத்திரிகைகள்

1. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் (தமிழ்)

தனிப் பிரதி :	ரூ.	1-75
ஆண்டுச் சந்தா :	ரூ.	19-00
ஆயுள் சந்தா :	ரூ.	200-00

2. வேதாந்த கேசரி (ஆங்கிலம்)

தனிப் பிரதி :	ரூ.	2-00
ஆண்டுச் சந்தா :	ரூ.	20-00
ஆயுள் சந்தா :	ரூ.	200-00

3. ஸ்ரீராமகிருஷ்ண பிரபா (தெலுங்கு)

தனிப் பிரதி :	ரூ.	1-70
ஆண்டுச் சந்தா :	ரூ.	18-00
ஆயுள் சந்தா :	ரூ.	200-00